
குடும்ப நாவல்
முத்துலட்சுமி ராகவன்
ரூ.20
பூவொன்றைக் கண்டேன்...
- பெரிய்ய்ய்...ய நாவல்

# குடும்ப நாவல்

சிறப்பு வெளியீடு - 4


– உள்ளே...

# பூவொன்றைக் கண்டேன்...!

– முழு நாவல்

## முத்துலட்சுமி ராகவன்

# 1

திரையில் சினிமா ஓடிக்கொண்டிருந்தது... பார்வையாளர்களிடம் மெல்லிய முணுமுணுப்புக்கூட இல்லை... திரையில் படம் ஓடுவதால் வரும் மெல்லிய வெளிச்சம் அவர்களைச் சூழ்ந்திருக்க... அவர்கள் அசைவின்றி திரையில் கண்களைப் பதித்திருந்தனர்... ஏதோ ஒரு மந்திர சக்தியால் கட்டுண்டவர்கள் போல்... அமர்ந்திருந்தவர்களின் மத்தியிலே சரயு கன்னத்திலே கை வைத்து... திரைப்படத்தில் ஆழ்ந்திருந்தாள்...

அது ஒரு பீரியட் படம்... சுதந்திரப் போராட்ட காலத்தில் நடந்த சம்பவங்களை சித்திரிக்கும் படம்.. தீவிரவாதிகள்... மிதவாதிகள் என்று பிரிந்து போராடிக் கொண்டிருந்த காலகட்டத்தை விவரிக்கும் திரைப்படம்... கொஞ்சம் கூட அஞ்சாமல்... வெள்ளையர்களின் உயர் அதிகாரி ஆஷ் துரையை... நேருக்கு நேர் சந்தித்து... நெஞ்சினில் துப்பாக்கிக் குண்டுகளைப் பாய்ச்சிக் கொன்றானே வாஞ்சிநாதன்... அவனுடைய வழியை பின்பற்றும் புரட்சிப் போராளியாய் வரும் கதாநாயகன்... அவனுடைய வாழ்வில் குறுக்கிடும் மெல்லிய காதல்... காதலைத் துறந்து... நாட்டைக் காக்கும் கடமையில் தன்னைப் பிணைத்துக் கொள்கிறான் அவன்... சுதந்திரம் பெற்ற இந்தியாவிற்கு... அவன் திரும்பி வந்து... சுதந்திர இந்தியாவில் தன் காலடியை வைக்கிறபோது... கையில் குழந்தையோடு அவனுக்காக கரையில் காத்திருக்கிறாள் அவனுடைய காதலி...

"எனக்காகவா காத்திருக்கிறாய்...?"

"பின்... வேறு யாருக்காக நான் காத்திருப்பேன்...?"

"குழந்தை...?"

"நம் காதலின் அடையாளம்... நீங்கள் எனக்குத் தந்த காதல் பரிசு..."

"நான் உனக்கென்று வாழாதவன்..."

"ஆனால்... நான் உங்களுக்காக வாழ்ந்தவள்..."

"நான் கடமைக்காக காதலைப் புறக்கணித்தவன்..."

"அதைப் புறக்கணிப்பு என்று சொல்லாதீர்கள்... நீங்கள் என்னைப் புறக்கணித்திருந்தால் என் கையில் நம் குழந்தை இருந்திருப்பானா? உங்கள் நினைவுகளில் நாட்டிற்கு முதலிடம் கொடுத்தீர்கள்... அது புறக்கணிப்பு என்று ஆகிவிடுமா...?"

"உன்னைத் துறந்து பர்மாவிற்கு ஓடிப் போனேனே... அதை மன்னித்து விட்டாயா...?"

"என்னைத் துறந்துதானே போனீர்கள்... மறந்து போகவில்லையே... உங்கள் மூச்சுக் காற்றில் நான் கலந்திருப்பதை அறிவேன்... உங்கள் உடலில் உயிர் இருக்கும் வரை... ஏன்... அதற்குப் பின்னாலும் கூட நீங்கள் என்னை மறக்க மாட்டீர்கள்... எனக்கு அது மிக நன்றாகத் தெரியும்... பர்மாவிற்கு உல்லாசப் பயணமாகவா சென்றிருந்தீர்கள்...? உயிர் தப்பிக்க... மறைந்து ஓடினீர்கள்... அந்த உயிரையும் போராட்டத்தில் நாட்டிற்காக அர்ப்பணிப்பதற்காக வேண்டும் என்பதற்காகத்தானே காப்பாற்றிக் கொள்ள ஓடினீர்கள்...? இதில் உங்களின் தவறு என்ன இருக்கிறது...?"

"நீ என் பக்கம் நின்று எனக்காக... என்னிடமே வாதாடுகிறாய்..."

"நீங்கள் வேறு... நான் வேறா..."

அவன் கைகளை விரிக்கிறான்... அவள் தோளில் சாய்த்த அவனது குழந்தையோடு... அவனது கைகளுக்குள் புகுந்து கொள்கிறாள்... அவளது உச்சியில் முகம் புதைத்து...

மெல்ல கேமரா அவர்களை விட்டு மெதுவாக விலகி பின்னால் நகர்கிறது... நீலக் கடலின் பின்னணியில்... கரையோரப் படகுகளின் அணிவகுப்பின் அருகே... நன்றாக இணைந்து நிற்பவர்களை... சிறு புள்ளியாக காண்பித்து படம் முடிய... அனைவரும்... கலைய மனமில்லாமல் இருக்கைகளை விட்டு எழுந்து கொள்கின்றனர்... அரங்கில் பளீரிடும் விளக்கின் ஒளியில் படத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே தியேட்டரை விட்டு வெளியே விரைய... சரயு மட்டும் எழுந்து கொள்ள மனமில்லாமல் அப்படியே கன்னத்தில் கை வைத்து அமர்ந்திருந்தாள்...

"சரயூ... ஏய் சரயூ..."

அவளருகில் அமர்ந்திருந்த அபர்ணா அவளின் தோளைப் பற்றி உலுக்கினாள்... கனவிலிருந்து விழிப்பவள் போல்... விழித்த சரயு... சுற்று முற்றும் பார்த்துவிட்டு அவசரமாய் எழுந்தாள்...

"என்னடி... விழித்துக் கொண்டே தூங்குகிறாயா...? இதற்குத்தான் இந்தப் படத்தைப் பார்த்தே தீரவேண்டும்ன்னு என்னை ஒருவாரமாய் நச்சரித்து கூப்பிட்டுக் கொண்டு வந்தாயா...?"

"விழித்துக்கொண்டு தூங்குகிறேனா...? அதுவும் இந்தப் படத்தைப் பார்க்கும் போதா...? போடி... நீ வேற... நான் அப்படியே பிரமிச்சுப் போய் உட்கார்ந்து விட்டேனாக்கும்..."

"என்னமோ போ... நீ தான் இந்தப் படத்தை மெச்சிக்கணும்... ஒரு காமெடி உண்டா... குத்துப்பாட்டு உண்டா... ம்ஹும்... நீதான் கண்ணை கொட்டக் கொட்ட விழித்துக்கிட்டு படம் பார்த்தே... எனக்கு இன்ட்ரெஸ்ட் இல்லை..."

"நான் மட்டும் ரசித்துப் பார்க்கவில்லை அபர்ணா... இந்தத் தியேட்டரில் இருந்த எல்லாரும் அப்படித்தான் பார்த்தார்கள்... அதையும்... நீ பார்த்திருப்பாயே..."

அவர்கள் பேசிக்கொண்டே... தியேட்டர் வாசலுக்கு வந்தார்கள்...

"இருடி... நான் வண்டியை எடுத்துக்கொண்டு வருகிறேன்..."

அபர்ணா... இருசக்கர வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்த பகுதிக்குள் போய்விட... சரயூ... தியேட்டரின் முகப்பிலிருந்த திரைப்படத்தின் சுவரொட்டி விளம்பரத்தைக் கவனித்தாள்... இயக்குநர் 'இந்திரஜித்...' என்ற எழுத்துக்களை ஊன்றிப் பார்த்தாள்.

"இவ்வளவு நேரமும் படம் பார்த்தது போதாதா... விளம் பரத்தையும் விழுந்து... விழுந்து... பார்க்கணுமா...?"

அபர்ணா... தன் இருசக்கர வாகனத்தை சரயுவின் அருகினில் நிறுத்தி... காலை ஊன்றிக் கொண்டு கேட்டாள்...

"இல்லை... டைரக்டர் பெயரைப் படித்தேன்..."

"அடேங்கப்பா... அதைப் படிக்கல்லைன்னா உனக்கு அந்த டைரக்டரின் பெயர் தெரியாமல் போய் விடுமாக்கும்... அதுதான் மூச்சுக்கு முந்நூறு தடவை... 'இந்திரஜித்... இந்திரஜித்...'துன்னு ஜெபிக்கிறாயே... அப்புறமும் ஏன் போஸ்டரைப் பார்க்கிற...?"

"நீ முதலில் ரோட்டைப் பார்த்து வண்டியை ஓட்டு..."

"நீ பயப்படாமல் பின்னால் உட்காரு... நான் இந்த மூணாறில் பிறந்து வளர்ந்தவள்... கண்ணை மூடிக்கொண்டு கூட கரெக்டா வண்டியை ஓட்டுவேன்..."

"அடிப்பாவி... நீ வண்டியோட்டி வித்தை காண்பிக்க நான்தான் கிடைத்தேனா...? உன்னை நம்பி... உன் பின்னால் வந்துவிட்டேண்டி அபர்ணா... என்னைக் கைவிட்டு விடாதே..."

"அடச்சீ... பிரண்ட்கிட்ட பேசுகிற லட்சணமாடி இது... இப்ப நாம் பார்த்து விட்டு வருகிற சினிமாவில் கூட ஹீரோயின்... ஹீரோவைப் பார்த்து இப்படி வசனங்களைப் பேசவில்லை... நீ... என்னிடம் பேசுகிறாய்..."

அபர்ணா தோழியைக் கடிந்து கொண்டே... மிக லாவகமாய் மூணாறின் சாலையில் வண்டியை ஓட்டினாள்... நகரைவிட்டு வெளியே வந்த வண்டி... மூணாறின் சரிவான மலைப் பாதையில் பயணிக்கத் தொடங்கியது...

ஒரு பக்கம் பாத்தி கட்டியது போல் சீராக வரிசை கட்டியிருக்கும் தேயிலைச் செடிகள்... மறுபுறம் மலையின் அடர்ந்த காடு... பச்சைப் பசேலென்று கண்ணுக்கு குளிர்ச்சியாய்... பார்க்கும் இடங்களில் எல்லாம் மலையன்னையின் செழிப்பு தெரிந்தது...

மலைப் பிரதேசத்துக்கே உரிய குளிர் உடலைத் துளைக்க... சரயு தான் அணிந்திருந்த ஸ்வெட்டரை சரிசெய்து கொண்டாள்...

"ஏய்... ஆடாமல் பின்னால் உட்காரத் தெரியாதா...?"

"ஏண்டி... நானென்ன பரத நாட்டியமா ஆடினேன்...?"

"நீ பரத நாட்டியமெல்லாம் ஆடவேண்டியதில்லை... இன்னும் இரண்டு தடவை இப்படிப் பண்ணினேன்னு வை... என் வண்டி தான் பேலன்ஸ் தப்பி... பரதநாட்டியம் ஆடிக்கிட்டே... மலைச்சரிவில் உருளும்... பரவாயில்லையா...?"

"உன் பின்னால் நம்பி உட்கார்ந்தேன் பார்... என் புத்தியைச் சொல்ல வேண்டும்..."

"உனக்கு டிரைவர் வேலை பார்க்கிறேன் பார்... நீ இதுவும் பேசுவாய்... இன்னமும் பேசுவாய்..."

வண்டி பிரதான சாலையிலிருந்து வளைந்து... அருவிக் காடு செல்லும் பாதையில் திரும்பியது...

"அபர்ணா... ப்ளீஸ்... ஒரு நிமிடம் வண்டியை நிறுத்தேன்.."

"பேசாமல் வா... இல்லாவிட்டால் வண்டியை ஏரிக்குள் விட்டுவிடுவேன்..."

"வண்டியை நிறுத்துகிறாயா... இல்லை நான் குதித்து விடவா...?"

"நீ ஒரு முடிவோடுதான் என் வண்டியில் ஏறியிருக்கிறாயா...?"

அபர்ணா அலுத்துக்கொண்டே வண்டியை நிறுத்தினாள்... சரயு குதித்து இறங்கி... பிரதான சாலையைக் கடந்து... கைகளை குவித்து வாயின் மேல் வைத்து...

"இந்திரஜித்... படம் பிரமாதம்..." என்று கூவினாள்...

அவள் கூவிய வார்த்தைகள் எதிரொலித்தன... குதூகலத்துடன் ஓடிவந்து வண்டியில் ஏறிக் கொண்டவளைப் பார்த்த அபர்ணா...

"உன்னைப் பார்த்தால் ஸ்கூல் டீச்சர் போலவா இருக்கிறது? ஸ்கூல் ஸ்டுடன்ட் போல... இருக்கிறது..." என்றாள்.

"இந்த எக்கோவைக் கேட்டால்... எனக்கு ஒரு சந்தோசம்..."

"எதிரொலியில் உன் மனதுக்குப் பிடித்த டைரக்டரிடம் பேசுவதற்குப் பதில்...நேரேயே பேசி விட வேண்டியதுதானே..."

"எப்படி...? மூணாறிலிருந்து... சென்னைக்குப் போய் பேசிவிட்டு வரச் சொல்கிறாயா...? நோ சான்ஸ்... அருவிக் காட்டிலிருந்து மூணாறு டவுனுக்குப் போய் உன்னுடன் சேர்ந்து சினிமா பார்க்க ஒரு வாரமாய் கெஞ்சி... இன்றைக்குத்தான் அம்மாவிடம் பெர்மிசன் வாங்கினேன்... நானாவது... சென்னைக்குப் போய்... ஒரு சினிமா டைரக்டரை மீட் பண்ணி விட்டு வருவதாவது... நடக்கிறதைப் பேசுடி..."

"உன்னை யார் சென்னைக்குப் போய் பேசச் சொன்னது...? போனில் பேசு... நான் நம்பரைப் பிடித்துத் தருகிறேன்..."

"வேண்டாம் அபர்ணா... அவர் யாரென்று எனக்குத் தெரியும்.. நான் யாரென்று அவருக்குத் தெரியாதே..."

"அறிமுகப்படுத்திக் கொள்ளேன்.."

"உஹும்... அது எனக்கு சங்கடமாக இருக்கும்..."

"அப்போ... லெட்டர் போடு..."

"அப்படிச் செய்யவா...?"

"அதையாவது செய்... உனக்கும் புண்ணியமாகப் போகும்...

"தினமும்... நீ அவர் பெயரைச் சொல்லிக் கத்துவதை வேடிக்கை பார்த்து எனக்கு அலுத்துவிட்டது..."

"நீ அட்ரஸைச் சொல்லு..."

அருவிக் காட்டில் வண்டி திரும்பி... சரயுவின் வீட்டு வாசலில் நின்றது... சரயுவின் அம்மா பார்வதி வாசலில் நின்று கொண்டிருந்தாள்....

"ஏன் சரயு லேட்...? அபர்ணா... உள்ளே வா... ஒரு கப் காப்பி குடித்துவிட்டுப் போகலாம்..."

"தேங்க்யு ஆண்ட்டி... ஆல்ரெடி... எனக்கும் லேட்டாகி விட்டது... இன்னொரு நாள் காபி கொடுங்க குடிக்கிறேன்..."

அன்று இரவு... மேஜை விளக்கின் ஒளியில்... இரவின் நிசப்தத்தில்... வீட்டில் அனைவரும் தூங்கிய பின்பு... சரயு... பேனாவை எடுத்து... இந்திரஜித்திற்கு கடிதம் எழுத ஆரம்பித்தாள்...

## 2

"ஆக்சன்..." என்று குரல் கொடுத்து விட்டு... கேமராவின் பின்னால் ஒதுங்கி நின்று கவனித்தான் இந்திரஜித்.

ஹீரோ... மெதுவாக நடந்து வந்து... ஹீரோயின் அருகே நின்று ஒரு பார்வை பார்த்தான்... பின் ஒரு பெருமூச்சுடன்... வானத்தைப் பார்த்தான்...

"கட்... கட்..." என்று இந்திரஜித் கத்தினான்.

ஹீரோ கேள்வியுடன் பார்க்க... அவர்களுக்கு அருகில் போனான் இந்திரஜித்.

"மகேஷ்... நீங்கள் நடந்து வரும்போது இன்னும் கொஞ்சம் ஸ்டைல் வேண்டும்... முடிந்தால்... பேன்ட் பாக்கெட்டில் கை விட்டுக்கங்க... இட்ஸ் பெட்டர்..."

"ஓ.கே. சார்..."

"ஏன் வானத்தைப் பார்த்தீங்க..."

"என் பீலிங்கை உணர்த்த..."

"வானத்தைப் பார்த்தால் விரக்திதான் வெளிப்படும்... பீலிங்ஸ் வெளிப்படாது...அதை அவாய்ட் பண்ணிவிட்டு... ஹீரோயினின் கண்களுக்குள் உற்றுப்பாருங்க... இட்ஸ் குட்..."

"ஓ.கே. சார்..."

"நீனா... நீங்க ஹீரோவை வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நிற்பது போல இருக்கிறது... அவர் உங்களிடம் காதல் சொல்ல வருகிறார்... உங்கள் மனதிலும் காதல் இருக்கிறது... ஆனால் குடும்ப நிலைமை... உங்களால் வாய்விட்டு காதலைச் சொல்லி... அவருடைய காதலை ஏற்றுக்கொள்ள முடியவில்லை... அந்த நிலையில் நீங்க... அவரை எப்படிப் பார்ப்பீங்களோ... அப்படிப் பாருங்க... ஓ.கே...?"

"ஓ.கே. சார்..."

"ஷாட் ரெடி... லைட்ஸ் ஆன்... கேமரா... ஆக்சன்..."

இந்திரஜித் மும்முரமாக படப்பிடிப்பில் ஆழ்ந்தான்... அன்று இரவு... "பேக்... அப்..." என்று சொல்லி படப்பிடிப்பை முடித்து விட்டு... காரில் ஏறிக் கொண்டபோது... அவனுடைய உடலும் மனமும் களைத்திருந்தன...

வீட்டிற்குச் சென்று... குளித்து... உடைமாற்றி... படுக்கையில் விழுந்தபோது... 'அப்பாடா...' என்றிருந்தது... ஓய்வாக டிவியை போட்டு விட்டு... கட்டிலின் அருகேயிருந்த டீப்பாயின் மேலிருந்த கடிதங்களை எடுத்துப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான்... அந்த ரோஜா வண்ணக் கவரை எடுக்கும் போதே... கவரின் மேலிருந்து வந்த நறுமணத்தில் கவரப் பட்டான்... கவரை உடைத்துப் படிக்க ஆரம்பித்தான்...

'ஜித்தன்' என்றாலே மகா வல்லமை படைத்தவன் என்று அர்த்தம். நீங்களோ இந்திரஜித்... உங்கள் வல்லமை என்ன குறைந்தா இருக்கப் போகிறது...?

தங்களின் சமீபத்திய படைப்பான 'போராட்ட காலத்திலே' சினிமாவை

பார்த்தேன்... சுதந்திரப் போராட்டத்தின் அனைத்து ... அலசி ஆராய்ந்திருந்தீர்கள்... ஒரு போராளியின் மனதில் துளிர்க்கும் காதல்... எப்படி... பாலைவனத்தின் சுடுமணலில் பயணிக்கும்போது... வெம்மை போக்கும் பாலைவனச் சோலையாக அவனைத் தாலாட்டுகிறது என்பதை மிகவும் அற்புதமாக உணர்த்தியிருந்தீர்கள்...

காதலியைத் துறந்து அவன் பர்மாவிற்கு தப்பிச் சென்று விடுகிறான்... காதலின் அடையாளமாய் வயிற்றில் சிசுவைத் தாங்கிய அந்தப் பெண்... சமூகத்தில் நிறைய மன வலிகளைச் சந்திக்கிறாள்... கையில் குழந்தையோடு... கைவிட்டுப் போன காதலனை... மீண்டும் அவள் சந்திக்கும்போது.. அவள் 'துரோகி...' என்று காதலனை தூற்றியிருக்க வேண்டும்... அவளோ... 'தியாகி...' என்று போற்றுகிறாள்...

இது நான் எதிர்பார்க்காத ஒரு கோணம்... உண்மையான காதல் என்பது... இப்படித்தான் இருக்கும்... இருக்க வேண்டும் என்று நீங்கள் அழுத்தமாக பதிவு பண்ணியிருக்கிறீர்கள்... அருமை...

இந்திரஜித் அந்தக் கடிதத்தின் வரிகளைத் திரும்பத் திரும்ப... பலமுறை படித்தான்... அவனது உடலில் இருந்த அலுப்பும்... களைப்பும் பறந்தோடி விட்டன... மனதிற்குள் புத்துணர்வு பிறந்தது...

ஒரு படைப்பாளிக்கு... பாராட்டுதல் என்பது மிகவும் தேவைப்படும் ஒன்று... பாராட்டுதலே அவனுக்கு பலத்தைத் தரும்... படிகளில் ஏறும் மனவலிமையை கொடுக்கும்... வெற்றிச் சிகரத்தை தொட்டு விடும் துணிவை அளிக்கும்...

அந்தக் கடிதம்... அவனுக்கு அனைத்தையும் அளித்தது... அனுப்பியது யாரென்று... முகவரியைப் பார்த்தான்... 'சரயு' என்று பெயர்... கொடுக்கப்பட்டு... மூணாறில் இருந்த ஒரு பள்ளியின் விலாசம் எழுதப்பட்டிருந்தது...

'ம்ம்... ஸ்கூல் டீச்சரா...'

அவன் மனதில் கையில் பிரம்போடு நிற்கும் ஒரு உருவம் தோன்றியது...

'ஊஹூம்... இவ்வளவு ஆழமாக ரசித்து... சிந்தித்து... என் படத்தைப் பார்ப்பவள்... இப்படி இருக்க மாட்டாள்...'

அவன் அவசரமாய்... மனத்திரையில் தோன்றிய கடுமையான உருவத்தை அழித்தான்...

'அவள் எப்படியிருந்தாலென்ன... என் ரசிகை... அவ்வளவு தான்...'

அவன் உடனே தன் லெட்டர் பேடை எடுத்து பதில் எழுதினான்... மறுநாள் காலையில் அந்தக் கவரை மூணாறுக்கு அனுப்பிவிட்டுத்தான் அவன் படப்பிடிப்பு நடக்கும் இடத்திற்குப் போனான்...

மதிய உணவு இடைவேளையில்... சாப்பாட்டு அறையை நோக்கி அபர்ணாவும்... சரயுவும்... நடந்து கொண்டிருந்தார்கள்...

"ஏன்தான்... இந்த டீச்சர் உத்தியோகத்திற்கு வந்தோமோ... கத்திக்கத்தி... தொண்டைத்தண்ணி வற்றிவிட்டது..." அபர்ணா அலுத்துக் கொண்டாள்...

"அதை நீ மட்டும் தனியாகச் சொல்லு... அதை விட்டுவிட்டு என்னையும் ஏன்... உன்னுடன் கூட்டுச் சேர்த்துக் கொள்கிறாய்..." சரயு அவளைக் கடிந்து கொண்டாள்...

"உனக்கு மட்டும் தொண்டை வரளவில்லையா...?"

"ஊஹும்... குழந்தைகளுடன் பேசிப் பழக கொடுத்து வைத்திருக்க வேண்டும்..."

அபர்ணா தோழியை விசித்திரமாக பார்த்தாள்....

"நீ மியூசியத்தில் வைக்கப்பட வேண்டிய பிறவிடி..."

சரயு... வாய்விட்டு... அதை ரசித்துச் சிரித்த போது... பியூன் பரமசிவம் எதிரே வந்தான்...

"சரயு டீச்சர்... உங்களுக்கு லெட்டர் வந்திருக்கிறது..."

"எனக்கா... எனக்கு யார்... ஸ்கூல் அட்ரஸிற்கு கடிதம் போடப் போகிறாங்க...?"

ஆச்சரியத்துடன் கவரை வாங்கி... அனுப்பியவர்களின் முகவரியைப் பார்த்து சரயு... ஆச்சரியத்தில் வாய் பிளந்தாள்..

"அபர்ணா... இதைப் பாரேன்... என்னால் நம்பவே முடியலைடி..."

"என்னடி... என்ன ஆச்சு...?"

"இந்திரஜித் எனக்குப் பதில் போட்டிருக்கிறார்..."

"டைரக்டர் இந்திரஜித்தா...?"

"ஆமாம்... உன் கையை நீட்டு..."

"எதற்கு...?"

அபர்ணா புரியாமல் கை நீட்ட... அதில் சரயூ அழுத்தமாக கிள்ளினாள்... அவள் வலி தாங்காமல் கையை இழுத்துக் கொண்டாள்.

"ஸ்... ஆ... வலிக்கிறதே... பிசாசே... ஏண்டி... என் கையைப் பிடித்து கிள்ளின...?"

"உனக்கு வலிக்கிறதா...?"

"பின்னே... அரைக்கிலோ கறியை உன் நகத்தில் பிய்த்து எடுத்து விட்டாயே... வலிக்காதா...?"

"ஸாரி... ஸாரி... இது கனவா.. இல்லை நனவான்னு திகைப்பு வந்து விட்டது... அதனால்தான்... உன் கையைப் பிடித்துக் கிள்ளி டெஸ்ட் பண்ணினேன்..."

"அதற்கு என் கைதான் கிடைத்ததா...? உன் கையை பத்திரமாய் ஒளித்து வைத்துக்கொண்டு... ஊரான் வீட்டுப் பெண்ணின் கையை பதம் பார்க்கிறாயே... நீ உண்மையிலேயே... கெட்டிக்காரிதான்... பிழைத்துக் கொள்வாய்..."

அபர்ணா பேசுவதைக் கவனிக்காமல்... அங்கிருந்த மரத்தடியில் அமர்ந்து கடிதத்தைப் படிக்க ஆரம்பித்துவிட்டாள் சரயூ...

'தங்களின் பாராட்டு கிடைத்தது... நன்றி... முகம் தெரியாத உங்களைப் போன்றவர்களின் பாராட்டுத்தான் என்னை ஏணியில் ஏற்றிவிடும் உந்துசக்தி...

சுதந்திர இந்தியாவில் வாழும் நமக்கு... சுதந்திர போராட்டங்களின் வரலாறு பற்றித் தெரியாது... தெரிந்து கொள்ளவும் நாம் ஆர்வம் காட்டுவதில்லை... சிறுவயதிலிருந்தே... ஜான்ஸிராணியைப் பற்றியும்... பகத்சிங்கைப் பற்றியும் படிக்கும் போதே எனக்கு உடல் புல்லரிக்கும்... எனக்குப் பிடித்த ஹீரோ இன்று வரை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்தான்... என்னை இன்று வரை பாதித்த... பாதித்துக் கொண்டிருக்கும் சம்பவம்... ஜாலியன் வாலாபாக் படுகொலைதான்...

அந்தப் போராட்ட காலத்தை நினைவுபடுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் இந்தப் படத்தை எடுத்தேன்... இதற்காக நான் நிறைய சிரமப்பட வேண்டியிருந்தது... உங்களுடைய கடிதத்தைக் கண்டதும்... பட்ட சிரமத்திற்கு பலன் கிடைத்து விட்டதாக உணர்ந்தேன்...

நன்றி...'

தீவிரமான முகபாவனையுடன் கடிதத்தை ஆழ்ந்து படித்துக் கொண்டிருப்பவளை... சற்றுத்தள்ளி அமர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள் அபர்ணா... கடிதத்தை படித்து முடித்துவிட்டு தலை நிமிர்ந்த சரயுவின் விழிகள் கலங்கியிருந்தன...

"என்னடி... ஏன் அழுகிறாய்...? ஏம்மா என் நேரத்தை கடிதம் எழுதி வேஸ்ட் பண்ண வைக்கிறன்னு தாளித்திருக்கிறாரா... அந்த இந்திரஜித்...?"

"போடி... நீயும்... உன் நினைப்பும்... அதெல்லாம் அவர் ஒன்றும் திட்டி எழுதவில்லை... நன்றி சொல்லி எழுதியிருக்கிறார்..."

"அதற்குப் போய்... நீ ஏன்டி கண் கலங்கின..."

"ம்ம்... அதுவா...? எவ்வளவு பெரிய டைரக்டர் அவர்... என் கடிதத்தை மதித்து... எனக்குப் பதில் போட்டிருக்கிறாரே..."

"அதைச் சொல்லு... அது நல்ல குணம்தான்..."

"சுதந்திர போராட்டத்தைப் பற்றி நிறைய எழுதியிருக்கிறார் அபர்ணா... அதைப் படிக்கும் போது... எனக்கே என்னைப் பற்றி குறைவாக நினைக்கத் தோன்றுகிறது..."

"ஏண்டி...?"

"அவரளவு நான் யோசிக்கவில்லையே..."

"தேவையாடி உனக்கு...? ஏற்கனெவே நீ யோசிக்கிற யோசிப்பில் உன் மூளையில் ஓட்டை விழுந்து விடும் போல இருக்கிறது. இதற்கு மேல் யோசிச்ச... பள்ளமே விழுந்துவிடும்... எழுந்திரு... போகலாம்..."

"எங்கே போவது...?"

"அடிப்பாவி... சாப்பிடப் போனவள்... லெட்டரைக் கண்டதும் அப்படியே உட்கார்ந்து விட்டாய்... போனால் போகுதுன்னு கூடத்

துணைக்கு உட்கார்ந்தால்... எங்கே போகிறதுன்னா கேட்கிறா
எல்லாம் என் நேரம்டி... வாவா... பசியில் சிறு குடலை... பெருங்கு
தின்னுது..."

அவர்கள் இருவரும் பேசிக்கொண்டே சாப்பிடச் சென்றார்க

## 3

அந்த வார இறுதியில்... இந்திரஜித்திற்கு... சரயுவிடமிருந்து பதி போனது... ஆவலுடன் அந்த ரோஜா வண்ணக் கவரைப் பிரிக்கு போதே... ஏன் தன் மனம் இப்படி ஒரு எதிர்பார்ப்பில் சிக்கி தவிக்கிறது...? என்று தனக்குத்தானே... கேள்வி கேட்டுக் கொண்டா இந்திரஜித்...

'தங்களின் பதில் கிடைத்தது... நன்றி சொல்ல வேண்டியவ நான்தான்... ஆனால்... எனக்குப் பதில்... நீங்கள் நன் சொல்லியிருக்கிறீர்கள்... இதுதான் உங்களின் குண இயல்பா...? இந் இயல்பு என்னை வசீகரிக்கிறது...

இதுவரை தங்களின் படைப்புக்களை மட்டுமே நான் தேடிப் பிடித்து பார்த்து வந்தேன்... இப்போதோ... ஜான்ஸிராணியின் வரலாற்றையும்... பகத்சிங்கின் வரலாற்றையும்... நூலகங்களில் தேடிப்பிடித்து படிக்க ஆரம்பித்திருக்கிறேன்... என் பள்ளியில்... நான் எடுக்கும் வகுப்புகளில் மறக்காமல்... தினமும் ஒரு சுதந்திர போராட்ட சம்பவங்களை... கதைபோல் சொல்லி வருகிறேன்...

நன்றி... எனக்குள் இந்த மாற்றத்தை ஏற்படுத்தியதற்கு...'

இந்திரஜித்தின் மனதில் தென்றல் அடித்தது... முதன் முதலாய் ஒரு பெண்... அவனைப் பார்த்துத் தான் வசீகரிக்கப்படுவதாக எழுதியிருக்கிறாள்... அவனுடைய புகழ்... அந்தஸ்து இவற்றினால் அவள் வசீகரிக்கப் படவில்லையாம்... அவனின் குண இயல்பு அவளை வசீகரித்திருக்கிறதாம்...

இந்திரஜித் பெண்களை அறியாதவன் அல்லன்... அவனது சூழலில் அது சாத்தியமானதும் அல்ல...

ஆனால்... இப்படியொரு முகமறியாத பெண்ணின் மயிலிறகு மனதைத் தடவுவது போன்ற கடித வரிகளைப் படிப்பது அவனுக்குப் புதிது...

பெண்கள் இல்லாத உலகத்தில் அவன் இல்லை... திரைப்படத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் பெண்களின் பங்களிப்பு மிக முக்கியமானது... அவர்களிடம் இயல்பாக தொட்டுப் பழகி வேலை பார்க்க வேண்டிய திரைப்பட இயக்குநர் அவன்...

அப்போதெல்லாம் அவன் மனதில் தோன்றாத ஓர் உணர்வு இப்போது தோன்றியது... கையிலிருந்த கடித வரிகளில் ஏதோ மந்திரசக்தி இருப்பதைப் போல அவன் உணர்ந்தான்...

அவன் சொல்லிய ஒரு வார்த்தைக்காக... அவள் தனது தினப்படி அலுவல்களில் ஒன்றாக சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிய சம்பவங்களை கதைபோல் பள்ளிக் குழந்தைகளுக்குச் சொல்லி வருகிறாள் என்பதைப் படித்தவனின் மனம் நெகிழ்ந்தது...

இந்திரஜித் அப்போதே சரயுவிற்கு கடிதம் எழுத அமர்ந்தான்... அடுத்த இரு தினங்களில் அது சரயுவின் கைக்குப் போய் சேர்ந்தது... அவள் மனதில் அவனிடமிருந்து கடிதம் வரும் என்ற எதிர்பார்ப்பு ஓர் ஓரமாக ஒட்டிக் கொண்டிருந்ததால்... அவள் ஆனந்தத்துடன் கடிதத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள்.

'ஜித்தன் என்பதற்கு அர்த்தத்தை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்... ஆனால்... சரயு என்பதன் அர்த்தத்தை நான் உங்களுக்கு சொல்ல வில்லை...

சரயு என்பது நதி... நதியோரம் நடக்கும் போது... மனதில் பூ மலரும்... மெல்லிளங் காற்று ஈரப் பசையுடன் முகத்தோடு மோதும்... மனமெல்லாம் லேசாகும்...

தங்களின் கடித வரிகளைப் படிக்கும் போது நான் நதியோரம் நடக்கும் உணர்வை அனுபவிக்கிறேன்...'

அபர்ணாவிடம்... இந்திரஜித் எழுதியிருந்த கடித வரிகளைக் கூறியபோது அவளது முகத்தில் ஒரு மாற்றம் வந்தது... அது ஏன் என்று புரியாதவளாய் சரயு திகைத்து தோழியின் முகம் நோக்கினாள்.

"சரயூ... இது சரிவராது..."

"எது....?"

"இந்தக் கடிதத் தொடர்பு..."

"ஏன்...?"

"இது வெறும் படைப்பாளிக்கும்... ரசிகைக்கும் நடுவில் உள்ள கடிதப் போக்குவரத்து போல் எனக்குத் தோன்றவில்லை..."

"வேறு விதமாய் ஏன் நினைக்கிறாய்...?"

"உன் கடிதத்திற்கு அவர் உடனே பதில் போடுவது... அந்தக் கடிதத்தை எதிர்பார்த்து நீ காத்திருப்பது... இதெல்லாம்... வேறு ஒரு உணர்வின் குறியீடு..."

"நீயாக எதையும் கற்பனை பண்ணிக் கொள்ளாதே..."

"நான் சொல்வது கற்பனையில்லை என்பது உன் மனதிற்கே தெரியும்..."

"த்சு... நான் அவரைப் பார்த்ததில்லை... அவரும் என்னைப் பார்த்ததில்லை... இடையில் நீயாக எதையாவது உளறாதே..."

"உளறுகிறேனா...? நானா...? உண்மையைச் சொன்னால் இப்படி பட்டம்தான் மிஞ்சும்..."

"உண்மை எது என்று நீ ரொம்பத்தான் கண்டுவிட்டாய்..."

"வேண்டாம் சரயூ... இது விபரீத விளையாட்டு..."

அபர்ணா சொல்வது சரயுவிற்கு புரியாமல் இல்லை... இருந்தும் அவள் மனம் முரண்டியது... அவள் அபர்ணா கூறுவதைப் புரிந்து கொள்ளாதது போல் பாவனை செய்தாள்...

காதலின் முதல்படி நடிப்பு... அது சரயுவிற்கு வந்துவிட்டது. அது அபர்ணாவிற்கும் தெரிந்துதான் இருந்தது... அவள் வெளிப்படையாய் தன் கருத்துகளைச் சொன்னாள்.

"நீ குழந்தையில்லை சரயூ... குழந்தைகளுக்கு பாடம் சொல்லித் தரும் டீச்சர்..."

"ஸோ... வாட்...?"

"தன்னெஞ்சறிவது பொய்யற்கன்னு வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அதை பாடம் சொல்லிக் கொடுக்கும் நீயே மறக்கலாமா..."

"நான் என்னடி மனமறிந்து பொய் சொல்லி விட்டேன்..."

"உன் மனதைத் தொட்டுச் சொல்... இந்திரஜித்திடமிருந்து வரும் கடிதங்களை நீ ஏன்... பொக்கிசம் போல் பாதுகாக்கிறாய்..."

"அவர் என் மதிப்பிற்குரிய டைரக்டர்... அதனால்தான்..."

"அவ்வளவேதானா...?"

"அவ்வளவேதான்..."

"உண்மையை நான் சொல்லவா...?"

'வேண்டாம்... சொல்லாதே...' என்று மனதிற்குள் கூறிக்கொண்டாள் சரயு.

'என் மனதின் அந்தரங்கத்தை வெளிப்படுத்தி விடாதே அபர்ணா... இந்திரஜித்தின் கடித வரிகளில் எனை நான் இழக்கிறேன்... இதுபோன்ற ஓர் உணர்வை இதற்கு முன்னால் நான் அனுபவித்தது இல்லை... இதற்குப் பின்னாலும்... அனுபவிக்கப்போவது இல்லை... இதற்கு தடை சொல்லாதே... இதை தடை செய்யாதே... காதல் என்பது விதையில்லாமல் மரமாகி... வேரில்லாத விருட்சமாகி... கட்டுக்கடங்காமல் ஓடும் காட்டாறு போன்றது... அதைக் கட்டுப்படுத்த உன்னாலும் முடியாது... என் போக்கில் என்னை விட்டுவிடு...'

தோழியின் முகத்தைப் பார்த்தபடி... அசையாமல் நின்றாள் அபர்ணா... அவளுக்கு சரயுவின் மனவோட்டம் தெளிவாக விளங்கியது... எதுவும் செய்ய இயலாதவளாக... தன் தலையை இயலாமையுடன் ஆட்டிக் கொண்டாள்...

"இது உன் வாழ்க்கையென்று என்னால் எளிதில் விட்டுவிட முடியவில்லை சரயூ... உன் மனம் பூப்போன்றது... சினிமாக்காரர்களின் சகவாசம் உனக்கு வேண்டாம்..."

"நீ தேவையில்லாமல் கவலைப்படுகிறாய் அபர்ணா... நான் ஒரு ரசிகை என்ற முறையில்தான் அவருக்கு கடிதம் எழுதுகிறேன்..."

"இதை என்னை நம்பச் சொல்கிறாயா...?"

"நம்புவதும்... நம்பாததும்... உன் விருப்பம்... என்னை என்ன செய்யச் சொல்கிறாய்..."

‘எப்படியோ [illegible] விட்டாள்,
பார்த்து... தோளைக் குலுக்கி விட்டு... [illegible]

சரயுவிற்கு மனம் கனத்தது... குற்ற உணர்வுடன் தவித்தாள் அவள்... மாலையில் வீடு திரும்பும்போது... எப்போதும் பேசிக்கொண்டே வரும் அபர்ணா... பேச்சின்றி வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தாள்...

“அபர்ணா...”

“.................”

“என் மேல் கோவமா...?”

“..........”

“எதையாவது பேசேண்டி...”

அபர்ணா பேசவில்லை... வழக்கப்படி... சரயுவின் வீட்டு வாசலில் அவளை இறக்கிவிட்டு விட்டு... போய் விட்டாள்....

சரயுவிற்கு தோழியின் ஒதுக்கம் வேதனையைத் தந்தது. பார்வதி கூட அதைப் பற்றி விசாரித்தாள்...

“என்ன... அபர்ணாவின் முகம் இன்றைக்கு ஒருமாதிரி இருக்கு?”

“நான் கவனிக்கவில்லையம்மா...”

“உங்களுக்குள் சண்டையா...?”

“சேச்சே...”

“சரி... காபியைக் குடி... உன் அப்பா வரும் நேரமாகிவிட்டது. நான் வெந்நீர் போட வேண்டும்...”

சரயுவின் தந்தை புகழேந்தி... மூணாறு டீ எஸ்டேட்டில்... டீத்தூள் தயாரிக்கும் கம்பெனியில்... அலுவலகப் பிரிவில் வேலை பார்க்கிறார்... வேலை முடிந்து வந்தவுடன்... டீத்தூளின் கசகசப்பு போக குளிப்பது அவருடைய வழக்கம்...

சரயு... உடைமாற்றிக் கொண்டு டிவியின் முன்னால் அமர்ந்தாள்... திரையில் இந்திரஜித் சமீபத்தில் எடுத்த திரைப்படத்தின் பாடல் காட்சி ஓடிக் கொண்டிருந்தது...

சட்டென்று அவளுக்குள் ஒரு பிரவாகம் பொங்கி எழுந்தது... அபர்ணாவின் கோபமும்... அதனால் அவள் காட்டிய விலகலும்

மறந்து போய் விட்டது... சரயு... அந்தப் பாடல் காட்சியுடன் ஒன்றிப் போனாள்...

"அக்கா... ரிமோட்டைக் கொடு..." சரயுவின் தங்கை யமுனா கேட்டாள்...

"எதுக்குடி..."

"நான் சீரியல் பார்க்கணும்..."

"பொறு இந்தப் பாட்டு முடியட்டும்..."

சரயு சொல்வதை சட்டை செய்யாதவளாய் யமுனா ரிமோட்டைக் கைப்பற்றி சேனலை மாற்ற... சரயு சட்டென்று தங்கையை அடித்து விட்டாள்...

# 4

சரயுவினால் அன்று இரவு நிம்மதியாக தூங்க முடியவில்லை... அவள் கண் முன்னால்... கன்னத்தைப் பிடித்துக்கொண்டு அதிர்ந்து நின்ற தங்கையின் தோற்றமே இருந்தது...

"ஏனக்கா என்னை அடித்தே...?"

"இல்லை யமுனா... நான் வந்து..."

"பேசாதே... அதற்காக பட்டென்று அடித்து விட்டாயே..."

"நீ என்னை தொந்தரவு பண்ணலாமா...?"

"இதற்கு முன்னால் நான் இது போல் பண்ணியதில்லையா? அப்போதெல்லாம் நீ இது போல் கோபப்பட்டதில்லையே..."

யமுனா கேட்ட கேள்வியில் இருந்த உண்மை சரயுவின் மனதைச் சுட்டது...

'நிஜம்தானே... இதுபோல் நடப்பது இந்த வீட்டில் சகஜம் தானே... யமுனா எனக்குத் தங்கை மட்டுமில்லையே... ஒரு நல்ல சிநேகிதியாகவும் இருப்பவளாயிற்றே... மூத்தவளாய் பிறந்து விட்ட ஒரே காரணத்திற்காக... இளையவளை கை நீட்டி அடிப்பது எந்த விதத்தில் நியாயம்...'

சரயு குற்ற உணர்வுடன் தங்கையைப் பார்த்தாள்... யமுனாவின் கன்னத்தில் சரயுவின் விரல்கள் பதிந்த தடம் சிவப்பு வரிக் கோடுகளாய் தெரிந்தன...

'நான் ராட்ஸஸி...' சரயுவின் கண்களில் நீர் முட்டியது...

'எப்போதிலிருந்து நான் இப்படி மாறிப் போனேன்... முகம் தெரியாத ஒரு மனிதன் எடுக்கும் நிழல்படம்... நிஜமான என் உறவுகளை விடப் பெரியதா...? ஊஹூம்... நான்... நானாக வேண்டும்... எனது 'நான்' என்ற உணர்வை மறக்கடிக்கும் எந்த உணர்வும்... எனக்கு வேண்டாம்...'

சரயு உறுதியுடன் மனதிற்குள் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டாள்... தங்கையிடம் மன்னிப்புக் கேட்டாள்... யமுனா பதில் சொல்லாமல் உள்ளே போய் விட்டாள்... யாரும் பார்க்காமல் டிவியின் திரை ஊமையாகிப் போனது...

"கன்னத்தில் என்னடி தடிப்பு... தடிப்பா இருக்கு...?"

இரவு சாப்பாட்டின் போது... பார்வதி யமுனாவைப் பார்த்து வினவினாள்... யமுனா முகத்தை நிமிர்த்தாமல்... சாப்பிடுவதிலேயே கவனமாக பதில் சொன்னாள்.

"வாசல் கதவில் மோதிட்டேன்ம்மா..."

நடந்ததைச் சொல்ல வாய் திறந்த சரயு... தங்கையின் பெருந் தன்மையைக் கண்டு திகைத்துப் போய் அவளை நோக்கினாள்... அதை கண்டுகொள்ளாமல் எழுந்த யமுனா கை கழுவச் சென்றுவிட்டாள்...

"காலேஜ் படிக்கிறான்னுதான் பேரு... இன்னும் கண்ணை பிடரியில் வைத்துக் கொண்டு இருக்கிற... முன்னால் இருக்கிற கதவு எப்படி கண்ணில் படாமல் போச்சு... பெரியவள் கிட்ட இருக்கிற பொறுப்பும்... சமர்த்தும் சின்னவள் கிட்ட துளிக்கூட இல்லை..."

சமையலறையின் உள்ளே பார்வதி சத்தம் போட்டுக் கொண்டி ருந்ததை காதில் வாங்கிக் கொள்ளாமல்... படுக்கை விரிப்பை சரிசெய்து விட்டாள் யமுனா.

'இவளால் எப்படி இப்படி நிச்சிந்தையாய் தூங்க முடிகிறது...'

சரயு... தங்கையின் அடிபட்ட கன்னத்தைப் பார்த்தவாறு

அசையாமல் அமர்ந்திருந்தாள்... தங்கையிடம் கடன்பட்ட உணர்வு அவளைக் கட்டிப் போட்டது. விடியும்வரை அவளது இமைகள் மூட மறுத்தன... சரயு அன்று இரவு தூக்கத்தையும்... தனது நிம்மதியையும் சேர்த்து தொலைத்தாள்.

அபர்ணாவும்... சரயுவும்... சிறு வயதிலிருந்து சேர்ந்து படித்தவர்கள்... இருவருக்கும் ஒரே பள்ளியில் வேலையும் கிடைத்தபோது... அவர்கள் அடைந்த சந்தோசத்திற்கு அளவே இல்லை... இதுவரை அபர்ணாவும்... சரயுவும் ஒருவரிடம் ஒருவர் பிணங்கிக் கொண்டதே இல்லை...

யமுனா சரயுவை விட நான்கு வயது இளையவள்... சரயுவிடம் தங்கையாக அவள் ஒருபோதும் இருந்ததில்லை... உண்மையான சிநேகிதியாகத்தான் இதுவரை இருந்து வந்திருக்கிறாள்... இப்போதும் கூட அடிபட்டவள் தாங்கிக்கொண்டு... அடித்தவளை காட்டிக் கொடுக்காமல் தூங்கிவிட்டாள்...

ஒரேநாளில் உயிருக்குயிரான சிநேகிதியும்... உடன்பிறந்த தங்கையும் தன்னிடமிருந்து வெகுதூரம் விலகிப் போய்விட்டது போல் உணர்ந்தாள் யமுனா...

காலையில் கண் விழித்ததும்... காபியை மறந்து... தங்கையைத் தேடிப்போனாள். அவள் சரயுவின் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்காமல் பேப்பரில் முகம் மறைத்துக் கொண்டாள்...

"யமுனா..."

"........."

"என்னிடம் பேசமாட்டாயா...?"

"அம்மா... வெந்நீர் ரெடியாயிடுச்சா... எனக்கு காலேஜ் பஸ் வந்துடும்..."

தன்னை பொருட்படுத்தாமல் கல்லூரிக்கு கிளம்பிவிட்ட தங்கையை துயரத்துடன் பார்த்தாள் சரயு...

பள்ளிக்கு கிளம்பி... வாசலில் வந்து நின்று... கொட்டிக் கொண்டிருக்கும் அருவியைப் பார்த்தாள்... ஆயினும் மனம் அமைதியடையவில்லை... தூரத்தில் அபர்ணா வந்து கொண்டிருப்பது

தெரிந்தது... உற்சாகமாய் அருகில் ... முக
பார்த்தாள்... அவளோ... கல்லையும்... மண்ணையும் பார்ப்பது போல
பார்த்து வைத்தாள்... சரயுவின் உற்சாக
சரயுவின் முகத்தைப் பார்த்து வைத்தாள்... சரயுவின் உற்சாகம் வடிந்துவிட்டது.

"ஏண்டி... என் கூடப் பேசப் பிடிக்காமல் போய் விட்டதா... உனக்குப் பிடிக்காததை இனிமேல் நான் தொடர மாட்டேன் அபர்ணா... அதற்காக என்னிடம் இந்த அளவிற்கு பாராமுகத்தை காட்டாதே... என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..."

சரயுவின் சோர்ந்த முகத்தைப் பார்த்த அபர்ணாவின் மனம் இளகிக் கொண்டது...

'இவளுக்குத்தான் எத்தனை பூஞ்சையான மனசு... 'காதல்' என்பது அற்புதமான உணர்வுதான்... ஆனால் யாரை... யார் காதலிப்பது... செயற்கை பூச்சில் முக அழகை மேம்படுத்திக் கொண்டு... செயற்கை வெளிச்சத்தில் வாழும் ஒரு மனிதனுக்கு... இயற்கையுடன் இசைந்து வாழும்... இவள் மனதில் துளிர்த்திருக்கும் இயற்கையான இந்த காதலின் புனிதம் பிடிபடுமா? அவன் இதை எந்த அளவிற்கு மதிப்பான்...?' அபர்ணா முகம் கனிய தோழியைப் பார்த்தாள்...

"வண்டியில் ஏறுடி..."

"ஏய்ய்... என் கூடப் பேசிவிட்டாயா...?"

சரயு முகம் மலர வண்டியில் ஏறிக் கொண்டாள்...

'ஒருநாள் பேசாமல் நான் இருந்ததையே இவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லையே... ஒருவேளை... அந்த இந்திரஜித்தை உயிருக்குயிராய் இவள் காதலித்து தொலைத்து... அவன் இவளுடைய காதலை மதிக்காமல் போய் விட்டால்... அந்தக் காதல் தோல்வியை இவளால் தாங்கிக் கொள்ள முடியுமா...?'

அபர்ணா யோசனையுடன் வண்டியை ஓட்ட ஆரம்பித்தாள்.

"அபர்ணா..."

"சொல்லு..."

"நேற்றைக்கு சாயந்தரம் நான் யமுனாவை அடித்து விட்டேண்டி..."

"நீயா...? அவளைப்போய் அடித்தாயா...? நீ இப்படியெல்லாம்

செய்ய மாட்டாயே... ஏன் அவளை அடித்தாய்...? அப்படி அவள் என்ன தவறை செய்துவிட்டாள்...?"

"ஒன்றுமில்லை அபர்ணா... நான் ஒரு பாட்டை டிவியில் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன்... இவள் வந்து சேனலை மாற்றிவிட்டாள்... எனக்கு கோபம் வந்துவிட்டது... பட்டென்று அடித்து விட்டேன்..."

"எந்தப் பாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தே சரயு...? அந்த இந்திரஜித்தின் பாட்டையா...?"

'கண்டுபிடித்துவிட்டாளே...' உதடு கடித்து மௌனமானாள் சரயு...

"நினைத்தேண்டி... என் கணிப்பு சரியாகத்தான் இருக்கு... இது... இது... இதற்குத்தான் நான் தலைப்பாடாய் உன்னிடம் அடித்துக் கொண்டேன்... காதல் ஒரு மனுஷியை எந்த அளவுக்கு மாற்றிவிட்டது பார்த்தாயா...? இதுவரை யாரையாவது நீ கை தொட்டு அடித்திருப்பாயா...? பிரம்பை கையில் எடுக்காத ஒரே டீச்சர்... நீதானேடி... உன்னிடம் படிக்கும் குழந்தைகளை திட்டக்கூட யோசிப்பவள்... காலேஜில் படிக்கும் உன் தங்கையை கை நீட்டி அடித்திருக்கிறாயே... இதிலிருந்தே... நீ... நீயாக இல்லை... மாறிக்கொண்டு வருகிறாய்ன்னு உன் மரமண்டைக்கு உறைக்குதா...? வேண்டாம் சரயு... வானத்தில் இருக்கும் சூரியனை தொலைவில் நின்று ரசிக்கலாம்... அதைத் தொட்டு விட ஆசைப்படக்கூடாது... அது உன்னை சுட்டு எரித்துவிடும்... உன் காதலோடு... நீயும் எரிந்து சாம்பலாகி விடுவாய்..."

'அந்தச் சாம்பல் கூட இந்திரஜித்தின் பெயரைச் சொல்லும்...' மனம் நினைத்ததை மனதிற்குள்ளேயே புதைத்தாள் சரயு...

"இனி இப்படி இருக்கமாட்டேன் அபர்ணா..."

"நம்பலாமா...?"

"நம்பலாம்..."

அன்று மதிய உணவு இடைவேளையின் போது... பியூன் வந்து இந்திரஜித்தின் கடிதத்தை நீட்டும் வரை சரயு வைராக்கியமாகத்தான் இருந்தாள்... கடிதத்தைக் கண்டதும் அந்த வைராக்கியம் இடிந்து தவிடுபொடியானது... அவசரமாய் கடிதத்தை வாங்கப் போனாள்... அபர்ணா சட்டென்று கடிதத்தை வாங்கிக் கொண்டாள்...

"அபர்ணா..." சரயு தயக்கத்துடன் நலிந்த குரலில் அழைத்தாள்...

"சாப்பிடு..." அபர்ணாவின் குரலில் கடுமை தொனித்தது.

"கடிதம்...?"

"நீ படிக்க வேண்டாம்..."

"நான் பதில் போட மாட்டேண்டி... என்னை நம்பு..."

"காதல் என்று வந்துவிட்டால்.... காதலிப்பவர்களுக்கு பேய் பிடித்து விடும் சரயு... நல்லது... கெட்டது தெரியாமல் பைத்தியம் பிடித்தவர்கள் போல் 'மரணச் சூழல்' என்று தெரிந்தும்... விருப்பத்துடன் அதில் தாங்களாகவே போய் சிக்கிக் கொள்வார்கள்... என் கண் முன்னால் நீ அழிந்து போவதைப் பார்க்க என்னால் முடியாது..."

அபர்ணா கண்டிப்புடன் பேசிவிட்டு... கடித உறையை தன் கைப்பைக்குள் போட்டுக் கொண்டாள்... சரயுவிற்கு சாப்பாடு தொண்டையில் இறங்கவில்லை... கண்முன் உணவிருந்தும் புசிக்க முடியாத துயரம் அவள் மனதில் தோன்றியது.

## 5

**கா**ர்க்கதவை ஓங்கிச் சாத்திய வேகத்திலிருந்து இந்திரஜித்தின் கோபத்தின் பரிமாணம்... வெளிப்பட... அவசரமாய் காரை கிளப்பினான் டேவிட்...

"ஏஸியை ஆப் பண்ணு டேவிட்..." காரின் ஜன்னல் கண்ணாடிகளை திறந்துவிட்டபடி கூறினான் இந்திரஜித்...

இரவு நேரக் கடல் காற்று இதமாய் அவனது முகத்தில் அடித்தது...

"ஸ்ஸ்... ஆ..." வாய் விட்டுச் சொல்லி அதை ரசித்தான் இந்திரஜித்... அவன் மனதிலிருந்த வெம்மை கொஞ்சம் குறைவதை போல உணர்ந்தான்...

"ஆயிரம் தான் சொல்லு டேவிட்... இயற்கைக்கு மிஞ்சிய எதுவும் இந்த உலகில் இல்லை... செயற்கைக் குளிர்... செயற்கைக் காற்று...

செயற்கை வெளிச்சம்ன்னு... நாம் செயற்கை வாழ்வை வாழ ஆரம்பித்துவிட்டோம்..."

"ஆமாம் சார்..."

"இயற்கையை ரசிக்கணும்... ஆராதிக்கணும்... அதெல்லாம் என்னால் முடியாமல் போய்விடுமோன்னு பயமாய் இருக்கு..."

"ஏன் சார்...?"

"ச்சு... என் கதையின் நாயகன் காலேஜில் படிப்பவன்... கதையே... காலேஜை மையமாக வைத்துத்தான் இருக்கு... புரொடியூசர்... இந்த டாப் ஹீரோவை போடுங்கிறார்... இவருக்கு கல்யாண வயசில் மகன் இருக்கான்... இந்தக் கொடுமையை நான் எங்கே போய் சொல்ல...?"

"அவர் சினிமாவில் இன்னும் யங் ஹீரோவாகத்தான் தெரிகிறார் சார்..."

"தெரிவார்... தெரிவார்... போட வேண்டிய மேக்கப்பைப் போட்டு... எடுக்க வேண்டிய விதத்தில் காமிராவை போகஸ் பண்ணி எடுத்தால் அழகாகத்தான் தெரிவார்..."

"அவருக்கு இன்னும் மார்க்கெட் அசையாமல் இருக்குதே..."

"அதைத்தான் ஏன்னு நானும் கேட்கிறேன்...? ஹீரோயின்கள் மட்டும் மாறிமாறி வந்துக்கிட்டு இருக்காங்க... ஹீரோக்கள் மட்டும் அப்பா வேசம்... தாத்தா வேசத்திற்குப் போகாமல் அசையாமல் நின்றுக்கிட்டு இருக்காங்க... இதில் ஒரு வேடிக்கை என்னன்னா... இந்த ஹீரோக்கள் வருசத்திற்கு ஒரு இளம் வயது ஹீரோயின்களுடன்தான் நடிப்பாங்க... இவங்களுக்கு ஹீரோயினா நடித்த நடிகைகளே... இவங்களுக்கு அம்மாவாய் வந்து நடித்துத் தொலைப்பாங்க..."

"என்ன சார் செய்வது...? ஹீரோயின்களுக்கு கல்யாணம் ஆகிவிட்டால் மார்க்கெட் போய் விடுகிறது..."

"ஹீரோக்களும் தானே கல்யாணம் செய்து கொள்கிறாங்க... அவங்களுக்கு மட்டும் ஏன் மார்க்கெட் போகவில்லை...?"

"இது தமிழ் கலாச்சாரம் சார்..."

டேவிட் கூறியதைக் கேட்ட இந்திரஜித் கடகடவென்று வாய்

விட்டுச் சிரித்தான்... கடற்கரைச் சாலையில் ... குறைந்திருந்தது... இரவு நேரத்து நியான் விளக்குகளின் வெளிச்சத்தில் சென்னை சொர்க்கலோகம் போல் தெரிந்தது... சற்றே பார்வையை திருப்பியபோது... பிளாட்பாரத்தில் வரிசையாக அமர்ந்தும் சாப்பிட்டுக் கொண்டுமிருந்த மனிதர்கள் பேசிக்கொண்டும்.. கண்ணில்பட்டனர்.

இந்திரஜித் சீட்டில் சாய்ந்து அமர்ந்து கொண்டான்...

"மூணு மணி நேரமா கதை சொல்கிறேன் டேவிட்... விடியவிடிய கதை கேட்டுவிட்டு... சீதைக்கு ராமன் என்ன உறவாகணும்னு கேட்ட கதையாய் சந்தேகம் கேட்டு வைக்கிறாரு இந்த ஹீரோ... இந்த லட்சணத்தில் கதையை இப்படி மாத்து... அப்படி மாத்துன்னு கண்டிசன் வேற போடுகிறார்..."

"ஏனாம்...?"

"அவருடைய ரசிகர்கள் அப்படி இருந்தால்தான் ரசிப்பார்களாம். அவர் சொல்வது போல கதையை மாத்தினேன்னு வை... என் மொத்த கதையும் காணாமல் போய்... அவருடைய உல்டாக் கதைதான் கடைசியில் மிஞ்சும்... இதை எடுக்க நான் எதற்கு...?"

"அதுதானே..."

"கட் அன்ட் ரைட்டா புரொடியூசர் கிட்டச் சொல்லிட்டேன். 'ஹீரோ... ஹீரோயினை புதுமுகங்களாய்த்தான் போடுவேன்... அதற்கு இஷ்டமிருந்தால் என்னை வைத்து படம் பண்ணுங்க... இல்லையின்னா வேற டைரக்டரை பார்த்துக்கங்க'ன்னு தீர்மானமா சொல்லிட்டேன்."

"புரொடியூசர் பெரிய பேனராச்சே சார்..."

"இருக்கட்டுமே... ஒரு படம் பண்ணினால்... அங்கே எனக்கு சுதந்திரம் இருக்கணும். என் கதையை உள்வாங்கி பிரதிபலிக்கும் நடிகர்... நடிகைகள் இருக்கணும். நான் மனதில் நினைத்து எழுதிய கதாபாத்திரங்கள்... திரையில் நிஜமாய் நம் கண் முன்னே உலவணும். அப்படி எடுக்க முடியாவிட்டால்... அந்தப் படமே எனக்கு வேண்டாம் டேவிட்..."

டேவிட்டிற்கு இந்திரஜித்தின் நிமிர்வைக் கண்டு பெருமையாய் இருந்தது... எத்தனை பேர் இப்படி ...

தகுந்தாற்போல் தன்னை மாற்றிக் கொள்ளாமல்... நினைத்ததை மறந்து... வளைந்து கொடுத்துப் போகாமல்... பிடித்த பிடியை விட்டுக் கொடுக்காமல்... யார் இருப்பார்கள்...?

இதோ... இவன் இருக்கிறானே... இதுவரை இந்திரஜித் தொழில் விசயத்தில் பணிந்து போனதில்லை... அவன் மனதில் கற்பனை செய்து வைத்திருக்கும்... கதாபாத்திரங்களுக்கு பொருத்தமான நடிக... நடிகையர் கிடைத்தால் மட்டுமே படப்பிடிப்பிற்குப் போவான்... இல்லாவிட்டால்

'ஸாரி சார்... நீங்க வேற டைரக்டரை வைத்து படம் பண்ணிக்கங்க...' என்று நேருக்கு நேர் முகம் பார்த்துச் சொல்லி விட்டு விலகிக் கொள்வான்...

"கதை எழுதுவது ஒரு வேள்வி போல டேவிட்... அதில் முழுமையாய் மூழ்கி முத்தெடுக்கணும்... அதை உருவாக்கி முடியும்போது மனம் சோர்ந்திருக்கும். ஆனால் அந்தக் கதையைப் படிக்கும்போது சோர்வு பறந்துபோய் விடும்... திருப்தி மனம் பூராவும் நிரம்பிவிடும்... அப்படி உயிரை உருக்கி உருவாக்கும் கதையை... கால்மேல் கால் போட்டுக்கொண்டு... மாற்றுன்னு இவங்களால் எப்படி ஈஸியா சொல்ல முடியுது...?"

"உங்களைப் போல மற்றவங்களும் நினைக்கணுமே சார்... அவங்க மாற்றுன்னு சொன்னதும் இவங்க உடனே தலையை ஆட்டி விடுகிறாங்களே..."

"அதைச் சொல்லு..."

தான் ஒரு மிகப்பெரிய படைப்பாளி... தலைசிறந்த இயக்குநர் என்பதை மறந்து... காரோட்டியிடம்... தன் மனதையும்... உணர்வுகளையும் பகிர்ந்து கொண்டான் இந்திரஜித்.

இது ஒரு அருமையான உறவு... எல்லா இடங்களிலும் இது காணப்படும்... வேகமயமான இயந்திர வாழ்வில்... சற்று நேரம் ஓய்வாக அமரக்கூடிய ஒரே இடம் கார்தான் என்று ஆகிவிட்ட பிறகு... மனதின் உணர்வுகளை காரோட்டியிடம் இறக்கி வைப்பது இயல்பான ஒன்றாக இந்திரஜித்திற்கு ஆகியிருந்தது...

அவனுடைய வீட்டின் முன்னால் கார் நின்றது... இந்திரஜித் இறங்கிக் கொண்டான்.

"காலையில் லேட்டாகவே வா டேவிட்..."

"சரிங்க... சார்..."

டேவிட் காரை செட்டில் நிறுத்தப் போய் விட்டான்... இந்திரஜித் வீட்டிற்குள் நுழைந்தான்...

"சாப்பிடவா இந்தர்..." கமலம் அழைத்தாள்.

"இன்னும் நீங்க தூங்கவில்லையாம்மா...?"

"நீ சாப்பிடாமல் நான் எப்படித் தூங்கப் போவது...?"

"டேபிளில் எடுத்து வைத்துவிட்டால் நான் போட்டுச் சாப்பிட்டுக்கொள்ள மாட்டேனா...?"

"நீ வீட்டில் சாப்பிடும் நேரமே கம்மி... ஷூட்டிங் இருந்தால்... அங்கேயே சாப்பிட்டுவிட்டு வந்து விடுவாய்... இதில் மாதத்தில் முக்கால்வாசி நாள் அவுட்டோர்... அத்தி பூத்தது போல் அம்மாவின் கையால் சாப்பிடுகிறாய்... அதையும் நான் எடுத்து வைத்துவிட்டுப் போய் தூங்கணுமா...?"

"ஓ.கே... ஓ.கே... தெரியாமல் சொல்லி விட்டேன்... ஒரே நிமிசத்தில் குளித்துவிட்டு வந்து விடுகிறேன்... சரியா...?"

சொன்னபடி விரைவாக குளித்துவிட்டு வந்தான் இந்திரஜித். கமலம் பரிமாற ஆரம்பித்தாள்... அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது... அவனுக்கு எதிரே வந்து அமர்ந்தார் மூர்த்தி...

"என்னப்பா... உங்களுக்கும் தூக்கம் வரவில்லையா...?"

"உன்னிடம் பேசணும்னு ஒரு வாரமாய் முயற்சி பண்ணுகிறேன்... பேச முடியாமலேயே போகுது... அதுதான் இன்றைக்கு எப்படியும் பேசியே தீருவதுன்னு... ஒரு முடிவோடு உட்கார்ந்துவிட்டேன்..."

"பேசுங்க..."

"இந்த மாதக் கடைசியில் மாலதி அவளுடைய பிள்ளைகளுக்கு காது குத்து வைத்திருக்கிறாள்..."

"அக்கா... என்னிடம் இதைப்பற்றிச் சொல்லவேயில்லையே..."

"நீ அவளுடன் பேசவே இல்லையே..."

"அதுதான் தினமும் என்னிடம் பேசுகிறதே..."

உடனே... 'அக்கா... நான் டிஸ்கஷனில் இருக்கிறேன்... அப்புறம் பேசட்டுமா'ன்னு கேட்டு நீ கட் பண்ணி விடுகிறாயாமே... அப்புறம் எப்படி... சொல்ல வந்ததை அவள் சொல்வாள்?"

"ஸாரிப்பா... இப்ப என்ன... அக்காவிற்கும்... குழந்தைகளுக்கும் சீர் செய்ய வேண்டும்... அவ்வளவுதானே... எவ்வளவு வேண்டுமானாலும் பணம் எடுத்துக்கங்க... செய்ய வேண்டியதை செய்யுங்க..."

"ஏண்டா... தாய் மாமன் மடியில் உட்கார வைத்துத்தான் காது குத்த வேண்டும்... அதற்கு நீ வர வேண்டாமா...?"

மூர்த்தியின் குரலில் கோபம் தொனித்து... இந்திரஜித் இயலாமையுடன் தாய்... தந்தையின் முகம் பார்த்தான்...

## 6

**பெ**ற்றவர்களுக்காகவும்... கூடப் பிறந்தவளுக்காகவும் செலவளிக்க இந்திரஜித்திடம் தேவைக்கு அதிகமாகவே பணம் இருந்தது... ஆனால் நேரம்தான் இல்லை...

ஒன்று வேண்டுமென்றால்... இன்னொன்றை விட்டுத்தான் ஆகவேண்டும்... வேறு வழியில்லை... இந்திரஜித்திற்கு நிற்க நேரம் இல்லை... அவன் ஓடிக் கொண்டிருந்தான்...

"அம்மா... இந்த மன்த் எண்டில் நான் அவுட்டோர் ஷூட்டிங் போய் விடுவேன்..."

"அதற்காக...?"

"எப்படியாவது நீங்கள் மேனேஜ் பண்ணிக் கொள்ளக் கூடாதா?"

"விளையாடுகிறாயா இந்தர்...? எப்படி நாங்கள் மேனேஜ் பண்ணிக்க...? நீயே சொல்லு... அவள் கல்யாணத்திற்கு நீ வரவில்லை... ஒன்றிற்கு இரண்டு பிள்ளைகளைப் பெற்றுவிட்டாள்... அதுகளைப் பார்க்கவும் நீ போகவில்லை..."

"என்னை என்னம்மா செய்யச் சொல்கிறீங்க... அந்த சமயம் பார்த்து வெளிநாட்டு ஷூட்டிங் வந்து மாட்டிக் கொண்டதே..."

"எல்லாத்துக்கும் உன்னிடம் பதில் இருக்கும் இந்தர்... ஆனால் இந்த முறை மாலதியின் மாமனார் வீட்டிற்கு நான் பதில் சொல்ல முடியாது..."

பார்வதி கோபத்துடன் சமையலறைக்குள் சென்று விட்டாள்... இந்திரஜித்... மூர்த்தியைப் பார்க்க... அவர் 'எதுவும் செய்ய முடியாது...' என்ற பாவனையில் கைகளை விரித்தார்.

"நான் அவுட்டோரிலிருந்து நேராய் பெங்களூர் வந்துவிட டிரை பண்ணுகிறேன் அப்பா..."

"அதைச் செய்... இல்லாவிட்டால்... மாலதியின் பாடுதான் திண்டாட்டமாய் போய் விடும்... பெண் கொடுத்த வீட்டில் நம்மிடம் சீரை மட்டும் எதிர்பார்க்க மாட்டாங்க இந்தர்... சில சடங்கு... சம்பிரதாயங்களுக்கு... நாம் கொடுக்கிற முக்கியத்துவத்தையும் எதிர்பார்ப்பாங்க... இதுவரை மாலதிக்கு கூடப்பிறந்தவனாக சபையில் நீ வந்து நிற்கவில்லை... இதை மாலதியின் புருசனே சொல்லிக் காட்டுகிறாராம்..."

"நான் என்ன வேண்டுமென்றேவா அப்படிச் செய்கிறேன்... என் வேலை அப்படி...?"

"இதையே எத்தனை நாள் நாம் சொல்லிக்கிட்டிருக்க முடியும்...? நீயே கொஞ்சம் யோசிச்சுப்பாரு..."

"பார்க்கிறேன்ப்பா... டைம் கிடைத்தால் கட்டாயம் அக்காவின் வீட்டு பங்சனை அட்டெண்ட் பண்ணுகிறேன்... போதுமா...?"

"ம்ம்..."

இந்திரஜித் படுக்கப்போகும்போது... வழக்கப்படி வந்திருந்த கடிதங்களைப் பிரித்தான்... அவன் மனம் தேடிய கடிதம் இல்லை...

'ஏன் அவள் பதில் போடவில்லை...?'

அவன் மனம் எதையோ இழந்தது போல் ஏமாற்றமடைந்தது...

'இன்று அவளிடமிருந்து பதில் வந்திருக்க வேண்டுமே...'

இந்திரஜித் மற்ற கடிதங்களை படிக்க முடியாமல் சலிப்புடன் படுத்துவிட்டான்...

'சோ' வென்ற சத்தத்துடன் அருவி கொட்டிக் கொண்டிருந்தது... அங்கிருந்த திட்டில் அமர்ந்து கொண்ட யமுனா...

"ம்ம்... அப்புறம்..." என்று கேட்டாள்...

"அப்புறம் என்ன... நான் பதில் போடுவதை நிறுத்திவிட்டேன்..."

சரயு பளிங்கு நீர் போல ஓடிக் கொண்டிருந்த அருவியின் கீழே தெரிந்த கூழாங்கற்களைப் பார்த்தபடி பதில் சொன்னாள்...

"எதற்காக நிறுத்தினாய்க்கா... என்னை அடித்து விட்டதற்காக வா...?" யமுனா ஆதங்கத்துடன் கேட்டாள்...

"அதுவும் ஒரு காரணம் யமுனா... நான் ஏன் அப்படி நடந்து கொண்டேன்...? எனக்கு ஏன் அப்படி ஒரு கோபம் வந்தது...? நானாக.. நானில்லாமல் ஆகிப் போனேனே... அதனால்தான்... நான் பதில் போடுவதில்லை..."

"நினைத்தேன்க்கா... அன்றைக்கு அந்தப் பாட்டில் நீ இன்ட்ரெஸ்ட் காட்டியபோதே எனக்குச் சந்தேகம் வந்தது... ஆனால்... இந்திரஜித்தின் படங்கள் என்றால் உனக்கு உயிராச்சே... அதனால்... அது வெறும் ரசிப்பாகத்தான் இருக்கும் என்று உன்னிடம் எதுவும் கேட்காமல் விட்டு விட்டேன்..."

"இப்போதும் நான் அவருடைய ரசிகைதான் யமுனா... என்னவோ ஒரு ஈடுபாடு கொஞ்ச நாள்களாக வந்தது... அபர்ணா கோபப்பட்டாள்... உன்னை தேவையில்லாமல் அடித்து விட்டேன். அதனால் எனக்குள் ஒரு குற்ற உணர்வு வந்து விட்டது..."

"அதற்காக காதலை விட்டு விட்டாயா...?"

"ச்சு... அதைக் காதல்ன்னு எப்படிச் சொல்ல முடியும் யமுனா. என்னவோ ஒரு அதீத ஈடுபாடு அவ்வளவுதான்... நான் மதிக்கும் ஒ டைரக்டர்... என்னை மதித்து பதில் கடிதம் எழுதியதால் ஒ சந்தோசம்... அந்தக் கடிதத் தொடர்பினால் எனக்குள் ஏற்பட்ட ஒ புத்துணர்ச்சி... ம்ப்ச்... கிடைக்காது என்று தெரிந்திருந்தாலும்.

நிலவைப் பிடிக்க ஆசைப்படும் குழந்தை போல் என் நினைவு இருக்கிறதில்லையா யமுனா..."

"நீ ரொம்ப சாப்ட் அக்கா... என்னிடம் இதைப் பற்றி நீ பேசியிருக்கலாம்..."

"பேசுகிற அளவுக்கு பெரிதாக எதுவுமில்லை யமுனா... அது பெரிதாகிவிடுமோ என்ற பயத்தில்தான் அபர்ணா என் கையைக் கட்டிப்போட்டு விட்டாளே..."

"அவங்க நினைப்பதிலும் தப்பில்லையே அக்கா... அவங்க உன்னுடைய உண்மையான நலம் விரும்பி..."

"ஷ்யூர்... யாருக்கு இது போல ஒரு உண்மையான பிரண்ட் கிடைப்பாங்க...? சொல்லு... எனக்கு இவள் கிடைத்திருக்கிறாள்... அவளுடைய நட்பை என்னால் எப்படி இழக்க முடியும் யமுனா...?"

"இந்திரஜித்தின் அன்பை இழக்கலாமா...?"

"அவருக்கு ஆயிரக்கணக்கில்... ஏன்... லட்சக்கணக்கில் ரசிகர்கள் இருக்கிறார்கள்... அவர்களில் நானும் ஒருத்தி... என்னிடம் போய் ஸ்பெசலாக என்ன அன்பை வைத்திருக்கப் போகிறார்..."

இதைச் சொல்லும் போதே சரயுவின் கண்களில் வலி தெரிந்தது... யமுனா அவளை இரக்கத்துடன் பார்த்தாள்...

"காதலிப்பதற்கும் சுயநலம் வேண்டும் அக்கா... உன்னிடம்தான் அது கிடையாதே... என்னை அடித்துவிட்டு... நீ வலியால் துடித்தவளாச்சே... சும்மா என் கோவத்தைக் காட்டத்தான்... அன்றைக்கு காலையில் உன்னோடு பேசாமல் போனேன்... சாயந்திரம் நான் வந்தபோது என் கையைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விட்டவளாச்சே... ம்ம்... உனக்குப் போய் காதல் வந்திருக்கக் கூடாது... வந்ததும்தான் வந்ததே... ஏதாவது சாதாரண ஆளாக பார்த்து வந்து தொலைக்கக் கூடாதோ... உச்சத்தில் இருக்கும் ஸ்டார் வேல்யூ டைரக்டர் மேல்தானா வந்து தொலைக்க வேண்டும்...?"

யமுனா தமக்கையின் மேலிருந்த பாசத்தில் அங்கலாய்த்தாள்... சரயு அருகிலிருந்த... காட்டுப் பூச்செடியின் இலையை வருடிய வண்ணம் மௌனமாக இருந்தாள்... அவள் மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது...

‘அவருடைய படைக்கும் திறமையைத்தான் நான் காதலிக்கிறேன் யமுனா... அவருடைய ஸ்டார் வேல்யூவை இல்லை... அவர் உச்சத்தில் இல்லாமல் சாதாரண ஆளாக இருந்திருந்தால் என் காதல் கைகூடி வர சாத்தியமுண்டுதான்... அதற்காக உச்சத்தில் இருப்பவரை ‘இறங்கி வா’ என்று என்னால் சொல்ல முடியுமா...?’

“என்னக்கா பேசாமல் இருக்கிறாய்...?”

“முதலில் இது காதல் இல்லை என்பதை புரிந்து கொள் யமுனா...”

“ஹ... இது காதல் இல்லைன்னா... வேறு எதுதான் காதல்...?”

“வீட்டுக்குப் போகலாம் வா... அம்மா தேடுவாங்க...”

“இன்றைக்கு லீவு நாள்தானே... அதெல்லாம் தேட மாட்டாங்க... லீவு நாளில்... நீயும்... நானும் இந்த அருவிக்கரையில் தான் சுற்றிக் கொண்டிருப்போமுன்னு அவங்களுக்குத் தெரியாதா... என்ன...? இது என்ன இன்றைக்கு... நேற்றைக்கு நடக்கிற சமாச்சாரமா...? நினைவு தெரிந்த நாளில் இருந்து அருவிக் கரையில் தானே குடியிருக்கிறோம்...?”

“அருவிக் காட்டில் பிறந்தால்... அருவிக் கரையில்தான் குடியிருக்க வேண்டும்... இதைப்போய் ஒரு பெரிய கண்டுபிடிப்புன்னு சொல்ல வந்து விட்டாயே...”

அவர்கள் பேசிக்கொண்டே வீட்டை நோக்கி நடந்தார்கள்.

**வ**குப்பறைக்குள் குழந்தைகளுக்கு முதுகு காட்டி... கரும்பலகையில் சாக்பீஸினால் எழுதிக் கொண்டிருந்தாள் சரயு... குழந்தைகள் தங்களுக்குள் சன்னக்குரலில் பேசிக்கொள்ள... திரும்பிப் பார்க்காமலேயே...

“கீப்... கொயட்...” என்று ஒரு அதட்டல் போட்டாள்...

அறைவாசலில் நிழலாடியதை உணர்ந்து கேள்வியுடன் பார்த்தாள்... பியூன் நின்றிருந்தான்...

“என்ன பரமசிவம்...?”

“உங்களைப் பார்க்க விசிட்டர் வந்திருக்கிறாங்கம்மா...”

"என்னைப் பார்க்கவா...?

ஆச்சரியத்துடன் வினவியவள்... கைக்கடிகாரத்தில் மணி[illegible] பார்த்தாள்...

"கிளாஸ் முடிய ஆறு நிமிடங்கள்தான் இருக்கு... வெயிட் பண்[illegible] சொல்லு... வந்து விடுகிறேன்..."

'யாராக இருக்கும்...?' என்று மனதில் எழுந்த கேள்வியை பு[illegible] தள்ளியபடி... வகுப்பில் கவனம் செலுத்தினாள்...

வகுப்பு முடிந்ததும்... வகுப்பறையை விட்டு வெளியேறி நீ[illegible] வராண்டாவில் நடந்தாள்... எதிர்ப்பட்ட பியூனிடம்,

"யார் அது...?" என்று விசாரித்தாள்...

"அதோ... அந்த மரத்தடியில் நிற்கிறார் பாருங்க.." பியூ[illegible] சுட்டிக்காட்டினான்...

மரத்தடியில் யாரோ ஒருவன் முதுகுகாட்டி நின்றிருந்தான்... ச[illegible] கேள்வியுடன் அவனை நோக்கியபடி... அருகில் சென்றாள்.

"யார் நீங்க...? என்னை ஏன் பார்க்க வந்திருக்கீங்க...?"

அவளது கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவன் நிதானமா[illegible] அவள் புறம் திரும்பினான்... அவனுடைய உயரமான... கம்பீரமா[illegible] தோற்றத்தைக் கண்டு... சரயு ஓர் கணம் மருண்டு விட்டாள்...

'யார் இவன்...? என்னைப் பார்க்க ஸ்கூலுக்கு வந்திருக்கிறானே[illegible] யாராவது பார்த்தால் தவறாக நினைத்துக் கொள்ள மாட்டார்களா[illegible]

சுற்றும் முற்றும் பதட்டத்துடன் அவள் பார்வையை அ[illegible] விட்டபோது... எதிரில் நின்றிருந்தவன் அமைதியாகப் பேசினான்...

"ஹலோ... ஐ ஆம் இந்திரஜித்..."

"என்ன...!!!..."

சரயு விழி விரிய எதிரில் நின்றிருந்தவனை பிரமிப்புடன் பார்த்த[illegible] ஸ்தம்பித்து நின்று விட்டாள்... இது கனவா... இல்லை நனவா என்[illegible] சந்தேகம் அவளுக்குள் எழுந்தது...

# 7

சரயுவின் முகத்தில் நவரசமும் பிரதிபலிப்பதை ரசனையுடன் பார்த்தான் இந்திரஜித்...

இவ்வளவு மென்மையுடன் ஒரு பெண் இருக்க முடியும் என்பதை அன்றுதான் முதன் முதலில் கண்டான் அவன்...

தன் முகத்தையே பிரமிப்புடன் பார்த்தவாறு... பேச மறந்து நின்றவனைப் பார்த்து தோழமையுடன் சிரித்தாள்...

"என்ன பதில் பேசாமல் நிற்கறீங்க... உங்கள் ஊருக்கு... உங்களைப் பார்க்கவென்று வந்திருக்கிறேன்... 'வா'ன்னு ஒரு வார்த்தை சொல்ல மாட்டிங்களா...?"

சரயு தன்னுணர்வு வரப் பெற்றவளாய் அவசரமாய் வாய் திறந்து அவனை வரவேற்றாள்...

"வாங்க சார்... உங்களை நான் எதிர்பார்க்கவில்லை... அதனால் தான் பேச்சே வரவில்லை..."

"ஆனால் நான் உங்களிடமிருந்து பதில் கடிதம் வருமென்று எதிர்பார்த்தேன்... ஏன் பதில் போடவில்லை...?"

அவன் உரிமையுடன் கேட்டான்... இவ்வளவு இயல்பாய் அவன் உரிமை எடுத்துக் கொள்வதை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாமல் தவித்துப் போனாள் சரயு...

அவள் கண்களில் மருட்சியையும்... கைகளைப் பிசைந்தவாறு அவள் சுற்றுமுற்றும் பார்த்துக் கொள்வதையும் கண்ட இந்திரஜித்திற்கு... அவளின் பயம் வேடிக்கையாக இருந்தது...

"என்ன பயம் சரயு...? நான் உங்களைப் பார்க்க வந்தது உங்களுக்குப் பிடிக்கவில்லையா...?" என்று கேட்டான்.

"ஐயோ... சார்..." அவள் பதட்டத்துடன் நிமிர்ந்தாள்...

"நான் அப்படிச் சொன்னேனா...?"

"வாய்விட்டுச் சொன்னால்தானா? கைகளை இப்படி நம்பியார்

போல் பிசைந்துகொண்டு நின்றால் நான் என்னவென்று எடுத்துக் கொள்வது...? ... ம்ம்ம்...?"

"ப்ளீஸ்... என்னைத் தவறாக நினைத்துக் கொள்ளாதீங்க..."

"தவறாக நினைப்பதா...? உங்களைப்போயா? நெவர்..."

"என்னைப் பார்க்கவா... இவ்வளவு தூரம் வந்தீங்க...?"

"ஆக்சுவலாய் நான் ஷூட்டிங்கிற்காக வந்திருக்கிறேன்... என்ன ஒன்று... இந்தக் கதையை ஊட்டியில் எடுப்பதாக இருந்தேன்... மூணாறு டீச்சரிடமிருந்து... ஒரு நான்கு வரிக் கடிதம் கூட வரவில்லை... எனக்கு காரணத்தை தெரிந்து கொண்டே ஆக வேண்டுமென்று வேகம் வந்துவிட்டது... ஊட்டியில் நடப்பதாக இருந்த கதையை மூணாறில் நடப்பதாக மாற்றி எழுதி விட்டேன்... யூனிட்டோடு கிளம்பி வந்தும் விட்டேன்... இங்கே தான் ரிஸார்ட்ஸில் தங்கியிருக்கிறோம்... நேரம் கிடைத்தால் வாங்களேன்..."

அவன் இயல்பாக அவளுக்கு அழைப்பு விடுக்கவும் அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது...

'இது என்ன... இவன்பாட்டுக்கு இப்படிக் கேட்டுவிட்டான்...'

மனதில் ஒரு சிணுங்கல் ஏற்பட... அவள் அவசரமாய் பதில் சொன்னாள்..

"ரிஸார்ட்டுக்கா...? நானா...? ஸாரி ஸார்... அதுபோல் தனியாகப் போய் எனக்குப் பழக்கமில்லை..."

அவன் சிவந்துவிட்ட அவள் முகத்தையே உற்றுப் பார்த்தான்... அவளுடைய மென்மை தெறிக்கும் அழகும்... பூப்போன்ற முகமும் அவனை ஈர்த்தன...

"எதற்குப் பதட்டம் சரயு? முடியாவிட்டால் விட்டுவிடுங்க... நீங்க என்னைப் பார்க்க வராவிட்டால் என்ன...? நான் உங்களைப் பார்க்க வருகிறேன்... சரியா...?"

'சரியென்று எப்படிச் சொல்வது...?' சரயு தவித்தாள்... அதேசமயம் மறுக்கவும் அவளால் முடியவில்லை...

"ஆமாம்... ஏன் எனக்குப் பதில் போடவில்லை...?" அவன் அதிலேயே நிலையாக நின்றான்...

"நீங்கள் பெரிய டைரக்டர்..."

"அதனால் என்ன...?"

"நிறைய வேலையிருக்கும்..."

"இருந்துவிட்டுப் போகிறது..."

"உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று நினைத்தேன்..."

அவன் அவளை ஊடுருவிப் பார்த்தான்... அவள் தடுமாறிப் போனாள்...

'என்ன மாதிரியான பார்வை இது...'

"இது சரியான பதில் இல்லை சரயு... முதன் முதலில் எனக்குக் கடிதம் போடும்போது... அது என்னைத் தொந்தரவு செய்யுமென்று உங்களுக்குத் தெரியாதா...?"

'இதற்கு என்ன பதில் சொல்வது...?' சரயு உதட்டைக் கடித்தாள்...

"என் மனதின் ரசனையை... பிரமிப்பை... உங்களுக்குத் தெரியப் படுத்தி விட வேண்டுமென்று தோன்றியது...?"

"ஓஹோ... உங்கள் கடிதத்திற்கு நான் பதில் போட்டேன்... என்னுடைய எல்லாக் கடிதங்களுக்கும் உடனுக்குடன் பதில் போட்டீங்க... கடைசி இரண்டு கடிதங்களைத் தவிர... அது எப்படி...?"

"அது... அது வந்து..."

"உங்களால் பதில் சொல்ல முடியாது சரயு... ஏன்னா... உங்களால் பொய் சொல்ல முடியாது... இன்னும் சொல்லப் போனால் உங்களுக்குப் பொய் சொல்லத் தெரியாது... ஒன்றை நீங்க தெரிந்து கொள்ளணும் சரயு... உங்களுடைய கடிதம் எனக்கு தொந்தரவாக இல்லை... அது என்னை உயிர்ப்பித்தது... உங்களிடமிருந்து பதில் வராததுதான் என் மனதை மிகவும் பாதித்து தொந்தரவு செய்தது... என்னால் வேலை செய்யவே முடியவில்லை. அப்போதுதான் நான் உங்களின் சக்தியை உணர்ந்தேன்... உங்களைத் தேடியும் வந்தேன்..."

அவனது வார்த்தைகளில் இருந்த மென்மையும்... அதை உண்மையாய் அவன் சொன்ன விதமும் சரயுவை கவர்ந்தன... அவள் நிமிர்ந்து அவனை ஒரு விநாடி நேராக பார்த்தாள்...

"என்ன சரயு...?"

"உங்களைத்தான் நான் உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கிறேன் சார்... ஆனால் எனக்குப் போய் இவ்வளவு உயர்ந்த இடத்தை உங்கள் மனதில் கொடுத்திருக்கிறீங்களே..."

"உங்களுக்கு அதற்கான தகுதி இருக்கிறது..."

'எனக்கா...? உன் மனதில் ஓர் அரியாசனம்... எனக்கே எனக்கா...?' அவள் பேச வார்த்தை வராமல் தடுமாறினாள்...

அவர்கள் நின்று கொண்டிருந்த மரத்தடியில் பூக்கள் உதிர்ந்து கொண்டிருந்தன... அவள் பேச முடியாமல் தடுமாறுவதை உணர்ந்தவனாக அவன் மெலிதாக புன்னகைத்தான்...

மதிய உணவு இடைவேளைக்கான மணியொலித்தது...

"சரயு..." என்று அழைத்தபடி அங்கே வந்த அபர்ணா இந்திரஜித்தைக் கண்டதும் புருவம் உயர்த்தினாள்...

"அபர்ணா... சார்தான் டைரக்டர் இந்திரஜித்..."

சரயு அறிமுகப்படுத்தியதும் அபர்ணா ஆச்சரியத்தில் 'ஆ'வென்று வாய் பிளந்தாள்...

"என்னடி சொல்கிற...? நிஜமாகவே இவர்தான் டைரக்டர் இந்திரஜித்தா...?"

"நான் சொல்வதை நம்பு... சார்... இவள் என் பெஸ்ட் பிரண்ட் அபர்ணா..."

இந்திரஜித் "ஹலோ..." என்றான்... அபர்ணா வாய் திறந்தாள்... வார்த்தைகள் வரவில்லை... இந்திரஜித் விசித்திரமாய் அவளைப் பார்த்துவிட்டு... சரயுவின் பக்கம் திரும்ப... அவள் புன்னகைத்தாள்...

"வேறு ஒன்றும் இல்லை சார்... இஞ்சி இடுப்பழகிக்கு வாய் திறந்தால் வார்த்தைகள் வரவில்லையாம்... வெறும் காத்துத்தான் வருகிறதாம்..."

சரயு சொன்னதைக் கேட்ட இந்திரஜித் வாய் விட்டுச் சிரித்து விட... அபர்ணா சரயுவை முறைத்தாள்...

"ஏய்ய்... என்னடி... கிண்டலா...? துணைக்கு ஒரு ஆள் கிடைத்து

விட்ட தெம்பா..? இஞ்சி இடுப்பழகிக்கு... இஞ்சி இடுப்பழ கனைப் பார்த்தால்தான் வார்த்தைகள் வராது... இவர் என்ன இஞ்சி இடுப்பழகனா..."

"ஐயையோ... இஞ்சி இடுப்பழகன் சினிமா இண்டஸ்ட்ரியிலேயே ஒரே ஒரு ஆள்தான்... நான் இந்திரஜித்... என்னைப் போய் ஏன் வம்புக்கு இழுக்கறீங்க...?"

"நான் இழுக்கவில்லை சார்... இவள்தான் இழுக்கிறாள்..."

"இவங்களையா சொல்றீங்க...? பாவம்... இந்தப் பூவை இழுக்கச் சொன்னால் கூட... இவங்களால் அதைச் செய்ய முடியாது... திணறுவாங்க... வம்பை எப்படி இழுப்பாங்க...?"

இந்திரஜித் கரிசனமாய் கூறிக்கொண்டே சரயுவின் முகம் பார்க்க... அவள் முகம் சிவந்தாள்... அபர்ணாவின் மனம் அதை உணர்ந்து கொண்டது...

"ம்ம்... சப்போர்ட்டெல்லாம் பலமாய்த்தான் இருக்கு... சரயு நாம் சாப்பிடப் போக வேண்டும்... நினைவு இருக்கிறதா... இல்லையா...?"

அபர்ணாவின் விழிகளில் சிறு கண்டிப்பு இருப்பதையும்... சரயு அதற்கு கட்டுப்படுவதையும்... இந்திரஜித் மனதிற்குள் குறித்துக் கொண்டான்... யோசனையுடன் சரயுவின் கையிலிருந்த செல்போனை பார்த்தான்...

"ஒரு நிமிடம்... உங்களுடைய போனைத் தரமுடியுமா சரயு?"

சரயு தன்போனை உடனே இந்திரஜித்திடம் கொடுத்துவிட... தடுக்க முடியாத கோபத்துடன் அபர்ணா வினவினாள்...

"ஏன் சார்... இவ்வளவு பெரிய டைரக்டர்... உங்களிடம் அட்லீஸ்ட்... ஒரு செல்போன் கூட இல்லையா...?"

"ரிஸார்ட்டில் மறந்து வைத்துவிட்டு வந்து விட்டேன் மிஸ் அபர்ணா..."

அவன் சரயுவின் போனிலிருந்து எண்களை அழுத்த... அவன் பாக்கெட்டில் மணியொலித்தது... அபர்ணாவின் முகத்தில் கேலி கலந்த கோபம் உதயமானது...

"அட... ரிஸார்ட்டிலிருந்த உங்கள் செல்போன் எப்படி சார் உங்கள்

சர்ட் பாக்கெட்டிற்குள் வந்தது...? இறக்கை முளைத்து பறந்து வந்து விட்டதா...?"

இந்திரஜித் அபர்ணாவைப் பார்த்து அர்த்தத்துடன் சிரித்தபடி... சரயுவிடம் செல்போனை நீட்டினான்... அதை வாங்கிக் கொள்கையில்... சரயுவின் விரல்களை அவன் விரல்கள் தீண்டின...

## 8

**'தீக்குள் விரலை வைத்தால்... நந்தலாலா... நின்னை**
**தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா...'**

**பா**ரதி ஏன் அப்படிப் பாடினான்...? சுடுகின்ற தீயின் தொடுகை... காதலனின் தொடுகை போல் அவ்வளவு இன்பமானதா...? இல்லை... காதலின் சக்தி... தீயின் தகிப்பைக் கூட உணர விடாதா...?

இதுநாள் வரை சரயு... இதை அறியாள்... அன்றுதான் முதன் முதலாக... அதை உணர்ந்தாள்...

இந்திரஜித்தின் விரல்பட்ட அவளுடைய விரல்கள் சுட்டன... அது ஒரு இன்ப அவஸ்தையை அவளுள் உண்டுபண்ணியது... அவன் வேண்டுமென்றே அவள் விரல் தொட்டானா...? இல்லை... தெரியாமல்... அவள் விரல்களின் மேல் பட்டானா...? இனம் பிரித்துப் பார்க்க முடியாமல்... சிலையாகி நின்றாள் சரயு... அதுவோ... இதுவோ... எதுவோ... என்று சொல்ல முடியாத ஓர் மாயச் சுழலில் தான் சிக்கிவிட்டதை உணர்ந்தாள் அவள்...

இது கூடலில்லாத கூடல்... கலவியில்லாத சங்கமம்... சொல்ல முடியாத மௌன மொழி... வார்த்தைகளில் வடிக்க இயலாத வர்ணஜாலம்...

**'இனம் விளங்கவில்லை - எவனோ**
**என் அகம் தொட்டு விட்டான்...'**

இனம் விளங்காமல் அகம்தொட்டு விட்ட அனுபவத்தை ஆணாகிய பாரதி எப்படி உணர்ந்தான்...?

சரயு சாப்பிட மறந்து தன் விரல்களையே பார்த்துக் கொண்டிருக்க - அபர்ணா அவள் முதுகில் ஒரு போடு போட்டாள்...

"ஏய்ய்... சாப்பிடுடி... சும்மா பைத்தியம் போல் ஏன்... விரல்களையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிற...?"

"அபர்ணா..."

"எதுக்கு இப்ப மந்திரித்து விட்ட கோழி போல இப்படி ஒரு பார்வையை பார்த்து வைக்கிற...?"

"ம்ம்... ஒண்ணும் இல்லைடி..."

"ஒண்ணும் இல்லைன்னு சொன்னால்தான் ஓராயிரம் இருக்கிறதுன்னு அர்த்தம்... சும்மா விட்டத்தைப் பார்த்துக் கொண்டு சிரிக்காமல் சாப்பிட்டுத் தொலை..."

அபர்ணா எரிச்சலுடன் திட்டியதில்... கனவு கலைந்து நனவுலகிற்குத் திரும்பினாள் சரயு... சாப்பாட்டை விரல்களால் அளந்தபடி...

"எதுக்குடி இப்படி வெடுக்குன்னு பேசுகிற...?" என்று மனத்தாங்கலுடன் வினவினாள்...

"நீ பண்ணிக் கொண்டிருக்கும் காரியத்திற்கு உன்னைக் கொஞ்சச் சொல்கிறாயா...?"

"நான் என்ன பண்ணினேன்...?"

"செய்வதையும் செய்துவிட்டு இப்படி சின்னக் குழந்தை போல் கேள்வியையும் கேட்டு விடு... உன்னை என்ன செய்தால் தேவலை? எதுக்குடி... அந்த இந்திரஜித் உன்னைப் பார்க்க வந்தான்...?"

"அவன்... இவனென்று பேசாதே... எனக்கு கோபம் வரும்...!"

"உன் கோபத்திற்கு நான் பயந்தவள் இல்லை... நான் அப்படித்தான் பேசுவேன்... நீ வேண்டுமானால்... அவர்... இவர்... குட்டிச்சுவர்ன்னு கொஞ்சிக் கொண்டு இரு..."

"அவரொன்றும் குட்டிச்சுவர் இல்லை..."

"கெட்டிச்சுவராகவே இருக்கட்டும்... என் கேள்விக்கு முதலில் பதில் சொல்லு... அவன் எதற்கு இங்கே வந்தான்?"

"இதை அவரிடம் போய் கேளு... நான் வரச் சொல்லவில்லை. அவராகத்தான் வந்தார்..."

"அவனாக எதற்கு இங்கே வந்தான்...?"

"என்னை பார்ப்பதற்காக..."

"உன்னை ஏன் அவன் பார்க்க வேண்டும்...?"

அபர்ணா விடாமல் கேள்விக் கணைகளை தொடுத்துக் கொண்டிருக்க சரயு ஆயாசமாக நிமிர்ந்தாள்...

"அபர்ணா... இப்படிக் கேட்டால் நான் எப்படிப் பதில் சொல்ல...? நீ சொன்னதால் அவருக்கு நான் பதில் கூடப் போடுவதில்லை..."

"அவன் போட்ட கடிதங்களை நான் உன்னைப் படிக்கக் கூட விடவில்லை... அதனால் நீ பதில் போடவில்லை... அதைச் சொல்லாமல் விட்டு விட்டாயே..."

"அதுதான் இப்போது நீயே சொல்லி விட்டாயே..."

"இது நல்லதுக்கில்லை சரயு... சொல்வதைக் கேள்..."

"நீ சொல்லி எதை நான் கேட்காமல் போனேன் அபர்ணா..." சரயுவின் குரலில் சோர்வு தெரிந்தது... எதையோ சொல்ல வாய் திறந்த அபர்ணா... பேசாமல் சாப்பிட ஆரம்பித்தாள்...

"அப்புறம் என்ன சொன்னார்...?" ஆர்வமாய் கேட்டாள் யமுனா...

அவளால் இந்திரஜித் சரயுவைத் தேடி வந்துவிட்டதை நம்பவே முடியவில்லை...

"இவ்வளவுதான் சொன்னார் யமுனா..." சரயு ரகசியக் குரலில் சொல்லிவிட்டு வீட்டுக்குள் ஒருதரம் பார்த்துக் கொண்டாள்...

"அம்மா... பின்பக்கம் இருக்கிறாங்க... பயப்படாதே... நான் பார்த்து விட்டுத்தான் வந்தேன்... ஆனால் அக்கா... எவ்வளவோ நடந்திருக்கிறது... நீ... இவ்வளவுதான்னு இவ்வளவு சாதாரணமாய் சொல்கிறாயே..." யமுனாவின் கண்கள் ஆச்சரியத்தில் பளபளத்தன.

அவர்கள் இருவரும்... வீட்டின் முன்பக்க வாயில் பகுதியில் நின்று கொண்டிருந்தார்கள்... வீட்டு வாசலைச் சுற்றி வேலித்திடல்

போடப்பட்டு... அதில் வரிசையாய் பூச்செடிகள்... பூத்துக் குலுங்கின... வாசலில் இருந்து பார்க்கும்போது... தூரத்தில் கொட்டிக் கொண்டிருந்த அருவி... கிட்டத்தில் தெரிந்தது...

'இந்திரஜித் கூட இப்படித்தானே... இப்போது மிக அருகில்... தொட்டுவிடும் தொலைவில்... கைக்கெட்டும் தூரத்தில் இருப்பவன்... நெருங்கிப் போகப் போக... விலகிப் போய் விடுவானோ...'

சரயு மனச் சஞ்சலமடைந்தாள்... யமுனாவிற்கு அதைப் பற்றிய சிந்தனைகள் இருப்பதாகவே தெரியவில்லை... அவள் இந்திர ஜித்தின் வருகையைக் குறித்த தன் ஆச்சரியத்தை வெளிப்படுத் தினாளே தவிர... அவன் கிடைப்பானா... மாட்டானா... என்ற சந்தேகத்திற்குள்ளேயே அவள் போகவில்லை.

ஒரு கணம் தங்கையைப் பார்த்து சரயுவிற்கு பொறாமையாக இருந்தது... இவளைப்போல நிச்சிந்தையான மனம் தனக்கிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது...

'இவள் பிரச்னையின் வெளியே இருக்கிறாள்... அதனால் தான் இவ்வளவு சந்தோசமாய் இதைப் பற்றிப் பேச முடிகின்றது... என்னைப்போல... பிரச்னையின் உள்ளே இருந்திருந்தால்... இவளுட சந்தோசத்தை தொலைத்திருப்பாள்... இது சரியா... தவறா... என்று சஞ்சலப்பட்டுக் கொண்டு இருந்திருப்பாள்...'

நினைவுகள் ஓடிக் கொண்டிருக்கும்போதே... அவளது மனத்திரையில் இந்திரஜித் தோன்றினான்...

'நான் உனக்குப் பிரச்னையா...?' என்று கேட்டான்.

'இல்லை...' சரயு கண் மூடிக் கொண்டாள்..

'நீங்கள் எனக்குப் பிரச்னை இல்லை... நான்தான் எனக்குப் பிரச்னை... என் வீடு... என் தோழி... என்னைச் சுற்றியிருக்கும் இந்தச் சமூகம்... இவர்களை எப்படி எதிர்கொள்வது என்பதுதான்... எனக்குப் பிரச்னை...' சரயு தலையைப் பிடித்துக் கொள்வதைப் பார்த்து யமுனா...

'களுக்...' கென்று வாய் பொத்தி சிரித்தாள்...

"ஏண்டி சிரிக்கிற...?"

தலையைப் பிடித்துக் கொண்டால் எப்படிக்கா...

"இப்போதே தலையைப் பிடித்துக் கொண்டால் எப்படிக்கா... இன்னும் நீ சந்திக்க வேண்டியது எத்தனையோ இருக்கிறதே..."

"ஆரம்பமே பயமாய் இருக்கிறது... நீ இதை இன்னும் வளர்த்துக்கச் சொல்கிறாயா..."

"நான் சொல்லாவிட்டால் இது இன்னும் வளராதா...?"

"நான் பேசாமல் இருந்து விட்டால் வளராது என்கிறாள் அபர்ணா..."

"அப்படியா... அதையும் பார்ப்போம்..."

யமுனா கேலியாகச் சொல்லி வாய் மூடுமுன்னால்... சரயுவின் கையில் இருந்த செல்போன் ஒலித்தது...

"இது யார்டி... புது நம்பராய் இருக்கிறதே..."

"பேசிப் பார்... தெரிந்துவிடும்..."

யமுனாவின் புன்னகை வலுத்ததைக் கேள்வியுடன் நோக்கியபடி சரயு... செல்போனில் பேச ஆரம்பித்தாள்..

"ஹலோ..."

"சரயு...?"

"ஆமாம்... நீங்கள்...?"

"இந்திரஜித்..."

"நீங்களா...?"

சரயுவிற்கு சற்றுமுன் தலையைப் பிய்த்துக் கொள்ள வைத்த சஞ்சலங்கள் அனைத்தும் சட்டென்று மறந்துவிட்டது... அவளது உடலில்... புத்துணர்வு பாய்ந்தது... விழிகள் பளபளக்க... குரலில் உற்சாகம் தொனிக்க...

"என் நம்பர் எப்படி உங்களுக்குத் தெரிந்தது...?"

மறுமுனையில் அவனுடைய உல்லாசச் சிரிப்புக் கேட்டது...

"மக்கு... மக்கு.. எப்படித்தான் நீ குழந்தைகளுக்கு பாடம் சொல்லித் தருகிறாயோ... உன் பிரண்ட் என்னைக் கண்டுபிடித்து விட்டாள்... உன்னால் கண்டுபிடிக்க முடியவில்லையா...?"

காதல் என்பது எவ்வளவு பெரிய புத்திசாலியையும் முட்டாளாக்கி விடும் வல்லமை படைத்தது என்பதை அறியாத சரயு... அவன் தன்னை 'மக்கு...' என்று அழைத்ததற்காக ரோசப்படுவதிற்குப் பதில்... உரிமையோடு தன்னைத் திட்டுகிறானே... என்று மகிழ்ந்து போனாள்...

"நிஜமாகவே எனக்கு எப்படின்னு தெரியவில்லை..."

"இன்றைக்கு மதியம் உன் செல்போனிலிருந்து நான் யாருக்கு கால் பண்ணினேன்னு நினைக்கிறாய்...? என் நம்பரைக் கூப்பிட்டேன்... உன் நம்பரை என் செல்போன் உள் வாங்கி பாதுகாத்துக் கொண்டது..."

"ஓ... அதனால்தான்... அபர்ணா... என்னை ஏன் செல்போனை எடுத்து முட்டாள்போல நீட்டினாய்ன்னு திட்டினாளா...?"

சரயு... தன்னையறியாமல் சொல்லிவிட... மறுமுனை ஒருகணம் மௌனமானது... பின்... ஆழ்ந்த குரலில் அவன் கேட்டான்...

"ஸோ... எனக்குப் பதில் போடுவதை உன் பிரண்ட் தடுத்து விட்டாள்... இல்லையா...?"

'கண்டுபிடித்து விட்டானே...' சரயு... உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

"உண்மையில் அபர்ணாவிற்கு உங்கள் மேல் கோபமோ... வெறுப்போ இல்லை... என்மேல் அதிகமாக அக்கறை காட்டுகிறாள்... அவளை நீங்கள் தவறாக நினைத்து விடக்கூடாது..."

"அபர்ணாவைப் பற்றி நான் நினைப்பது இருக்கட்டும்... என்னைப் பற்றி... நீ என்ன நினைக்கிறாய்...?"

நேரடியாகத் தாக்கிய இந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்லுவது என்று யோசிக்கும் போதே... இந்திரஜித் தன்னை ஒருமையில் 'நீ...' என்று விளிப்பது... சரயுவின் புத்திக்கு அப்போதுதான் உறைத்தது...

# 9

**'காதல் என்பது வெட்ட வெட்ட தழைக்கும் விருட்சத்தைப் போன்றது...'**

**யா**ரோ... எப்போதோ... சொன்னது... காற்று வாக்கில் நுழைந்து சரயுவின் நினைவில் அமிழ்ந்திருந்தது... இப்போது மேலே எழுந்து வந்து நின்றது...

அவள் இந்திரஜித் கேட்டதற்கு என்ன பதிலைச் சொல்வது என்பதைப் புரியாதவளாய் மலைத்தாள்...

இது ஒருவிதமான புதிய அனுபவம்தான்... அவனை... அவளது மனம் தேடுவது உண்மைதான்... அவனது பெயரை உச்சரிக்கும் வாயும்... நினைக்கின்ற இதயமும் இனிப்பது பொய்யில்லைதான்... அவளைத் தேடி அவன் வந்து விட்டதில்... அவள் இறக்கையில்லாமல் வானத்தில் பறக்கிறாள்தான்... அவனை மறக்க நேர்ந்தாலோ... இல்லை துறக்க நேர்ந்தாலோ... அவள் துடித்துப் போய் விடுவாள்தான்... அவனில்லாத வாழ்வை நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்குகிறதுதான்...

ஆனால்... இதையெல்லாம் எப்படி அவனிடம் வாய் விட்டுச் சொல்வது...?

எனவே சரயு மௌனம் சாதித்தாள்...

"ஏன் பதில் சொல்ல மாட்டேன் என்கிறாய் சரயு..." அவன் மென்மையாக வினவினான்...

"என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை..." சரயு தயக்கத்துடன் கூறினாள்...

"என்ன பதில் சொல்வதுன்னு தெரியவில்லையா...? இல்லை... நான் என்ன கேட்கிறேனென்றே தெரியவில்லையா...?" இந்திரஜித் அழுத்தமான குரலில் வினவினான்...

"ப்ளீஸ்... சாதாரணமாகப் பேசுங்களேன்..."

"புரியவில்லை..."

"இந்த வேகம் வேண்டாமே..."

"ஏன்...? எனக்கு எதையும் மெதுவாக செய்யும் பழக்கமில்லை..."

"எனக்கும் இது பழக்கமில்லை..."

"எது...?"

"எனக்குச் சொல்லத் தெரியவில்லை..."

"உன்னால் சொல்ல முடியவில்லை..."

"உங்களைப் போல் நான் அறிவாளியில்லை..."

"நானா அறிவாளி...? உன் எழுத்தைக் கண்டு காதல் கொண்டு உன்னைத் தேடிவந்து நிற்கும் நான் அறிவாளியா...? இல்லை... அதைப் புரிந்தும் புரியாதவள் போல்... கண்டும் காணாமல் நடிக்கும்... நீ அறிவாளியா...?

இந்திரஜித்தின் குரல் கோபமாய் ஒலித்தது... அதைக்கேட்ட சரயுவின் மனம் வலித்தது... அவளது விழியோரம் கண்ணீர் முத்துக்கள் தோன்றின... இமைகளைச் சிமிட்டி... அவை கன்னத்தில் உருண்டு விடாமல் தடுத்து நிறுத்தியள்... தங்கையை விட்டு நகர்ந்து... வாசலின் கேட்டருகே சென்று நின்று கொண்டாள்... மாலை மயங்கி இருள் சூழ்ந்து கொண்டிருந்த அந்த வேளையில்... அவளின் குரல்... வேதனையுடன் வெளிப்பட்டது...

"நான் நடிக்கிறேனா...?"

"பின்னே... இல்லையா...?"

"நிச்சயமாய் இல்லை... எனக்கு நடிக்கத் தெரியாது..."

"ஆனால் மனதை ஒளிக்கத் தெரியும்..."

"ஒளித்து என்ன செய்யப்போகிறேன்...? என் மனதை வேறு யாரிடமும் கொடுத்து விடப் போகிறேனா...?"

"உன்னால் அது முடியாது..."

இந்திரஜித்தின் குரல் கர்வத்துடன் ஒலித்தது... அந்தக் கர்வத்தில் சரயு தன்னை இழந்தாள்...

'என்ன மாதிரியான ஆளுமை இது... உன் மனது எனக்குச் சொந்தம்... அதை வேறு யாருக்கும் கொடுத்துவிட உன்னால் முடியாது

என்று ஆணவத்துடன் சொல்லும் இவன்யார்...? நான் யார்...? இவனது படைப்பைத் தெரியும்... அது பிரதிபலிக்கும் உணர்வைத் தெரியும்... இவனுடைய எழுத்தையும் தெரியும்... இவனை இன்று மதியம்தான் நேரில் பார்த்திருக்கிறேன்... அதற்குள்... ஏழேழு ஜென்மமாய் இணைபிரியாமல் இருந்தவனைப் போல... இப்படி ஒரு உரிமை பாராட்டுகிறானே...'

வீட்டுக்குள்ளிருந்து பார்வதி அழைக்கும் குரல் கேட்கவும்... சரயு தவிப்புடன் யமுனாவைப் பார்த்தாள்...

'நான் பார்த்துக் கொள்கிறேன்... நீ பேசு...' என்ற பாவனையில் கையாட்டிவிட்டு... யமுனா வீட்டிற்குள் விரைந்தாள்... தனித்து விடப்பட்ட சரயு... இருளின் போர்வைக்குள் மறைந்து நின்று கொண்டாள்...

"என்ன சத்தம்...?" இந்திரஜித் விசாரித்தான்...

"அம்மா கூப்பிடுறாங்க..." சரயு முணுமுணுத்தாள்...

"ஓ... நீ போய் விடுவாயா....?"

"இல்லை... யமுனா போயிருக்கிறாள்..."

"யார்... அது... யமுனா...?"

"என் தங்கை..."

"ஓ ... உன் கூடப் பிறந்தவங்க இன்னும் யார் யார்...?"

"இன்னும் நிறையபேர் இருந்தால் வீடு தாங்காது... நாடும் தாங்காது... நானும்... என் தங்கையும் மட்டும்தான்... அவ்விடத்தில் எப்படி...?"

"இவ்விடத்திலும் இரண்டு பேர்தான்... நானும்... என் அக்கா மாலதியும்... அக்காவிற்கு மேரேஜ் ஆகிவிட்டது. அக்காவின் ஹஸ்பெண்ட்... பெங்களூரில் சாப்ட்வேர் இஞ்ஜினியர்... இரண்டு பையன்கள்..."

"அப்படியா...?"

காதலில் இது அடுத்து வரும் நிகழ்வு... ராமன்... குகனைக் கட்டிப் பிடித்து... 'நின் சுற்றம்... இனி என் சுற்றம்...' என்று சொன்னதைப் போல்... காதலிலும்... மனதைப் பறிகொடுக்கும் இருவரும்... தங்களின்

காதலை நேசிப்பது போல... காதலின் சுற்றத்தையும் நேசிக்க ஆரம்பிப்பார்கள்...

சரயுவும்... இந்திரஜித்தின் சுற்றத்தை நேசிக்க ஆரம்பித்தாள்...

"அப்பா... என்ன செய்கிறார் சரயு...?"

இந்திரஜித் உரிமையாக வினவிய விதத்தில் சரயு வசீகரிக்கப் பட்டாள்.

"டீத்தூள் தயாரிக்கும் கம்பெனியில் சூப்பர்வைஸர்..."

"ஐஸீ... யமுனா என்ன படிக்கிறாள்...?"

"பிஎஸ்ஸி... உங்க அக்கா பையன்கள் என்ன படிக்கிறாங்க...?"

"முதல் வாண்டு எல்கேஜி... இரண்டாவதுக்கு இப்போதுதான் ஒருவயது ஆகிறது..."

"இரண்டு குழந்தைகளும் உங்கள்மேல் பாசமாக இருப்பாங்க இல்லையா...?"

"எங்கே...? அவர்களுக்கு என் முகமே தெரியாது... இப்போது கூட இந்த மன்த் எண்டில் அக்கா குழந்தைகளுக்கு காது குத்து நடக்கப் போகிறது... பட்... என்னால் போக முடியாது..."

"ஏன்...? நீங்கள்தானே... தாய்மாமன்?"

"நேரம் வேண்டாமா சரயு...?"

"என்னைப் பார்க்க வரமட்டும் எப்படி நேரம் கிடைத்தது...?"

சரயு பட்டென்று கேட்டு விட்டாள்... இந்திரஜித் உடனே பதில் சொல்லவில்லை...

"இரண்டும் ஒன்றில்லை சரயூ... உன்னை இன்றைக்குப் பார்த்ததினால்தான்... என்னால்... மதியத்திற்கு மேல் போய் ஷூட்டிங் நடத்த வேண்டிய லொகேசன்களைப் பார்த்து முடிவு செய்ய முடிந்தது... இப்போது உன்னோடு பேசிக் கொண்டிருப்பதால்... நைட் எழுதவேண்டிய ஸ்கிரிப்டை ஒழுங்காக எழுதி முடித்து விடுவேன்..."

"இல்லாவிட்டால்...?"

"என்னால்... என் வேலைகளை சரியாய் செய்ய முடியாது..."

"ஏன்... அப்படி?"

"அது அப்படித்தான்... ஏன்... உனக்கும் இப்படித்தான்... என்ன ஒன்று... நான் வாய்விட்டு இதைச் சொல்கிறேன்... நீ சொல்ல மறுக்கிறாய்..."

சரயு மீண்டும் உதட்டைக் கடித்துக் கொண்டாள்... இவன் பேசுவதைப் போல அவளும் எப்படிப் பேசுவது...?

"நீங்கள் சாப்பிட்டு விட்டிங்களா...?" பேச்சை மாற்றினாள்...

"இப்போதேவா... என்ன விசயம்...? பேச்சை மாற்றுகிறாயா?"

'கண்டுபிடித்து விட்டான்...'

அவளது உதடுகளில் இளநகை உதித்தது...

"என்னவோ... கேட்கத் தோன்றியது... கேட்டேன்..."

"இதைமட்டும்தான் கேட்கத் தோன்றியதா? வேறு எதையும் கேட்கத் தோன்றவில்லையா...?"

"டைரக்டர் சார்... நான் வெறும் டீச்சர்தான்... உங்களைப் போல கதாசிரியர் இல்லை... எனக்கு இப்படியெல்லாம் பேசினால் புரியாது... பேசவும் தெரியாது.."

"தோடா... 'உங்கள் குண இயல்பு என்னை வசீகரிக்கிறது' எழுதியது யார்...? இந்த டீச்சர்தானே..."

"அடேங்கப்பா... உங்களிடம் பேசி ஜெயிக்க என்னால் முடியாது..."

"ஆனால்... என் மனதை ஜெயிக்க உன்னால் மட்டுமே முடியும்..."

"வேறு பேசுங்களேன்..."

"ஏன்...?"

"ப்ளீஸ்..."

"எனக்குக் காரணம் வேண்டும்..."

சரயு யோசித்தாள்... புகழேந்தி வரும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது... வெளியில் குளிர் அவளுடைய உடலைத் துளைத்தது... அதிகநேரம்... யமுனாவினால் பார்வதியைச் சமாளிக்க முடியாது...

எந்த நேரமும் அவள் பெரிய மகளைத் தேட ஆரம்பித்து விடுவாள் என்பதை சரயு உணர்ந்தே இருந்தாள்... இந்திரஜித்திடம் ஓரிரு

நீடிடங்களில் பேச்சை முடித்தாக வேண்டிய கட்டாயத்தில் இருந்ததால் சரயு... மென்மையாகக் கூறினாள்...

"நீங்கள் ஒரு டைரக்டர்... கதாசிரியர்... கதாபாத்திரங்களை உருவாக்குபவர்... நான் சொல்வதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்... புரிந்து கொள்ள வேண்டும்..."

"சொல்லு..."

"ஒரு கதையை உருவாக்க நீங்கள் கால அவகாசம் எடுத்துக் கொள்ள மாட்டீங்களா...? அதைப்போல்... நமக்குள் இருக்கும் இந்த உறவு என்ன என்பதை நாம் உணர்ந்து கொள்ளவும் கால அவகாசம் வேண்டாமா...?"

"நான் வேண்டிய அளவிற்கு யோசித்து விட்டேன் சரயு..."

"நான் யோசிக்க வேண்டாமா...?"

"யோசித்து... நான் வேண்டாமென்று சொல்லிவிடுவாயா...?"

'அது என்னால் முடியுமா...?' சரயுவின் இதயம் குலுங்கியது.

"எதுவாக இருந்தாலும்... நாம் பொறுமையாக ஒரு முடிவுக்கு வருவோம்..."

"எதுவரை நான் பொறுப்பது...?"

"நீங்க... இந்த ஏணாறில் இன்னும் எவ்வளவு நாள் இருப்பீங்க...?"

"அறுபது நாள்..."

"இன்றிலிருந்து... அறுபது நாள்கள்வரை நாம் பழகிப் பார்க்கலாம்... அறுபதாம் நாள்... நீங்கள் இங்கிருந்து கிளம்பும் போது... நான் என் முடிவைச் சொல்லி விடுகிறேன்... இப்போது போனை வைத்து விடவா...?"

"அதற்குள்ளாகவா?"

"அப்பா வரும் நேரம்... ப்ளீஸ்..."

அவன் பதில் சொல்லாமல் போனை அணைத்தான்... சரயு... உள்ளே போக மனமில்லாமல் இருளிலேயே சிறிது நேரம் நின்று கொண்டிருந்தாள் அவளுடைய மனம் நிரம்பித் ததும்பியது...

# 10

**'தூங்காத கண்ணொன்று ஒன்று...**
**துடிக்கின்ற சுகமென்று ஒன்று...**
**தாங்காத மனமென்று ஒன்று...**
**தந்தாயே நீயென்னைக் கண்டு...'**

முன்னறையில் மெல்லிய வெளிச்சம் தெரிந்தது... இரவு தூங்குவதற்கு முன்னால்... பழைய திரைப்படப் பாடல்களை பார்க்கும் வழக்கம் கொண்ட புகழேந்தியும்... பார்வதியும்... ஒலிக்க விட்டிருந்த திரைப்படப் பாடல்... சரயுவின் காதுகளில் நுழைந்தது... அவள் தூக்கமின்றி புரண்டு படுத்தாள்...

"அருமையான சிச்சுவேஷன் சாங்... இல்லையா அக்கா..." அவள் காதோரம் யமுனா முணுமுணுத்தாள்...

"என்னவோ போடி... எனக்கென்னவோ மனதிற்குள் பதக்... பதக்கென்று இருக்கிறது..."

"ஏன் அப்படி பீல் பண்ணுகிறாய்...? வைரமுத்துவின் கவிதையை படித்திருக்கிறாயா...? அவர் சொல்லியிருக்கிறார்...

**காதலித்துப் பார்...**
**சொர்க்கமோ... நரகமோ...**
**இரண்டில் ஒன்று தெரிந்து விடும்...**

என்று. நீயும் காதலித்துப் பார்..."

"சொர்க்கம் வந்து விட்டால் பரவாயில்லை..."

"நெகடிவ்வாக ஏன் நினைக்கிறாய்...? பாஸிட்டிவ்வாகவே நினை..."

"அப்பா... அம்மாவிற்கு தெரிந்தால்... என்னைப் பற்றி என்ன நினைப்பாங்க...?"

"இப்படி அம்மா என்ன நினைப்பாங்க... அப்பா என்ன நினைப்பார்... அபர்ணாக்கா என்ன நினைப்பாங்கன்னு மத்தவங்க

நினைப்பைப் பற்றியே கவலைப்படுவதை விட்டுவிட்டு... நீ என்ன நினைக்கிறன்னு உன் நினைப்பைப் பற்றி மட்டுமே யோசி...”

“அது சுயநலமில்லையா...?”

“காதலில் பொதுநலமெல்லாம் எடுபடாதுக்கா... சுயநலம் மட்டும்தான் நிற்கும்... இப்போ... இந்திரஜித் உன் கண் முன்னாடியே... என்னிடம் கடலை போட்டாருன்னு வை... உன்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியுமா? என்ன இருந்தாலும் நம்ம தங்கைதானே... போகட்டும்ன்னு விட்டுக் கொடுத்து ஒதுங்கிக் போனால் கொள்வாயா...”

“அடிப்பாவி... இப்படிவேறு நினைவிருக்கா உன் மனசில்...?”

“பார்த்தாயா... வெறும் வாய் வார்த்தைக்கே கொதித்துப் போய் விட்டாயே... இதைத்தான் சுயநலம்ன்னு சொன்னேன்... ஏன் பொதுநலம் பார்ப்பவள்... பொறுத்துப் போக வேண்டியது தானே...”

“நீயாடி இப்படியெல்லாம் பேசுகிற...?”

“நானேதான்... உன்னை உனக்கு உணர்த்த வேறு வழி எனக்குத் தெரியவில்லையே... ‘என் காதலன்தான்... எனக்கு மட்டும்தான்’னு நினைப்பதுதான் சுயநலம்... ஸோ... காதல்ன்னு வந்துவிட்டால் அங்கே சுயநலம்தான் முன்னால் நிற்கும்... பொதுவுடைமைக் கொள்கைகளை... பார்சல் பண்ணி... அனுப்பி விட வேண்டும்.. புரிந்ததா?”

“ம்ம்... பெயரில்தான் நான் டீச்சர்... நீ ஸ்டூடன்ட்... இங்கே எல்லாமே தலைகீழ் பாடமாயிருக்கு...”

“என்ன டீச்சராயிருந்து என்ன பிரயோஜனம்... காதல் விவகாரத்தில் உனக்கு அரிச்சுவடி கூடத் தெரியவில்லையே...”

“இதையெல்லாம் எங்கேயிருந்துடி பேசக் கத்துக்கிட்ட...?”

“ஆமாமாம்... இதுக்குன்னு தனியாய் டியூசன் வைத்துக் கத்துக்கிட்டேன்... நல்லாக் கேள்வி கேட்கிற போ...”

“காலேஜில் போய் இதைத்தான் படித்துக்கிட்டு வந்தாயா?”

“ஏன் கேட்கமாட்டாய்...? ஒன்றும் தெரியாத ஊமைபோல இருந்துக்கிட்டு... ஆனானப் பட்ட டைரக்டரையே உன்னைத் தேடி

வர வைத்த கெட்டிக்காரி நீ... என்னைப் பார்த்து இதுவும் கேட்பாய்... இன்னமும் கேட்பாய்... இரண்டு மணி நேரமாய் செல்போனில் பேசிவிட்டுவந்து... மத்தவங்க நினைப்பைப் பத்தி யோசிக்கிற பாரு... இதுதான்... உலகத்திலேயே சிறந்த காமெடி..."

முன்னறையில் டிவி அணைந்தது... பார்வதி எழுந்து உள்ளே வர... அக்கா... தங்கை இருவரும்... அவசரமாய் பேச்சை நிறுத்திவிட்டு... கண்களை மூடிக் கொண்டார்கள்...

அபர்ணா வண்டியோட்டிய வேகத்திலிருந்தே அவளது கோபத்தின் பரிமாணம் தெரிந்தது...

"இப்ப ஏண்டி இவ்வளவு கோபமாய் இருக்கிற..." சரயு எதிர்காற்றில் முடிபறக்க வினவினாள்...

"ஏன்...உனக்குக் காரணம் தெரியாதா...?" அபர்ணாவின் குரலில் மிளகாயின் காரம் தெரிந்தது...

"இந்த கோபம் தேவையில்லாதது அபர்ணா... யோசித்துப் பார்த்தால் உனக்கே இது புரியும்... இந்திரஜித்தை நான் வரச் சொல்லவில்லை... அவர் தானாக என் முன் வந்து நிற்கிறார்... இன்னும் சொல்லப்போனால் அவருக்கு கடிதம் கூட நானாக எழுதவில்லை... நீதான் அட்ரஸ் கொடுத்து எழுதச் சொன்னாய்..."

"வெரிகுட் சரயு... கடைசியில் என்மீது பழியைப் போட்டு விட்டாய்..."

"நான் திட்டமிட்டு எதையும் செய்யவில்லை என்பதைத்தான் சொன்னேன் அபர்ணா... உன்மேல் பழிபோட நினைக்கவில்லை..."

"உனக்கு இந்திரஜித்தின் படங்களைத்தான் பிடிக்குமென்று நினைத்தேன்... அவரையே பிடிக்குமென்று அப்போது எனக்குத் தெரியாதே... தெரிந்திருந்தால் உன்னை கடிதம் எழுதச் சொல்லித் தூண்டியிருக்க மாட்டேன்..."

"இப்போது எதுவும் ஆகிவிடவில்லை அபர்ணா..."

"இன்னும் என்ன ஆகவேண்டும்? அவர் உன்னைத் தேடி ஸ்கூலுக்கு வந்து நின்று விட்டார்..."

"அதனால் என்ன...? இந்திரஜித் மரியாதைக்குரிய மனிதர்... மிகப்பெரிய திறமைசாலி... இதை நீயும் ஏற்றுக் கொண்டுதான் இருக்கிறாய்... இல்லாவிட்டால்... உன்னையறியாமல் 'அவன்... இவனென்று பேசி வந்தவரை... 'அவர்... இவரென்று சொல்வாயா...?"

அபர்ணாவிற்கு சரயு சொல்வதில் இருந்த உண்மை புரியத்தான் செய்தது... அவள் வண்டியின் வேகத்தைக் குறைத்தவாறு தோழியிடம் பேச்சைத் தொடர்ந்தாள்...

"என்னதான் இருந்தாலும்... இந்திரஜித்... மிகப்பெரிய படைப்பாளி... உலகத்தரம் வாய்ந்த தமிழ் படங்களை... இயக்கும் இயக்குநர்... இதிலெல்லாம்... எனக்கு சந்தேகம் இல்லை சரயு... அவரிடம் நீ ஒரு ரசிகையாய் நின்று பேசுவதில் தவறில்லை..."

"அவருக்கு நான் இன்னும் ரசிகைதான் அபர்ணா..."

"அவருடைய படங்களுக்கு நீ ரசிகையா...? இல்லை... அவருக்கே நீ ரசிகையா..."

"இரண்டும் தான்..."

சரயு தெளிவாகப் பதில் கூறினாள்... அபர்ணா வண்டியை 'கிறீச்...' என்ற சத்தத்துடன் பிரேக் பிடித்து நிறுத்தினாள்...

"ஏன் வண்டியை நிறுத்திவிட்ட அபர்ணா..."

"முதலில் இறங்குடி... உன்னிடம் பேச வேண்டியதை பேசிவிட்டு வண்டியை ஓட்டுகிறேன்... நீ படுத்துற பாட்டுக்கு உன்னிடம் கத்திக்கொண்டே வண்டியை ஓட்டினால்... நிச்சயம் ஆக்ஸிடென்ட் பண்ணி விடுவேன்..."

"கூல் டவுன் அபர்ணா..."

"நான் கூலாவது இருக்கட்டும்... உனக்கு எங்கிருந்து இந்த தைரியம் வந்தது...?"

"நான் சொல்வதைப் பொறுமையாகக் கேள் அபர்ணா..."

"என்னத்தைச் சொல்லப் போகிறாய்? எங்கள் காதல் தெய்வீகக் காதல்னு பினாத்தப் போகிறாய்... அறிவு கெட்டவளே... மின்மினியைப் போய்... கலங்கரை விளக்காய் நினைத்துக் கொண்டு... கடலில் இறங்கப் பார்க்கிறாயே... வேண்டாம் சரயு... இதன் பின்விளைவுகளை நீ தாங்க மாட்டாய்..."

அபர்ணாவின் விழிகளில் பயம் கலந்த தவிப்பு தெரிந்தது.. சரயுவினால்... அவளை அலட்சியம் பண்ண முடியவில்லை.. அதேசமயம்... அவளுடைய கட்டுப்பாட்டில் அடங்கவும் அவளுக்கு விருப்பமில்லை...

தான் சொல்வதை தோழி புரிந்துகொள்ள வேண்டுமே என்ற பரிதவிப்புடன் சரயு... அபர்ணாவின் கண் பார்த்து நேராக பேசினாள்..

"அபர்ணா... நான் குழந்தையில்லை... எனக்கும் நல்லது... கெட்டது தெரியும்... அதைத் தீர்மானிக்கும் வயதில்தான் நான் இருக்கிறேன்... இந்திரஜித்... நான் எட்டித் தொட முடியாத உயரத்தில் இருப்பவர்... நான் சாமானியப் பெண்... மிடில் கிளாஸ் குடும்பத்தைச் சேர்ந்தவள்... இது எல்லாமே எனக்குத் தெரியும்... நான் இந்திரஜித்தை தேடிப்போய் காதல் சொல்லவில்லை... அவர்தான் என்னைத் தேடிவந்து காதல் சொல்லியிருக்கிறார்..."

"அதையும் சொல்லி விட்டாரா...?"

"ம்ம்ம்..."

"எப்போது...?"

"நேற்று சாயந்திரம்... செல்போனில் பேசினார்..."

"நினைத்தேன்... இது இங்கு வந்துதான் முடியுமென்று..."

"அபர்ணா! அவர்தான் என்னிடம் காதல் சொல்லியிருக்கிறார்... நான் இன்னும் பதில் சொல்லவில்லை... அவகாசம் கேட்டிருக்கிறேன்..."

"எத்தனை நாள்...?"

"அவர் இங்கே அறுபது நாள்கள் தங்குவாராம்... அறுபதாம் நாள் கடைசியில் அவர் கிளம்பும்போது என் முடிவைச் சொல்லுகிறேன்னு சொன்னேன்..."

"சரயு..."

"கவலைப்படாதே அபர்ணா... என்னைக் காத்துக்கொள்ள எனக்குத் தெரியும்... அதேசமயம்... என்னைப் பற்றியும் கொஞ்சம் யோசி... என் மனம் கல்லினாலும்... இரும்பினாலும் செய்யப்பட்டதில்லை... அது இந்திரஜித்தைக் கண்டதும் பாகாய் கரைந்து

உருகுகிறது... மனம் போன போக்கில் நான் போகாவிட்டாலும்... என் மனதின் உணர்வுகளை... மொத்தமாய் குழி தோண்டிப் புதைக்கவும் என்னால் முடியவில்லை... எனக்கு இந்திரஜித்தைப் பிடிக்கும் அபர்ணா.. ரொம்பப் பிடிக்கும்... அவரைக் கை நழுவி விட்டுவிட்டு... அதற்குப் பின் நான் வாழ்ந்தால்... அந்த வாழ்க்கை வாழ்க்கையாக இருக்குமா அபர்ணா...? ஒரு நொடி வாழ்ந்தாலும் மனதுக்குப் பிடித்தவனோடு சந்தோசமாக வாழ்ந்துவிட வேண்டும். அதுதான் வாழ்க்கை..."

இப்படிப் பேசுபவளிடம் எப்படி மறுத்துப் பேசுவது...? அபர்ணா... தன் தோழியை இமைக்காமல் பார்த்தாள்...

"நீ இவ்வளவு தெளிவாய்ப் பேசும்போது... இனி நான் சொல்ல என்ன இருக்கிறது சரயு...? இது உன் வாழ்க்கை... நீ வாழ்ந்து பார்... எப்படியோ... ஒன்றைமட்டும் தெரிந்துகொள்... நீ உன் காதலில் ஜெயித்து... இந்திரஜித்தின் கை பிடித்தால் மற்ற எல்லோரையும் விட நான் அதிகமாக சந்தோசப்படுவேன்... ஒருவேளை தோற்றுவிட்டால்..."

அபர்ணா... வார்த்தைகளை முடிக்க முடியாமல் பாதியில் நிறுத்த... சரயு... அவளின் தோள் சாய்ந்து கொண்டாள்...

"தோற்றுவிட்டால்... தோள் கொடுக்க நீயிருப்பாய் அபர்ணா..."

அபர்ணா நெகிழ்ந்து போய் சரயுவின் தோள் வளைத்து அவளை அணைத்துக் கொண்டாள்... அவளது கண்கள் பனித்திருந்தன...

**அ**ன்று மாலை இந்திரஜித்... அவளைத் தன் காரில் ஏறிக் கொள்ளச் சொல்லிக் கேட்டான்... அபர்ணாவிடம் கை அசைத்துவிட்டு... இந்திரஜித்தின் அருகே அமர்ந்தாள் சரயு. கார் மூணாறு சாலையில் விரைந்தது...

சென்னையில் பிறந்து... வளர்ந்து... வெளிநாட்டில் படித்து... சிகரங்களைத் தொட்டு... உலகப்புகழ்பெற்ற இளைஞன்... மூணாறு மலையின் எல்லையைத் தாண்டாத பள்ளி ஆசிரியையின் பூப்போன்ற தன்மையில் மனதைப் பறிகொடுத்து காதலிக்க ஆரம்பித்தான்...

# 11

சின்னச்சின்ன மூங்கில்களால் கட்டப்பட்ட அந்த தொங்கு பாலத்தை சுவராஸ்யமாய் பார்த்தான் இந்திரஜித்...

"வாவ்... எவ்வளவு அழகாய் இருக்கிறது சரயு..."

"இது ஒருவகையில் இந்த மூணாறில் நடந்த ஒரு துயரச் சம்பவத்தின் நினைவுச் சின்னம் சார்..."

"நீ இந்த சாரை விடமாட்டாயா...?"

"வேறு எப்படி உங்களைக் கூப்பிடுவது?..."

"எனக்கென்று பெயரே இல்லையா...?"

"இப்போது பெயர் சொல்லிக் கூப்பிட்டால் மற்றவர்கள் முன்னாலும் வாய் தவறி அதுவே வந்துவிடாதா...?"

"வந்தால் என்ன...?"

"ஊஹூம்... அது நன்றாக இருக்காது..."

"எது...? என் பெயரா...?"

சரயு அடக்க மாட்டாமல் சிரித்து விட்டாள்... சிரிக்கும் போது மெல்லிய உதடுகள் விரிந்து பளீரிட்ட புன்னகையை ரசித்தவன்... அவளுடைய கண்களும் சேர்ந்து சிரிப்பதை வியப்புடன் கவனித்தான்...

"உங்கள் பெயருக்கென்ன சார்... இந்திரஜித்... எவ்வளவு கம்பீரமான பெயர்..."

"அப்புறம் ஏன் பெயர் சொல்ல மாட்டேன் என்கிறாய்..."

"சாரை வேண்டுமானால் விட்டு விடுகிறேன்... பெயர் சொல்லிக் கூப்பிடுவதைப் பற்றி அப்புறமாய் யோசிக்கலாம்..."

"எப்புறமாய்...?"

"ம்ம்... அறுபது நாள்களுக்குப் பிறகு..."

இந்திரஜித்தின் முகம் கடினமானது... அவன் பேசாமல்... அந்த தொங்கும் பாலத்தில் ஏறி... நடக்க ஆரம்பித்தான்... சரயுவிற்கு அவனுடைய மாற்றம் வருத்தத்தைக் கொடுத்தது...

"இந்தப் பாலத்தின் கதை தெரியுமா...?"

"தெரியாது... சொல்லு..."

"இந்தப் பாலத்தில் பழுது இருந்திருக்கிறது... இதில் ஸ்கூலில் படிக்கும் குழந்தைகள் நிறைய பேர்... ஒன்றாக வந்தபோது இந்தப் பாலம் உடைந்து... குழந்தைகள் தண்ணீருக்குள்... பூக்குவியல்கள் போல் உதிர்ந்து விட்டார்களாம்..-"

"ஏய்ய்... என்ன சொல்கிறாய்...? நிஜமாகவே இதுபோல் நடந்ததா...?"

"எனக்குத் தெரியாது... ஆனால்... நிறைய வருசங்களுக்கு முன்னால் இந்தப் பாலம் உடைந்து... ஸ்கூலில் படித்த சின்னப் பிள்ளைகள்... ஆற்றில் விழுந்து இறந்து போனது உண்மை என்பது மட்டுமே தெளிவாகத் தெரியும்... மற்றபடி... ஒவ்வொருவரும்... இந்தப் பாலத்தைப்பற்றி ஒரு கதையைச் சொல்வாங்க..."

"கடவுளே... இந்தப் பாலத்திலா அப்படியொரு ஆக்ஸிடென்ட் நடந்தது...? எவ்வளவு அழகாய் இருக்கிறது..."

இந்திரஜித்... பாலத்தின் நடு மையத்தில் நின்றுகொண்டு கீழே ஓடிக்கொண்டிருந்த நதிநீரைப் பார்த்தான்... ஆற்றின் இரு கரைகளிலும் அடர்ந்து தெரிந்த பசுமையும்... நடுவே சுழித்தோடும் நதிநீரும்... அதைக் கடக்க உதவியை தொங்கு பாலமும்... காணக் காணத் தெவிட்டாத காட்சிகளாக இருந்தன...

'இங்கேயா... அந்த துயரச் சம்பவம் நிகழ்ந்தது...'

இந்திரஜித் வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தபோது... பாலத்தின் மறுகோடியில் அந்தப் பள்ளிச் சிறுமி தோன்றினாள்... கையில் பூங்கொத்து... இரட்டைப் பின்னலில்... ஸ்வெட்டர் அணிந்து பள்ளிச் சீருடையில் இருந்தாள்... சரயு... நதியின் மறுகரையை பார்த்துக் கொண்டிருந்தாள்... அவள் அந்தச் சிறுமியைப் பார்க்கவில்லை... அந்தச் சிறுமி... மெலிதான புன்சிரிப்புடன் இந்திரஜித்தின் அருகே வந்து நின்றாள்... ஏனோ... இந்திரஜித்தினால் அவள் மேலிருந்த பார்வையை அகற்ற முடியவில்லை...

அந்தச் சிறுமியின் முகம் வெளுத்திருந்தது... பால் போன்ற

வெண்மை... நிலவு முகம்... அவள் கண்களில் ஒளி வீசியது... அவள் பூங்கொத்தை இந்திரஜித்திடம் நீட்டினாள்...

"தேங்க்யு..." இந்திரஜித் பூங்கொத்தை மண்டியிட்டு அமர்ந்து வாங்கிக் கொண்டான்...

அதுவரை... நதியின் மறுபக்கம் பார்த்துக் கொண்டிருந்த சரயு... இந்திரஜித்தின் பேச்சுக்குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்... இந்திரஜித்திடம் பூங்கொத்தை கொடுத்துக் கொண்டிருந்த சிறுமி... சரயுவைப் பார்த்துப் புன்னகைக்க... இந்திரஜித் தானும் புன்னகைத்தபடி... சரயுவைப் பார்த்தான்... பார்த்தவன் திகைத்தான்...

'இவள் ஏன் இப்படிப் பயந்த பார்வையை பார்க்கிறாள்...'

சரயுவின் முகம் அதிர்ச்சிக்கு மாறியிருந்தது... அவள் அவசரமாய் ஒரு அடி பின்னால் எடுத்து வைத்தாள்... அந்தச் சிறுமி இந்திரஜித்திடம் கையாட்டிவிட்டு செல்ல ஆரம்பித்தாள்... இந்திரஜித் அவசரமாய் எழுந்து... சிறுமியை மறந்தவனாய் சரயுவின் அருகே சென்றான்...

"சரயு... சரயு..." அவன் அவளின் தோள் தொட்டதும்... அதற்காகவே காத்திருந்தது போல்... அவள் அவசரமாய் அவனைக் கட்டிக் கொண்டாள்... அவளுடைய உடல் நடுங்கிக் கொண்டிருந்தது...

. இந்திரஜித்தினால் அதை நம்பவே முடியவில்லை... பெயர் சொல்லி அழைக்கக் கூட மறுத்தவள்... இரண்டு அடி இடைவெளி விட்டு உடன் நடந்து வந்தவள்... விரல் தொட்டதற்கே விதிர்த்துப் போனவள்... தானாக வந்து கட்டித் தழுவுகிறாளா...?

இந்திரஜித்தின் உடலில் மின்சாரம் பாய்ந்த அந்தக் கணத்தில்... அவன் அவளுடைய உடல் நடுங்குவதை உணர்ந்து கொண்டான்...

'ஏன் இப்படி பயப்படுகிறாள்...' அவனுக்குப் புரியவில்லை...

"சரயு... என்னைப் பார்... ஏன் இப்படி பயப்படுகிறாய்...?" அவன் அவள் முகத்தை நிமிர்த்த முயன்றான்...

"இந்தர்..." அவள் நடுங்கிய குரலில் அவனை அழைத்தாள்...

'முதன் முதலாய் என்னைப் பெயர் சொல்லி அழைக்கிறாள்...'

அவன் கிறங்கிப் போனான்...

"சரயு... என் சரயு..." அவனது கரங்கள் அவளது முதுகின் மேல் படர்ந்தன....

அதை உணராதவளாக அவள் பயந்த குரலில் பதறினாள்...

"போய் விடலாம் இந்தர்... இந்த இடத்தை விட்டுப் போய்விடலாம்... எவ்வளவு சீக்கிரம் முடியுமோ... அவ்வளவு சீக்கிரமாய் போய்விடலாம்... ப்ளீஸ்..."

அவளது கூந்தலில் முகம் புதைத்து தன்னோடு இறுக்கி அணைத்து மெய் மறந்து நின்ற இந்திரஜித்திற்கு தூக்கி வாரிப் போட்டது... அவள் பயத்தினால் தன்னிடம் அடைக்கலம் புகுந்திருக்கிறாள்... காதலினால் அல்ல என்பது புரிந்ததும்... அவனுக்குள் எழுந்த கிறக்கம் மறைந்தது... அவன் அவளை சமாதானப்படுத்த முயன்றான்...

"எதற்காக இப்படிச் சொல்கிறாய்...? இந்த இடம் எவ்வளவு அழகாக இருக்கிறது... இதை இன்னும் கொஞ்ச நேரம் நின்று ரசித்துவிட்டுப் போகலாமே..."

"வேண்டாம்... போய்விடுவோம்... சொன்னால் கேளுங்கள் இந்தர்... நாம் இங்கே நிற்க வேண்டாம்..."

அவள் உடல் வெடவெடக்கப் பதறினாள்... இந்திரஜித் மேலும் கேள்வி கேட்காமல் அவளை அணைத்துப் பிடித்துக்கொண்டு பாலத்தின் மறுகோடியை நோக்கி நடந்தான்...

'அந்தக் குட்டிப் பெண் நின்று கொண்டிருந்தாளே...'

சிறுமியின் நினைவு வந்தவனாக திரும்பிப் பார்த்தான்... அவள் அதற்குள்... பாலத்தின் எதிர்முனைக்குப் போய்விட்டிருந்தாள்...

'எவ்வளவு அன்பாக சிரித்து பூங்கொத்தைக் கொடுத்தாள்... அவளிடம் பேசக்கூட முடியவில்லை...'

இந்திரஜித் அந்தச் சிறுமியைத் திரும்பிப் பார்த்துக்கொண்டு மனதிற்குள் நினைத்துக் கொண்ட அதே நொடியில்... அந்தச் சிறுமி அவனைத் திரும்பிப் பார்த்து கை அசைத்தாள்...

ஆச்சரியத்துடன் இந்திரஜித் பதிலுக்கு கை அசைத்தான்... அந்தச் சிறுமி... சரிவில் இறங்கி... கண் பார்வையிலிருந்து மறைந்து விட்டாள்...

இந்திரஜித்... சரயுவின் தோளை ஆதரவுடன் அணைத்தபடி... பாலத்தின் மறுகோடியை அடைந்துவிட்டான்... சற்றுத் தொலைவில் அவனது கார் நின்று கொண்டிருந்தது... சரயு இன்னும் பயத்திலிருந்து விடுபடவில்லை... அவளது நிலையை மாற்ற விரும்பிய இந்திரஜித்... அவளிடம் பேச்சுக் கொடுத்தான்...

"இதைத்தான் டெலிபதி என்பதாகச் சொல்லுவாங்களோ?"

"எதை..."

"ஒன்றுமில்லை சரயு... நீ திமிர் என்று பயப்படவும்... நான் உன்னைக் கவனித்துக்கொண்டு... என்னிடம் பூங்கொத்தை நீட்டிய அந்தச் சின்னப் பெண்ணை மறந்து விட்டேன்... அதனிடம் பேசக்கூட முடியவில்லையேன்று நினைத்துக் கொண்டே அதைத் திரும்பிப் பார்க்கிறேன்... அந்தக் குட்டிப் பெண்ணும் அதே செகண்டில் என்னைத் திரும்பிப் பார்த்து கை ஆட்டுது..."

"இந்தர்... இதைப் பற்றிப் பேச வேண்டாம்... காரை எடுங்கள்..."

சரயு அவசரமாய் காருக்குள் ஏறி அமர்ந்து கொண்டாள்... புரியாத பார்வையோடு இந்திரஜித் காரைக் கிளப்பினான்...

"நீ பயந்து போயிருக்கிறாய்... என் ரிஸார்ட்டிற்கு... வந்து கூடாய் ஒரு கப் டீ சாப்பிடு... சரியாகி விடும்..."

அவள் மறுப்புச் சொல்லப் போகிறாள் என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தபோது... அவள் சம்மதமாய் தலை அசைத்தாள்... இந்திரஜித் நம்பமுடியாமல் அவளை ஆச்சரிய பார்வை பார்த்தான்... அவளோ... அதை உணராதவளாய் ஜன்னல் வழி வெளியே வெறித்துப் பார்த்துவிட்டு... அவன் அருகே நகர்ந்து அமர்ந்து... அவனது கை வளைவில் கை கொடுத்து இறுக்கிக் கொண்டு அவனது தோள் வளைவில் முகம் புதைத்தாள்...

இந்திரஜித்திற்கால்... அவள் காட்டிய நெருக்கத்தைக் கண்டு அதிசயப்படாமல் இருக்க முடியவில்லை... அவனுக்குள் மோகத்தீ மூண்டது...

'இன்றைக்கு என்ன இவள்... என்றைக்குமில்லாத திருநாளாய் இந்த இழை... இழைகிறாள்... பரிசுக்கு மேல் பரிசாக அள்ளிக் கொடுக்கிறாளே...'

முடிவில்லாமல் அந்த கார் பயணம் தொடர வேண்டும் என்று... அந்த நொடியில் அவன் மிகவும் விரும்பினான்...

இப்படியே இவள் தோள் சாய்ந்திருக்க... போய்க்கொண்டே இருக்க வேண்டும்... எங்காவது... தொலைவாக... தொலைதூரத்து தொடுவானை நோக்கி... இருவர் மட்டும் தனியாக... போய் விட வேண்டும்...

**"அக்கம் பக்கம்... யாருமில்லா...**
**பூலோகம் வேண்டும்..."**

இந்திரஜித் வாய்விட்டுப் பாடினான்... ஆனால் அவனுடைய ஆசையை மதிக்காமல் அவன் தங்கியிருந்த ரிஸார்ட் வந்துவிட்டது.

"இறங்கி வா சரயு..." அவன் அழைத்தான்...

சரயு கார் கதவைத் திறந்து இறங்கினாள்...

ரிஸார்ட்டின் உள்ளே சென்றதும் சரயு... சோபாவில் சுருண்டு அமர்ந்தாள்... அவளருகே அமர்ந்த் இந்திரஜித்...

"இப்போது சொல்... ஏன் அப்படி பயந்தாய்...?" என்று வினவினான்...

"அந்தக் குட்டிப்பெண்... வந்தாளே..." சரயுவின் குரல் நடுங்கியது...

"அவள் மனுஷியில்லை இந்தர்... ஆவி..."

## 12

"**எ**ன்னது...!" இந்திரஜித் சோபாவை விட்டு எழுந்துவிட்டான்.

"என்ன சொல்கிறாய் சரயு... இது என்ன புதுக்கதை...?"

"கதையில்லை இந்தர்... அந்தப் பக்கம் போகிறவர்கள் அடிக்கட இதுபோல... ஆவிகளைப் பார்ப்பார்களாம்..."

"அதற்காக... ஒரு சின்னப் பெண்ணைப் போய் ஆவின்னு நினைத்து பயந்தாயோ...? குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் டீச்சர

அவளைப் போய் ஆவின்னு சொல்ல உனக்கு
நீ...? அவள் குழந்தை...
எப்படி மனம் வந்தது சரயு..."

"நான டீச்சராக இருப்பதினால்தான் சொல்கிறேன் இந்தர்... அந்தக் குழந்தை போட்டிருந்த யூனிபார்ம்... எங்கள் ஸ்கூலைச் சேர்ந்தது..."

"பார்த்தாயா... அவள் உன் ஸ்கூலில் படிப்பவள்... அவளைப் பார்த்து நீ பயப்படலாமா...?"

"ஐயோ இந்தர்... இதுதான் நீங்கள் கவனித்த லட்சணமா...? எங்கள் ஸ்கூலுக்கு வந்திருந்திங்கதானே.... எங்கள் ஸ்கூல் யூனிபார்ம் இப்படியா இருந்தது..."

"இல்லைதான்... அது கலர் வேறு... ம்ம்... அப்புறம் ஏன்... நீ அப்படிச் சொன்னாய்...?"

"அந்தக் குழந்தையின் ஸ்கூல் யூனிபார்மில் எங்கள் ஸ்கூல் பேட்ஜ் குத்தியிருந்தது... அது எங்கள் ஸ்கூல் யூனிபார்ம்தான் அதில் சந்தேகமில்லை..."

"நீயென்ன குழப்பவாதியா...? இப்படியும் விட மாட்டேன் என்கிறாய்... அப்படியும் வரமாட்டேன் என்கிறாய்... என்னதான் சொல்ல வருகிறாய்...?"

"இந்தர் ... ஆறு வருடங்களுக்கு ஒருமுறை எங்கள் ஸ்கூலில் யூனிபார்மின் கலரை மாற்றுவார்கள்..."

இந்திரஜித்தின் கண்களில் மின்னல் வெட்டியது...

'அப்படியென்றால்...?' சரயு என்ன சொல்லவருகிறாள்... என்பதை அவன் சட்டென்று புரிந்து கொண்டான்...

"இது எந்த வருட யூனிபார்ம் சரயு...?"

"நாற்பத்திரண்டு வருடங்களுக்கு முந்தைய யூனிபார்ம்..."

"ஏய்ய்..."

இந்திரஜித்தின் உடலில் ஓர் அதிர்வு பாய்ந்தது... இது உண்மையா...? கண்ணுக்கு முன்னால்... சற்று நேரத்திற்கு முன்பாக தோன்றி... அவனைப் பார்த்து புன்னகைத்த அந்தச் சிறுமி உயிருடன் இருக்கும் ஜீவனில்லையா...? ஆவியாக வந்த ஆத்மாவா...? நம்பமுடியாமல் அப்படியே உட்கார்ந்துவிட்டான்...

"நிஜமாகத்தான் சொல்கிறாயா சரயு...?"

"உண்மை இந்தர்... எங்கள் ஸ்கூல் ஆண்டு மலரில்... ஒவ்வொரு வருட பள்ளியிறுதி மாணவிகளுடன்... டீச்சர்ஸ் எடுத்துக்கொள்ளும் போட்டோ இருக்கும்... இந்த யூனிபார்மை நாற்பத்தி இரண்டு வருடங்களுக்கு முந்தய ஆண்டு மலரின் போட்டோவில் நான் பார்த்திருக்கிறேன்..."

இந்திரஜித்... தன் மனக்கண்ணில் மீண்டும் அந்தச் சிறுமியைக் கொண்டு வந்தான்... அவளுடைய உடைகள் தைக்கப்பட்டிருந்த விதமும்... அவளுடைய பின்னலும்... பழைய காலத்து நாகரிகத்தை பிரதிபலித்ததை அவனால் இப்போது உணர்ந்து கொள்ள முடிந்தது...

"என்ன மாதிரியான ஒரு அனுபவம் இது..." அவன் சிலிர்த்துக் கொண்டான்...

"இதை அங்கேயே சொன்னால் நீங்கள் பயந்து விடுவீங்களோன்னுதான்... நான் அங்கேயே இதைச் சொல்லவில்லை..."

"பயமா... எனக்கா... நெவர்... நீ அங்கேயே இதைச் சொல்லியிருந்தால்... அந்தக் குழந்தையிடம் பேசியிருப்பேன்..."

"இது... இது... இதற்குத்தான் உங்களை நான் அந்த இடத்திலிருந்து... உடனே அகற்றிவிட வேண்டும் என்று நினைத்தது... டைரக்டர் புத்தி... அதன் பின்னாலேயே போக வேண்டும் என்பீர்கள்... ஒரு நேரம் போல்... ஒரு நேரம் இருக்குமா...?"

இந்திரஜித்திற்கு... அவளுடைய அந்த பயம் பிடித்திருந்தது... தனக்காக யோசித்து அவள் செயல்பட்ட விதமும் பிடித்திருந்தது...

'என்மேல் இவ்வளவு அக்கறையா...' அவன் அவளை புதிதாகப் பார்த்தான்...

"இந்த ஆவி சமாச்சாரத்தை இப்போதும் நான் நம்பவில்லை சரயு... ஒருவேளை இந்த யூனிபார்ம்... வேறு ஊரைச் சேர்ந்த ஸ்கூலைச் சேர்ந்ததாக இருக்கலாம்... நீ தேவையில்லாமல் பயப்படுகிறாயோன்னு தான் எனக்கு... இப்போதும் தோன்றுகிறது..."

"இல்லை இந்தர்... எனக்கு நன்றாகத் தெரியும்... இது எங்கள் ஸ்கூலில் நாற்பத்திரண்டு வருசங்களுக்கு முன்னால் இருந்த யூனிபார்ம்தான்..."

"அதே கலர்... அதே டிசைனில்... இப்போது யாரும் யூனிபார்ம் தைக்கக் கூடாதுன்னு சட்டம் எதுவும் இருக்கிறதா...?"

"இது வாதத்திற்காக பேசும் பேச்சு..."

"ஓ.கே... இந்த விசயத்தை நாம் இப்போதைக்கு விட்டு விடலாம்... ஆனால் ஒன்றை எனக்குச் சொல் சரயு... எனக்கு என்னவானால் உனக்கென்ன...? நீயேன் எனக்காக பதறினாய்..."

"இது என்ன கேள்வி... இந்தர்... உங்களுக்கு ஒன்று என்றால் என்னை அது பாதிக்காதா...?"

"அதுதான் ஏன்...?"

இந்திரஜித் அழுத்தமாய் வினவ... சரயு பதில் சொல்ல முடியாமல் திகைத்தாள்... இயல்பான ஒன்றிற்கு இவன் ஏன் இத்தனை விளக்கம் கேட்கிறான் என்று அவளுக்கு அலுப்பாக வந்தது...

"நான் என்னவோ குற்றம் செய்த விட்டதைப் போல் குறுக்குக் கேள்விகள் கேட்கிறீங்க இந்தர்..."

"இல்லை சரயு... நீ என்னிடம் உன் காதலைப் பற்றிய முடிவைச் சொல்ல அறுபது நாள்கள் அவகாசம் கேட்டாய்... அறுபதில் ஆறு நாள்கள்தான் கழிந்திருக்கிறது... அதற்குள்... என்மேல் உனக்கு அக்கறை பொங்கி வழிவதைப் பார்த்தால் எனக்கு ஆச்சரியமாக இருக்காதா...?"

"இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது...?"

"நிறைய இருக்கிறது... சார்... என்று அழைக்கப்பட்டவன் 'இந்தர்' ஆகிவிட்டேன்... நீ யாரோ... நான் யாரோ என்றிருந்தவள்... என் மேல் கரிசனமழையைப் பொழிகிறாய்... இதற்கு காரணம் எனக்குத் தெரிய வேண்டாமா...?"

அவன் எங்கே வருகிறான் என்று சரயுவிற்கு விளங்கிவிட்டது... அவள் காதலைச் சொல்ல அவகாசம் கேட்டது தவறாம்... அதை உடனே சொல்லிவிட வேண்டுமாம்... அதற்குத்தான் சுற்றி வளைத்து... ஆயிரம் கேள்விகளைக் கேட்கிறான்...

சரயுவின் முகம் சிவந்து விட்டது... அவள் அதை மறைக்க விரும்பியவளாய் விரல் நகம் பார்த்தாள்...

"சொல் சரயு... ஆவியைப் பார்த்த பயத்தில்தானே என் மேல் சாய்ந்தாய்... இல்லாவிட்டால் தள்ளித்தானே நின்றிருப்பாய்..."

அவனது கேள்வி அவளைச் சுட்டது... அவள் இன்னும் முகம் சிவக்க... விரல்களை ஆராய்ந்தபடி... மெதுவாகப் பேசினாள்.

"ஆவியைப் பார்த்த பயத்தில்... உங்கள் மேல் சாய்ந்து விட்டது உண்மைதான்... அதேசமயம்... எவ்வளவுதான் பயமிருந்தாலும்... உங்களைத் தவிர வேறு யார்... என்னருகில் நின்றிருந்தாலும்... நான் திரும்பிப் பார்க்காமல் அந்த இடத்தை விட்டு ஓடத்தான் நினைத்திருப்பேன்... மேலே சாய்ந்திருக்க மாட்டேன்..."

இந்திரஜித்தின் மனதை அவளது பதில் குளிர்வித்தது... அவனது விழிகள் பிரகாசித்தன... அவன் 'அவள் முகத்தை நிமிர்த்தி... விழிகளுக்குள் பார்த்தான்.

"இதற்கு என்ன அர்த்தம்... சரயு...?"

"நீங்களில்லாமல் நானில்லையென்று அர்த்தம்"

அடுத்த வினாடியில் இந்திரஜித்தின் அணைப்பினில் கட்டுண்டு இருந்தாள் சரயு...

மனதுக்குள் சந்தோச நீரூற்று பொங்கி வெடிக்க... இந்திரஜித் அவளுடைய கன்னத்தில் முத்தமிட்டான்... சரயு கண்மூடி அவன் மார்பில் புதைந்தாள்... அவளது கூந்தலில் முகம் புதைத்திருந்தவன் அவளது தனிமையை பயன்படுத்திக் கொள்ள முனையவில்லை.

மனதிற்கு பிடித்தவள்... தன் மனதை மறைக்காமல் காதலை ஒப்புக்கொண்ட மகிழ்வு கொடுக்கும் சுகத்தை விட மற்றது எதுவும் அவனுக்குப் பிரதானமாகத் தெரியவில்லை...

சூடான 'டீ'யை வரவழைத்து அவளைப் பருக வைத்து... அவளை அழைத்துச் சென்று... அவளின் வீட்டருகே விட்டுவிட்டு திரும்பி வந்தபோது... இந்திரஜித்தின் மனம்... நிறைந்திருந்தது...

**ம**றுநாள் மாலையில்... இந்திரஜித்தின் அருகே அமர்ந்து கதை பேசிக் கொண்டே வந்த சரயு... கார் சென்ற திசையை கவனிக்க வில்லை...

"இறங்கலாமா..." என்று இந்திரஜித் கேட்டான்... இறங்கப் போனவள்... முகம் வெளிறிப் போய் கால்களை உள்ளே இழுத்துக் கொண்டாள்...

"இங்கேயா வந்திருக்கிறோம்...? என்னை ஏன் இங்கே கூப்பிட்டுக்கொண்டு வந்தீங்க இந்தர்..."

"உன் மனதில் இருக்கும் பயத்தைப் போக்க..."

"நான் சொன்னதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா...?"

"நான் அப்படிச் சொன்னேனா...? நாம் நேற்று இதே இடத்தில் பார்த்தது ஆவியா... இல்லை உயிருள்ள சிறு பெண்ணா... என்ற கேள்விக்கே நான் வரவில்லை சரயு... அது யாராக இருந்தாலும் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை... என் கவலையெல்லாம் உன் மீதுதான்..."

"என் மீதா...?"

"ஆமாம்... எனக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்ற பயம் உன் கண்ணில் இருந்தது... அதற்குக் காரணம்... அந்த குட்டிப் பெண் என்னிடம் வந்து பூங்கொத்தை நீட்டி... டாட்டா காட்டி விட்டுப் போனதுதானே...?"

"ம்ம்ம்..."

"அது... யாராக இருந்தாலும்... அதன் அன்பை எனக்குத் தெரியப்படுத்திவிட்டுப் போயிருக்கிறது... எனக்கு தீங்கு உண்டாக்கும் எண்ணம் அதனிடம் இல்லை... என்னிடம் தோழமை காட்ட ஆசைப்பட்டு வந்த ஜீவன் அது... அதனால் எனக்கு எந்தவித பாதிப்பும் உண்டாகாது என்ற உண்மை உனக்கு தெரிய வேண்டாமா?"

"அதற்காக...?"

"நாம்... பாலத்தின் இந்த முனையிலிருந்து... அந்த முனைவரை நடந்துவிட்டு வருவோம்... என் கணிப்பு சரியானதாக இருந்தால் நமக்குச் சிறு தொந்தரவு கூட உண்டாகாது..."

"ஒருவேளை... என் பயம் உண்மையாகி விட்டால்...?" சரயு நடுங்கிய குரலில் கேட்டாள்...

"நடப்பதை எதிர் கொள்வோம்..." இந்திரஜித் உறுதியான குரலில் கூறினான்...

இருவரும் கரம் பற்றி... அங்கு தொங்கு பாலத்தில் அடிமேல் அடியெடுத்து வைத்து நடக்க ஆரம்பித்தார்கள்... அவர்களைச் சுற்றி ஆளவரமில்லாத தனிமை சூழந்திருந்தது...

# 13

சரயுவின் உடல் கிடுகிடுவென்று நடுங்கிக் கொண்டிருந்தது... அவளுடைய மனம்... அந்த இடத்தை விட்டு உடனே அவளை ஓடிவிடச் சொன்னது... ஆனால்... அவளால் இந்திரஜித்தை விட்டு நகர முடியவில்லை... எதுவந்தாலும்... அவனுடன் சேர்ந்தே சந்திப்பது... அவனுக்கு வருவது... தனக்கும் வரட்டுமே... என்ற முடிவோடு அவனுடன் இணைந்து நடக்க ஆரம்பித்தாள்...

தன் கரத்தை இறுகப் பற்றியிருந்த சரயுவின் கரம் நடுங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தான் இந்திரஜித்... 'நான் இருக்கிறேன்... உனக்கு...' என்று தைரியம் கொடுக்கும் வகையில் அவளது கரத்தை அழுத்தமாக... இறுக்கிப் பற்றிக் கொண்டான்...

'ஒரு அடி எடுத்து வைக்க இவ்வளவு சிரமமா...' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள் சரயு... கால்கள் இரண்டும் பாறாங்கல்லாய் கனக்க... நடக்க இயலாமல் இந்திரஜித்தின் கரத்தில்... தன் கரத்தை கொடுத்து... வளைத்துக் கொண்டாள்...

"பயப்படாதே..." சன்னமான குரலில் கூறினான் இந்திரஜித்.

"ம்ம்ம்..." சரயுவின் கண்கள் பயத்தில் கலங்கிவிட்டன.

இருவரும் பாலத்தின் எதிர்முனையை அடைந்துவிட்டார்கள்...

'திரும்பவும் இதில் நடக்க வேண்டுமே...' சரயுவின் மனதில் பயம் சூழ்ந்தது...

இப்போது இந்திரஜித்தின் கரங்கள் அவளது தோள் மீது படிந்து... அவளை அணைத்துக்கொள்ள... சரயு தன் கரத்தால் அவனது இடுப்பை வளைத்துக் கொண்டாள்...

பயம் குறைந்து கொஞ்சம் தைரியம் வரப் பெற்றவளாய் மெதுவாக

நடந்தாள்... 'இன்னும் கொஞ்ச தூரம் தான்...' என்று மனதிற்குள் ஜெபித்தபடி சரயு நடக்க... பாலத்தின் இந்தப் பக்கத்திற்கு அவர்கள் பத்திரமாய் வந்து சேர்ந்து விட்டார்கள்...

சரயுவிற்கு ஆச்சரியமாக இருந்தது... காற்றுக்கூட பலமாக வீசாமல்... இதமான தென்றல் காற்றாக அவர்களின் உடல் தழுவிச் சென்றது... பாலத்தின் கீழே ஓடிய அருவி நீரின் மெல்லிய சலசலப்புச் சத்தம்... அச்சத்தை உண்டாக்காமல் ஒரு ரம்யமான உணர்வை உண்டாக்கியது... பெயர் தெரியாத பறவைகளின் கூட்டம்... அவர்களைக் கடந்து பறந்து செல்ல... அந்த அழகை ரசித்தாள் சரயு...

"இப்போது என்ன சொல்கிறாய்...?" என்று கேட்டான் இந்திரஜித்...

"நீங்கள் சொல்வது நிஜம்தான்..." சரயு ஆச்சரியமாய் பாலத்தைப் பார்த்தாள்.

"நான் சொல்வது... இது ஒன்றைத்தான் சரயு... நேற்று இதே நேரத்தில் நாம இங்கே பார்த்தது... ஆவியா... இல்லை மனிதஜீவனா என்பது பிரச்னையே இல்லை... அது... அதன் அன்பை எனக்கு உணர்த்த வந்தது... நீ சொல்வதை நான் நம்புவதும்... நம்பாததும் ஒரு பக்கம் இருக்கட்டும்... நீ சொல்வது போல்... அது ஆவியாக இருந்தால்... காற்றில் இந்த இடத்தில் கலந்து நிற்கும் அதனிடம் சொல்கிறேன்... அது என் மேல் காட்டிய தோழமைக்கும்... அன்பிற்கும்... எனது நன்றி... அது எனக்கு ஒரு கெடுதலையும் செய்யாது... நன்மையே செய்யும் என்பதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்... அதை நீயும் நம்ப வேண்டும் என்பதற்காகத்தான் உன்னை... இங்கே இந்த நேரத்தில் கூப்பிட்டுக் கொண்டு வந்தேன்..."

அவன் சொல்லிய வார்த்தைகளை உடல் சிலிர்க்கக் கேட்ட சரயுவிற்கு... அவனின் அந்தச் செய்கைகளைக் கண்டு வியப்பு மேலிட்டது...

என்ன மாதிரியான மனிதன் இவன் என்று தோன்றியது... ஓர் அமானுஷ்ய சக்தியைப் பற்றி அறிவுறுத்தியும்... அது தனக்கு தீங்கு செய்யாது என்று மனப்பூர்வமாக நம்பி... வந்து நின்று... அதற்கு நன்றி வேறு சொல்கிறானே...

'ஆவியா... ஹ... அதெல்லாம் சுத்த ஹம்பக்... கட்டுக்கதை...' என்று அச்சம் தவிர்ப்பது ஆண்மையின் அடையாளம்.

'ஆவியா... அதனால் என்ன...? அதன் அன்பிற்கு நன்றி சொல்லி விட்டு வருவோம்...' என்று... ஆவியின் உணர்வுகளையும் மதித்து கைகுலுக்க விரும்பும்... இவனின் ஆண்மை... அச்சத்தையும் தவிர்த்து... அதையும் தாண்டிய ஓர் உச்சத்தை தொடுவது...

இவனின் அறிமுகம் பெற்ற தான் வரம் பெற்றவள் என்று... சரயுவிற்கு அந்தக் கணத்தில் தோன்றியது...

காரில் திரும்பும்போது... சரயு எதுவும் பேசவில்லை... சற்று முன் ஏற்பட்ட அனுபவத்தில்... உடலும்.... மனமும்... அயர்ந்திருந்தது...

"என்ன... என் மகாராணி பேசாமலே வருகிறாங்க..." இந்திரஜித் சீண்டினான்...

"பேச முடியவில்லை இந்தர்... நீங்கள் இப்படி அதிரடியாய் செயலில் இறங்கினால்... நான் என்ன பேசுவது...?"

"இப்படி பயந்தாங்குளியாய் இருந்தால் எப்படி...? நான் டைரக்டர்ம்மா... காடு... மலைன்னு பார்க்காமல்... நடுராத்திரியிலும் ஷூட்டிங் நடத்த வேண்டும்.. இந்த பயங்களை மனதில் வைத்துக் கொண்டிருந்தால் வேலை நடக்குமா...?"

"அதற்காக இப்படியா...? நான் எவ்வளவு பயந்து போனேன் தெரியுமா...?"

"தெரியுமே... உன் ஐந்து விரல்களும் தந்தியடித்ததை... என் விரல்கள் வழி தெரிந்து கொண்டுதானே இருந்தேன்... ஆனால் ஒன்று சரயு... நீ அந்தச் சின்னப் பெண் ஆவிதான் என்று உறுதியாக நம்பினாய்... அப்படியிருந்தும் எப்படி... என்னுடன் அந்தப் பாலத்தின் அந்த முனைவரை போய் விட்டு... திரும்பிவர... ஒப்புக்கொண்டு கூட வந்தாய்...?"

"இது என்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி... நீங்களே போகும்போது... நான் எப்படி பின்வாங்குவது...? உங்களுக்கு வருவது... எனக்கும் வரட்டுமே..."

கோபத்துடன் சொன்னவளை காதலுடன் பார்த்தான் இந்திரஜித்...

'இவள் எனக்குக் கிடைத்த வரம்...' என்று அந்தக் கணத்தில் அவனுக்குத் தோன்றியது...

"தேக்கோ ராமா... தேக்கோ சீதா... கதையா...?" என்று அவன் கேட்டான்...

"அப்படின்னா...?" அவள் புரியாமல் விழித்தாள்...

"ராமன் எங்கேயோ... சீதையும் அங்கேதான்னு அர்த்தம்..."

இந்திரஜித்... மலைப்பாதையில் காரை ஒடித்துத் திருப்பினான்... சரயு அவனருகே நகர்ந்து... அவன் தோள் மீது சாய்ந்து கொண்டாள்... இயல்பாக அவள் அதைச் செய்தது... அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது...

"இந்தர்..."

"சொல்லு..."

"நான் ஒரு விசயத்தைச் சொன்னால் கேட்டுக் கொள்வீங்களா..."

"நீ கொஞ்ச ஆரம்பித்த போதே... எதற்கோ அடிபோடுகிறாய் என்று எனக்குத் தெரியும்... என்ன விசயம்..? சொல்லு..."

"அந்தக் குழந்தை ஆவியா... இல்லை... உண்மையிலேயே அந்தப் பக்கம் வந்த ஸ்கூலில் படிக்கும் குழந்தையான்னு இன்னும் நமக்கு நிச்சயமாகத் தெரியாது..."

"ஆமாம்... அதற்கென்ன...?"

"இருந்தாலும்... ஆவியாக இருந்தால்... என் நன்றியைச் சொல்கிறேன் கேட்டுக்கொள்ன்னு நன்றி சொல்லிவிட்டு வந்திருக்கிறீங்களே... பெயர் தெரியாத அந்தக் குழந்தையின் பண்புகளை மதிக்கத்தெரிந்த உங்களுக்கு... உங்களின் உறவுகளின் உணர்வுகளை மதிக்கத் தெரியவில்லையே..."

"நீ என்ன சொல்கிறாய் சரயு..."

"உங்களுடைய அக்கா மாலதியின் கல்யாணத்திற்கும் நீங்கள் போகவில்லை...அவங்களுடைய குழந்தைகளுக்கும் உங்களை அடையாளம் தெரியாதுன்னு சொல்கிறீங்க... இது கொடுமை இல்லையா...?"

"எனக்கு நேரமில்லையே சரயு...?"

"இப்போது எப்படி நேரத்தை உண்டாக்கிக்கொண்டு வந்தீங்க...

அதைப்போல்... அவங்க வீட்டு பங்சனுக்கும் நேரத்தை உண்டாக்கிக் கிட்டுப் போங்க..."

"நீ கூட என்னைப் புரிந்துகொள்ள மாட்டாயா...?"

"எனக்காக இதைக்கூட நீங்கள் செய்ய மாட்டீங்களா...?"

'எனக்காக...' என்று சரயு கேட்ட அந்த வார்த்தைக்குத்தான் எவ்வளவு சக்தி... இந்திரஜித் உடனே சரியென்று சொல்லி விட்டான்... அந்த வார இறுதியில்... ஷூட்டிங்கின் இடையே... பெங்களூருக்கு பறந்தான்...

"**எ**ன்னம்மா மாலதி... உன் தம்பிகாரன்... உன் பிள்ளைகளை மடியில் வைத்து காது குத்த வந்து விடுவானா... மாட்டானா...?"

மதுரைத் தமிழ் மணக்க... வீடு பூராவும் உறவினர் கூட்டம் நிறைந்திருந்தது... மாலதியின் மாமியார்... மருமகளை - நிறைந்த சபையில் வைத்து கேள்வி கேட்டாள்...

எதற்கும் இருக்கட்டுமென்று... தம்பியின் மகனை கையோடு அழைத்துக்கொண்டு வந்திருந்த மூர்த்தியை... அழாத குறையாய் நோக்கினாள் மாலதி...

"வந்து விடுவான் மாலதி... நாம் வேலையை ஆரம்பிப்போம்.." அவர் சங்கடத்துடன் பதில் சொன்னார்...

"தாய் மாமன் இல்லாமல் என்ன வேலையை ஆரம்பிப்பது..." மாலதியின் மாமியார்... முகரையை தோள்பட்டையில் இடித்துக் கொண்டாள்...

"என்னைச் சொல்லிக் காட்டணும்னு ரொம்ப நாளா காத்திருந்தாங்க... இப்ப சான்ஸ் கிடைத்ததும்... போட்டுப் பார்க்கிறாங்க..." மாலதி தன் மனக்குறையை தாயிடம் சொல்லிப் புலம்பினாள்...

"எந்த வீட்டிலயும் இந்தக் கூத்து நடக்காது... என்னதான் பெரிய சீமான் வீட்டு செல்லப் பிள்ளையாக இருந்தாலும்... அதை வைத்து நாங்க என்ன பண்ண...? சபையில் வந்து தாய் மாமனா நிற்க முடியாத தம்பிகாரன் கூடப் பிறந்து விட்டு... வாயாலேயே பந்தல் போட்டா... இந்த வீடு தாங்காது சாமி..."

மாலதியின் மாமியார்... வந்திருந்த உறவினர்கள் ஒவ்வொரு வரின் அருகேயும் போய் உட்கார்ந்து இந்தக் கதையைச் சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்த்து... மாலதி... கண்ணீரும்... கம்பலையு மாக... தாயைப் பார்த்தாள்... அவளோ... செய்வதறியாதவளாய் கைகளைப் பிசைந்தாள்...

"ஏம்மா... என்னை இந்தம்மாவின் மகனுக்குப் போய் கல்யாணம் பண்ணிக் கொடுத்தீங்க..."

"இரண்டு பிள்ளைகளைப் பெற்ற பின்னால் கேட்க வேண்டிய கேள்வியாடி இது..."

தாயும் மகளும் வழக்கடித்துக் கொண்டு இருக்கையில் கூட்டத்தில் சலசலப்பு நிலவியது... புயல்போல் வேகமாய் இந்திரஜித் உள்ளே நுழைந்தான்... மாலதியின் மாமியாரின் வாய் மூடிக்கொள்ள... மாலதி அதிசயத்தில் வாய் பிளந்தாள்...

## 14

**சு**ற்றிலும் உறவினர் கூட்டம்... விரிக்கப் பட்டிருந்த புத்தம் புதிய பவானி ஜமுக்காளத்தில் அமர்ந்திருக்க நடுநாயகமாய் அமர்ந்தான் இந்திரஜித்...

"பையனை... தாய்மாமனின் மடியில் உட்கார வையுங்கோ..." அய்யர் உத்தரவிட... ஆனந்தமாய் மூத்த மகனைத் தூக்கிக் கொண்டு வந்து இந்திரஜித்தின் மடியில் அமரவைத்தாள் மாலதி...

ஆசாரி... பையனின் காதுகளில் வலி தெரியாமலிருக்க மருந்தைத் தடவிவிட்டு காது குத்தினார்... அப்படியிருந்தும் வீறிட்டு அலறினான் மாலதியின் மைந்தன்...

"அழக்கூடாதுடா... என் செல்லமில்ல..." என்று மூத்த மகனை அள்ளிக் கொஞ்சிய மாலதி... அடுத்து... இளைய மகனை இந்திரஜித்தின் மடியில் அமர வைத்தாள்...

மீண்டும்... காதுகுத்தும் படலம் தொடர்ந்தது... இந்திரஜித்திற்கு எல்லாமே ஆச்சரியமாகவும்... புதிதாகவும் இருந்தது...

அக்கா மாலதியின் முகத்தில் தெரிந்த நிம்மதி கலந்த பரவசம்... பெற்றவர்களின் முகத்தில் தெரிந்த நிறைவு... அந்த விழாச் சூழல்... முக்கியமாய்... 'மாமா... மாமா...' என்று வளைய வந்த மாலதியின் பிள்ளைகள்...

'போய் பாருங்கள் இந்தர்... பெற்றவர்களுக்கு பிள்ளையாகவும்... அக்காவிற்கு தம்பியாகவும்... மருமகன்களுக்கு தாய் மாமனாகவும் நிற்பதில் எவ்வளவு ஆனந்தம் கிடைக்கிறது என்று அப்போது உங்களுக்குத் தெரியும்...'

சரயு சொல்லியது எவ்வளவு உண்மையான வார்த்தைகள் என்று நினைத்துக் கொண்டான் அவன்...

'இது நிச்சயம் புதிய அனுபவம்தான்... இதில் சந்தேகமே இல்லை... மாலதியக்காவிற்கு எத்தனையோ சீர் செய்தும் அதன் முகத்தில் வராத சந்தோசம்... இப்போது வந்திருக்கிறது என்றால்... அந்தச் சந்தோசத்தை இவ்வளவு தாமதமாய் ஏன் தந்தேன்... முதலிலேயே இதைச் செய்திருக்கலாமே...'

அன்று முழுவதும் இந்திரஜித் அங்கேயே தங்கியிருந்தான்... உறவினர்களுடன் கலந்து பேசினான்... தமக்கையின் குழந்தைகளுடன் விளையாடினான்... மாலதி கூறிய புகுந்த வீட்டின் கதைகளை சிரத்தையுடன் கேட்டுக் கொண்டான்...

"என்ன மாதிரியான பொம்பளைடா அந்தம்மா..."

"யாரைச் சொல்கிறாய்க்கா...?"

"வேறு யாரைச் சொல்வேன்...? எல்லாம் என் மாமியாரைத்தான் சொல்கிறேன்..."

"உன் மாமியாரையா... பொம்பளைன்னு சொல்கிறாய்...?"

"ஏன்... அவங்க பொம்பளைதானேடா...?"

"நான் இந்தப் பேச்சிற்கே வரவில்லை... நீ மேலே சொல்லு..."

"நீ எப்படியும் இந்த காதுகுத்திற்கு வரமாட்டாய்ன்னு... நிச்சயமான எண்ணம் அவங்களுக்கு... என்னை வெத்தலை பாக்கைப்போல்... வாயில் போட்டு மென்று துப்ப... நாள் நட்சத்திரம் பார்த்துக்கிட்டு இருந்த மகராசி அந்தம்மா... தோதாய் நீயும் வராமல் இருந்தாயா... இந்தம்மா ராமாயணத்தை ஆரம்பித்து விட்டாங்க...!"

"ராமாயணம் பேசினாங்களா...? இந்த வீட்டிலயா...?"

"இந்த வீட்டு ராமாயணத்தை இங்கேதானே கடை விரிக்கணும்...?"

"ஓ... இது உன் வீட்டுப் புராணமா...?"

"அதுவேதான்... நீ வேறு என்னன்னு நினைத்தே...?"

"என்னவோக்கா... நானும் நிறைய படம் எடுத்து பெரிய டைரக்டர்ன்னு பெயர் வாங்கி விட்டேன்... இருந்தும் கூட நீ பேசுகிற கதை... எனக்குப் புரிய மாட்டேன் என்கிறது..."

"ஏண்டா தம்பி... என் பிழைப்பைப் பார்த்தால் உனக்குக் கதைபோல இருக்கிறதா...?"

"அடடா... நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லைக்கா..."

"நீ எந்த அர்த்தத்தில் சொன்னாலும் என்னால் என்ன பண்ண முடியும் சொல்லு..."

மாலதி ஆற்றாமையுடன் சொல்ல... இந்திரஜித் மாலதியை கூர்ந்து நோக்கினான்... அவளது முகத்தில்... இந்தியப் பெண்களுக்கே உரிய எதையோ தொலைத்து விட்ட சோகம் தெரிந்தது...

"நீ சந்தோசமாக இல்லையா அக்கா..?"

"அப்படியெல்லாமில்லைடா... எனக்காக பெங்களூர்ல வீடு வாங்கிக் கொடுத்து... கார் வாங்கிக் கொடுத்து... நகை வாங்கிக் கொடுத்து கல்யாணமும் பண்ணி வைத்தீங்க... என்ன... ஒன்று... இன்னும் கொஞ்சம் நல்ல மாப்பிள்ளையாய் பார்த்து வாங்கிக் கொடுத்திருக்கலாம்..."

மாலதி சொல்லிய விதத்தில் இந்திரஜித் பக்கென்று சிரித்து விட்டான்...

"ஏண்டா சிரிக்கிற... என் பேச்சு... உனக்கு ஜோக்கா இருக்கிறதா...?"

"ஏன்க்கா... இரண்டு குழந்தைகள் பிறந்தபின் கேட்கிற கேள்வியா இது...?"

"அம்மாவைப் போலவே நீயும் பேசுடா..."

"ஏற்கெனவே அம்மா இதைச் சொல்லி விட்டாங்களா... வெரிகுட்... ஆமாம்... உனக்...

"உன்னிடம் சொன்னால் தீர்ந்து விடுகிற பிரச்னையில்லை... அம்மாவைப் பார்க்கிற வரை பெண்டாட்டிக்குப் புருசனாக இருக்கிறார்... அம்மா வந்து ஓத ஆரம்பித்துவிட்டால்.... நான் சொல்வதை... இந்தக் காதில் வாங்கி... அந்தக் காதில் விட்டு விடுகிறார்... அம்மா கொடுக்கிற சாவிப்படி ஆட ஆரம்பித்து விடுகிறார்... ஒரு ஆம்பளைக்கு சுயபுத்தி வேண்டாமாடா...?"

"ம்ம்... அப்போ... உன் கணவர்... அவருடைய அம்மாவின் சொல்புத்தியைக் கேட்டு ஆடிக் கொண்டிருக்கிறார்ன்னு சொல்லு... ஆனால்... அக்கா... உன் மாமியார்தான் உன் கூட இல்லையே... எப்போதாவது ஒருநாள்தானே வருகிறாங்க..."

"அதனால்தான்... இரண்டு பிள்ளைகளுக்கு... நான் அம்மாவாக முடிந்தது... இல்லாவிட்டால் இவரும் நானும் எலியும்... பூனையுமாக இல்ல நின்றிருப்போம்..."

இந்திரஜித்திற்கு மாலதியின் பேச்சு மனச் சங்கடத்தைக் கொடுத்தது... இத்தனை நாள்களாக தமக்கைக்கு வேண்டிய அளவிற்கு சீர் செய்து விட்டோம்... அவள் கணவனுடன் சந்தோசமாக வாழ்கிறாள் என்ற நினைவில் அவன் நிம்மதியாக இருந்தான்... இப்போது மாலதி பிடிப்பில்லாமல் பேசுவதைக் கேட்டபின்... அவன் மனதில் சஞ்சலம் ஏற்பட்டது...

"ஏன்க்கா... இவ்வளவு விரக்தியாக பேசுகிற...?"

"விரக்தின்னு இல்லைடா இந்திரஜித்... பொதுவாகவே நிறையப் பெண்களுக்கு இது போல் நடந்து விடுவதுண்டு..."

"நீ என்ன சொல்ல வருகிறாய்...?"

"கல்யாணம் என்பது ஒரு கோட்டை இந்திரஜித்... அந்தக் கோட்டையைப் பிடித்துக் கொடியை நாட்டுவதுதான் பெரும்பாலான பெண்களுக்கு கனவு... அந்தக் கோட்டைக்கு பின்னே காத்திருப்பது இன்பமா... இல்லை... துன்பமான்னு எந்தப் பெண்ணுக்குமே தெரியாது... அது அவரவர் தலைவிதிப்படி அமைந்துவிடும்..."

"உனக்கு அவரைப் பிடித்திருக்கிறதான்னு கேட்டுத்தானே கல்யாணம் பண்ணி வைத்தோம்..?"

"ஏன்டா... கூட்டமாய் பெண் பார்க்க வந்தார்... நாமும் கூட்டமாய் வரவேற்றோம்... கூட்டத்திற்கு மத்தியில் நான் கொழு பொம்மை போல வந்து நின்றேன்... அவர் என்னை நன்றாகப் பார்த்தார்... நான் கூட்டத்திற்கு மத்தியில் நிமிர்ந்து பார்க்க வெட்கப் பட்டுக் கொண்டு லேசாய் பார்த்தேன்..."

"தனியாகப் போய் பேசினீங்களே..."

"பேசினோம்... பேசினோம்... எனக்கு அது பிடிக்கும்... இது பிடிக்கும்ன்னு அளந்து விட்டார்... ஒரு வார்த்தை உனக்கு என்ன பிடிக்கும்ன்னு என்னிடம் கேட்கவில்லை... அப்போதே எனக்குத் தெரிந்திருக்க வேண்டும்டா இந்திரஜித்... தெரியாமல் போய்விட்டது..."

"நீ... அவரைப் பிடித்திருக்கிறதுன்னு சொன்னாயே அக்கா..."

"சொன்னேன்தான்... ஏன் அதைச் சொன்னேன்னு... என் ஆயுள் பூராவும் வருத்தப்படப் போகிறேன்னு... அப்போது தெரியாமல் போச்சே... மூன்று மணி நேரம் மேக்கப் போட்டுக் கொண்டு... பேசுகிற வார்த்தைகளை... நாகரிக பூச்சுக் கலந்து... யோசித்து... கோர்வையாய்... பொய்யாய்... பேசி... முன்னால் வந்து ஒரு ஆண்மகன் நின்றால் பிடித்துத்தானே போய் விடும்...?"

"எனக்குப் புரியவில்லை..."

"உனக்கு இனி இது புரிந்து ஆகப்போவது ஒன்றுமில்லை... இந்திரஜித்... கூட வாழ ஆரம்பிக்கும் போது... அவர் போட்ட வேசமும் ஒவ்வொன்றாய் கலைய ஆரம்பித்தது... அப்போது மனசு அதிர்ந்தது... மூலையில் நான் உட்கார்ந்தபோது என்னை பார்த்தாரே ஒரு பார்வை... உன்னால் இனி என்னை என்ன செய்ய முடியும்ன்னு... அந்தப் பார்வை என்னைப் பார்த்து கேட்டதுடா..."

இந்திரஜித்தின் மனம் அசைந்தது... இது என்ன அக்கா இப்படி விசனப்படுகிறாள்... அவன் கோபம் கொண்டான்...

"மாமா... உன்னை சித்திரவதை பண்ணுகிறாரா...?"

"ம்ம்... என் உடலையில்லை... மனதை..."

"நான் அவரைக் கேட்கவா...?"

"என்னவென்று கேட்பாய்...?"

"ஏன் என் அக்கா கண் கலங்குகிறதுன்னு கேட்பேன்..."

"கேட்டு விட்டு... நீபாட்டுக்கு படம்பிடிக்கப் போய்விடுவாய்... இவர் கூட வாழப் போவது நான்தானே..."

"இப்படி மனம் குமைந்து... நீ வாழ வேண்டிய அவசியமில்லை... எங்களுடன் வந்துவிடு..."

"வந்துவிடலாம்... நான் தனி மனுஷியாக இருந்தால்... என்னை நம்பி இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்களே..."

"நான் வளர்க்கிறேன் அக்கா..."

"இவர் விடுவாரா...? கோர்ட்டுக்குப் போவார்... டைவர்ஸ் கேட்பார்... பிள்ளைகள் ஆளுக்கொரு பக்கமாய் அலைபாய்வார்கள்... எனக்கு டைவர்ஸியென்ற பெயர் மட்டும்தான் மிஞ்சும்... ஒன்றைத் தெரிந்துகொள் இந்திரஜித்... டைவர்ஸ் என்ற ஒன்று நடந்தால்... இந்த சமூகம்... எளிதாக... பெண்ணின் மீதுதான் பழி சொல்லும்..."

'வாழ்க்கைப் பாதையில் இத்தனை முள்களா...? அதன்மீது வெளியில் சிரித்துக்கொண்டு... மனதிற்குள் அழுதுகொண்டு... மனதின் வலி வெளியே தெரியாமல்... மாலதியக்கா வாழ்கிறாளா...?'

இதுவரை இதைத் தெரிந்து கொள்ளாமல் விட்ட நானெல்லாம் என்ன உடன் பிறப்பு...' என்று தன்னைத் தானே நொந்து கொண்டான் இந்திரஜித்...

"உனக்கொரு விசயம் தெரியுமா இந்திரஜித்..." மாலதியின் விழிகள்... தொலைதூர தொடுவானை வெறித்தன...

"என்னக்கா...?"

"என் மனதிலும் ஒரு காதல் இருந்தது... என் கல்லூரிக் காலக் காதல் அது... வீட்டில் சொல்லப் பயந்தேன்... அப்போது நீ சின்னன்... என் காதலை வெளியில் சொல்லாமல் மனதில் புதைத்து விட்டேன்... ஒருவேளை... நான் அதைச் சொல்லியிருந்தால்... என் தலைவிதி மாறியிருக்கும்... காதல் கல்யாணம் பண்ணிக்கொள்வது தவறுன்னு ஒரு நினைவு... நீ இப்போது இருப்பதைப் போல் டைரக்டராக அப்போது இருந்திருந்தால் ஒருவேளை என்காதலை வெளியில் சொல்லியிருப்பேனோ என்னவோ..." மாலதியின் பெருமூச்சு காற்றோடு கலந்தது...

என்ன பேசுவது என்று புரியாமல் இந்திரஜித் மௌனமாக அமர்ந்திருந்தான்... தன்னை ஒரு நண்பனாக நினைத்து தமக்கை தன் மன உணர்வுகளை பகிர்ந்து கொள்வதை ஒரு புரிதலுடன் கேட்டுக் கொண்டான் அவன்...

"இப்போது அதைப் பற்றியெல்லாம் நினைக்கக் கூடாதுதான் இந்திரஜித்... எனக்கு கல்யாண வாழ்வு சரியாக அமைந்திருந்தால் ஒருவேளை நான் அதைப்பற்றி நினைத்திருக்க மாட்டேனோ என்னவோ... மனம் ரணமாக வலிக்கும்போது... மேலும் ரணம் சேர்த்து அந்த நினைவுகள் வருவதை தடுக்க முடியவில்லையே..."

"இரண்டு குழந்தைகள் பிறந்த பின்புமா... நீங்கள் இரண்டு பேரும் எதிரும்... புதிருமாக இருக்கிறீர்கள்...?"

"மனம் இணைந்து... இசைந்து வாழ்ந்து பெற்ற குழந்தைகள் இல்லை இவர்கள்... கடமைக்காக வாழ்ந்ததில் பிறந்த கண்மணிகள்... ம்ஹூம்... என் கதையை விடு இந்திரஜித்... நீ கல்யாணம் பண்ணிக் கொள்ளும்போது... உன் மனதுக்குப் பிடித்தவளாக பார்த்து கல்யாணம் பண்ணிக் கொள்... அதுமட்டுமில்லைடா... அவளுடைய மனதிற்குப் பிடித்தவனாகவும் உன்னை ஆக்கிக்கொள்... எனக்காக இதைச் செய்வாயாடா...?"

"நிச்சயம்... செய்வேன் அக்கா..."

மாலதி நீட்டிய கரத்தில் இந்திரஜித் தன் கரத்தை வைத்தான். மனம் விரும்பிய வாழ்க்கை அமையாத தன் தமக்கைக்கு சத்தியம் செய்து கொடுத்தபோது... அந்த சத்தியத்தைக் காப்பாற்ற... எத்தனை சத்திய சோதனைகளை அவன் சந்திக்கப் போகிறான் என்பதை அவன் உணரவில்லை.

## 15

"அவள் கண்கலங்கி நான் பார்த்ததில்லை சரயு... எப்போதும் சிரித்த முகமாகவே இருப்பாள்... அவளுடைய கல்யாணத்தின் போது... நான் என் கனவுப் படத்தின் டைரக்‌ஷனில் இருந்தேன்... அப்போதும் சரி... அடுத்து இரண்டு குழந்தைகள் பிறந்தபோதும் சரி... என்னால்

வரமுடியாமல் எங்காவது ஒரு அவுட்டோர் ஷூட்டிங்கில் மாட்டிக் கொள்வேன்... அடுத்தடுத்து நான் எடுத்த படங்கள் எல்லாமே வெற்றிப் படங்களாய் அமைந்துவிட்டன... நிறைய சம்பாதித்தேன்... அக்காவின் கணவர் எதிர்பார்த்ததை விட அதிகமாக சீர் செய்தேன்..."

மாட்டுப்பட்டி டேமின் மேலே மெதுவாக நடந்த வண்ணம் இந்திரஜித் சொல்லிக் கொண்டிருக்க... குறுக்கே பேசாமல் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தாள் சரயு...

"அக்கா சந்தோசமாக இருக்கிறாள்ன்னுதான் இத்தனை நாள் நினைத்திருந்தேன்... சங்கடத்தில் இருக்கிறாள் என்பது... இப்போதுதான் எனக்குப் புரிந்தது... புரிந்துதான் என்னால் என்ன செய்ய முடிந்தது சரயு...? அக்கா என் கையைக் கட்டிபோட்டு விட்டாள்... எதுவும் கேட்காமல்... வாயிருந்தும் ஊமையாக திரும்பி வந்திருக்கிறேன்..."

அவனின் மனவலி சரயுவை பாதித்தது... இந்திரஜித்... டேமின் கைப்பிடிச் சுவரின் மீது சாய்ந்து நின்றான்... அவனது புருவச் சுளிப்பு... அவனது மனதின் வேதனையைக் காட்டிக் கொடுத்தது... சரயு... ஆதரவாய்... அவனது கையோடு தன் கையைக் கோர்த்து... விரல் பின்னிக் கொண்டாள்...

"உங்க அக்கா மட்டுமில்லை இந்தர்... நிறையப் பெண்கள் மனதில் வேதனையோடு... அதை வெளியில் தெரியாமல் மறைத்துக் கொண்டு... ஒரு போலி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறாங்க... இது ஒருவகையான சமூக நிர்பந்தம்..."

"தனி மனித உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்காத சமூகத்தைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்...?"

"இது ஒரு ஆணின் பார்வை இந்தர்... பெண்ணின் பார்வையே வேறு... அவள் சந்திக்கும் உறவுகளும்... உலகமும் வேறு... சின்னக் கோடாரி கொண்டு பெரிய மரத்தை வெட்டிச் சாய்த்து விடலாம்... அதுபோல் ஒரு சின்னச் சொல் கூட... பெண்ணின் வாழ்க்கையை வெட்டிச் சாய்த்துவிடும்... அப்படியொரு சொல் வந்துவிடக்கூடாது என்று பயந்து... பயந்து வாழ நேர்பவள்... தன் வாழ்க்கையை பணயம் வைத்துத்தானே ஆக வேண்டும்...? ஆனால்... இந்த பயமெல்லாம் என்னைப் போல நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களுக்குத்தான்

வரும் என்று நினைத்திருந்தேன்... உங்களுடைய அக்கா மேல்தட்டு வர்க்கத்தை சேர்ந்தவங்க... அவங்க நிலையும் இதுதான் என்கிறபோது... எனக்கு மனம் தாங்கவில்லை..."

உணர்ச்சி மிகுதியில் கண் கலங்கிய சரயுவின்... விரல் தொட்டு... அதில் சிறு முத்தம் பதித்தான் இந்திரஜித்... விழி மூடி... மெய் சிலிர்க்க... அதை அனுமதித்தாள் சரயு...

"எனக்கும்... அக்காவிற்கும் இடையே ஒரு நட்பு இருந்தது சரயு... அவள் கல்யாணமாகிப் போனாள்... நான் டைரக்சன்னு போய் விட்டேன்... எங்களுக்குள் ஒரு இடைவெளி வந்து நாங்கள் ஆளுக்கொரு திசையில் பிரிந்து போய் விட்டோம்... எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு... என் பழைய அக்கா எனக்குத் திரும்பக் கிடைத்திருக்கிறாள்... நானும் அவளுக்கு கிடைத்திருக்கிறேன்... இது உன்னால்தான் நடந்தது சரயு... உனக்கு என் நன்றி..."

"போதுமே... ஆவின்னு சொன்னால்.. அதுக்கு உடனே நன்றி சொல்வீங்க... நான் ஏதாவது சொன்னால்... உடனே எனக்கும் நன்றியை வாரிக் கொடுத்து விடுவிங்க... நீங்க என்ன நன்றி நவிழும் பரம்பரையில் பிறந்து வந்தவரா..."

சரயு சிரித்துக்கொண்டே பேச்சை மாற்றினாள்... அந்திவானின் சூரியன் மேற்கில் மறைந்து கொண்டிருந்தான்... அவனது செந்நிறக் கதிர்கள் பட்டு... சரயு பிரகாசித்தாள்... அவர்கள் இருவரும் அன்யோன்யமாக பேசிக் கொண்டிருப்பதை... சற்றுத் தூரத்தில் நின்று புகழேந்தி கவனித்துக் கொண்டிருந்தார்...

"புகழேந்தி... இவர் என் சம்பந்தி... மூணாறைச் சுற்றிப் பார்க்க குடும்பத்துடன் வந்திருக்கிறார்... எனக்கு கொஞ்சம் வேலையிருக்கிறது... நீங்க கூடப் போய் சுற்றிக் காண்பித்துவிட்டு வாங்க..."

புகழேந்தியின் தலைமை அதிகாரி உத்தரவிட்டார்... வேறு வழியின்றி... அவருடைய சம்பந்தி வீட்டிற்கு ஊரைச் சுற்றிக் காட்ட புகழேந்தி செல்ல வேண்டியிருந்தது...

காரில் ஒவ்வொரு இடமாக காட்டிவிட்டு... மாலை நேரத்தில்... அவர்களுக்கு மாட்டுப்பட்டி டேமைக் காட்டி விட்டுத் திரும்பியவர் அதிர்ந்து நின்றார்...

'அது... நம் சரயு மாதிரி இருக்கே...' கண்களை கசக்கி விட்டுப் பார்த்தார்... அது சரயுதான்...

யாரோ ஒருவனோடு... விரலோடு விரல் பிணைத்து கதை பேசிக் கொண்டிருப்பது அவருடைய மகளா...? அவருக்கு நினைக்க... நினைக்க... நெஞ்சம் ஆறவில்லை...

எப்படி வீடு வந்து சேர்ந்தார் என்று தெரியாதவராய் வீடுவந்து சேர்ந்தார் அவர்...

"என்ன இன்றைக்கு சீக்கிரமாய் வீட்டுக்கு வந்து விட்டிங்க போல இருக்கே... காபி கொண்டு வரவா...?" பார்வதி விசாரித்தாள்...

"ம்ம்... பார்வதி... சரயு வந்துவிட்டாளா...?"

"இன்னும் வரவில்லை... வருகிற நேரம்தான்..."

பார்வதி உள்ளே சென்று விட்டாள்... வாசல் வேலிப் படலை யாரோ திறக்கும் சத்தம் கேட்டு... அவசரமாய் வெளியே எட்டிப் பார்த்தார் புகழேந்தி... யமுனா வந்து கொண்டிருந்தாள்...

"ஹாய் அப்பா..." என்றபடி... வராண்டாவில் செருப்புகளை கழற்றி விட்டுவிட்டு வீட்டினுள் வந்தாள் அவள்...

'இவள் எப்போது என் தலையில் கல்லைத் தூக்கிப் போடப் போகிறாளோ...' என்று நினைக்கும் போதே அடிவயிறு கலங்கியது புகழேந்திக்கு...

"என்னம்மா இது... அப்பா இப்படி ஒரு மார்க்கமா விழித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்... என்ன விசயம்...?"

காபியுடன் வந்த பார்வதியிடம் கேட்டாள் யமுனா... கவலையுடன் கணவரைப் பார்த்த பார்வதி...

"என்னவோ தெரியலைடி யமுனா... இவர் வந்ததில் இருந்தே இப்படி... சந்தையில் விற்ற ஆடு போக இருக்கும் சொச்ச ஆடுபோல விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்... என்ன விசயமுன்னு என்னைக் கேட்டால் எனக்கு என்னடி தெரியும்? இந்தக் கேள்வியை அவரைப் பார்த்து இல்ல நீ கேட்கணும்..." என்று கூறியபடி... காபியை கணவனிடம் நீட்டினாள்...

பார்வதி பேசிய விதத்தை ரசித்துச் சிரித்த யமுனா... "என்னப்பா...

சரயு பார்த்தது போல... நீங்களும் ஆவி எதையாவது பார்த்து வைத்து விட்டிங்களா...?" என்று கேட்டாள்...

"ஆவியா...? சரயு பார்த்தாளா...?" பார்வதி புருவம் தூக்கினாள்..

"ஆமாம்மா... போனவாரம்... மூணாறில் இருக்கும் தொங்கு பாலத்துக்கிட்ட சரயு ஆவியைப் பார்த்தாளாம்..."

யமுனா சுவாரஸ்யமாய் விவரிக்க... பார்வதி... ஆவியை விட்டு விட்டு... "சரயு ஏன் அங்கே போனாள்" என்று கேட்டாள்...

"இவளுக்கு என்னடி அங்கே வேலை...? எப்போது போனாள்...? என்னிடம் இதைப் பற்றி மூச்சுக்கூட விடவில்லையே... சரயு இப்படி மறைத்துப் பேசும் ஆள் இல்லையே... எப்போதிருந்து இந்தக் கள்ளம் அவளுக்குள் வந்தது..."

புகழேந்தியின் மனதில் இருந்த கேள்வியை பார்வதி கேட்டாள்...

'அது புரியாமல்தானே நானும் தவித்துக் கொண்டிருக்கிறேன் பார்வதி...' புகழேந்தி மனதிற்குள் சொல்லிக் கொண்டார்...

'நம் சரயுவின் மனதில் காதல் எப்போது வந்ததோ... அப்போதே கள்ளமும் வந்துவிட்டது... அது வந்த சுவடை அறியாமல் நீயும்.. நானும் நம் பெண் பச்சைக் குழந்தையென்று நம்பிக்கொண்டு வீட்டிற்குள் உட்கார்ந்திருக்கிறோம்...'

சின்ன மகளின் வாயிலிருந்து வரப்போகும் வார்த்தைகளை எதிர்பார்த்து... புகழேந்தி... காத்திருக்க...கண் சிமிட்டும் நேரத்திற்குள் யமுனா சுதாரித்துக் கொண்டாள்...

"அதுதானே... இவளுக்கு அங்கே என்ன வேலை...? சரயு அந்த தொங்கு பாலத்தில் ஆவியைப் பார்த்தாள்ன்னு தானே நான் சொன்னேன்... நேரில் போய் பார்த்தாள்ன்னா சொன்னேன்...?"

"பின்னே...?"

"கனவு கண்டாளாம் அம்மா..."

புகழேந்தி துணுக்குற்றார்... கள்ளம் இருப்பது பெரிய மகளிடம் மட்டுமில்லை... சின்ன மகளிடமும்தான் என்பது அவருக்குப் புரிந்தது...

யமுனாவை அவரின் பார்வை ஊடுருவியது... இப்படியான ஒரு

பார்வையை இதற்கு முன் தகப்பனிடம் கண்டிராத யமுனா... தடுமாறிப் போனாள்...

"என்னங்கப்பா...?"

"ஒன்றுமில்லை... நீ உள்ளே போய் காபியைக் குடி..."

யமுனா உள்ளே போய் விட்டாள்... வாசலில் காலடியோசை கேட்டது... புகழேந்தி எட்டிப் பார்த்தார்... சரயு வந்து கொண்டிருந்தாள்...

"அப்பா..."

"வாம்மா... இப்போதுதான் ஸ்கூல் விட்டதா...?"

"ம்ம்ம்..."

'இது என்னவகையான பதில்... ஆமாம் என்றும் சொல்லாமல்... இல்லையென்றும் சொல்லாமல்... இரண்டுமில்லாத பதில்... இப்படி பதில் சொல்ல... நீ எங்கே கற்றுக் கொண்டாய் சரயு...'

புகழேந்தி சரயுவை அன்றுதான் புதிதாக பார்ப்பது போல் பார்த்தார்... சரயு அவரின் பார்வையை தவிர்த்தாள்...

"உன்னை அணைக்கட்டில் பார்த்தேன் சரயு..." புகழேந்தி அவளின் முகத்தை நேராகப் பார்த்து கூறிவிட்டார்...

"அப்பா..." சரயு முகம் வியர்த்தாள்...

"சத்தமாய் பேசாதே... இன்னும் உன் அம்மாவிடம் நான் இதைச் சொல்லவில்லை... நான் உன்னை அதிகம் நம்பினேன் சரயு... நீயா இப்படி...?"

சரயு துடித்துப் போய் விட்டாள்... இந்தக் கேள்விக்கு அவள் என்ன பதிலைச் சொல்லுவாள்... புகழேந்தி கோபமாய் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை... ஆனாலும் அவர் மனம் புண்பட்டுக் கேட்ட அந்த ஒரு வார்த்தை அவளது உள்ளத்தைக் குத்திக் கிழித்தது...

"அப்பா..."

"அது நீயாக இருக்கக் கூடாதுன்னு கடவுளிடம் வேண்டிக் கொண்டேன் சரயு... கடவுள் என் கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லை... அது நீதான்... எப்படி சரயு... உன்னால் இது எப்படி

முடிந்தது...? யமுனாவிற்கு உன்னைத்தானே உதாரணம் காட்டுவேன்... நீயே இப்படிச் செய்து விட்டால்... நாளைக்கு அவளை எப்படி நான் கண்டித்து வளர்க்க முடியும்...?"

சரயுவை குற்றவாளிக் கூண்டில் ஏற்றினார் புகழேந்தி... காதலித்த குற்றத்தைச் செய்து விட்ட சரயு... குற்ற உணர்வில் துடித்தாள்... தன் காதலுக்கு எப்படி தந்தையிடம் விளக்கம் சொல்வது என்ற வழி தெரியாமல் தவித்தாள்...

## 16

குளிர்காற்று உடலைத் துளைத்தும்... அதை உணராதவளாய் சரயு... தகப்பனாரின் முகம் பார்க்க முடியாமல் நிலம் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்...

"உன் அம்மா சமையல் கட்டை விட்டு வெளியே வந்து உன்னைப் பார்ப்பதற்குள்... நான் உன்னிடம் பேசி முடித்து விட வேண்டும் சரயு... வா... காலார நடந்து விட்டு வரலாம்..."

புகழேந்தி வெளியே நடக்க... வேறு வழியில்லாமல்... ஆட்டுக்குட்டி போல் தகப்பனாரைப் பின் தொடர்ந்தாள் சரயு...

சற்றுத் தொலைவிலிருந்த பாலத்தின் அருகே சென்ற புகழேந்தி... அதன் கைப்பிடிச் சுவரின் மீது அமர்ந்தார்... சரயு சற்றுத் தள்ளி... பாலத்தின் தூண் மீது சாய்ந்து நின்றாள்...

"யாரும்மா அது...?"

புகழேந்தி விசாரணையை ஆரம்பித்தார்... சரயு... இதழ்கடித்து... முகம் நிமிர்த்தினாள்...

"இந்திரஜித்..."

"இந்திரஜித்துன்னா... ராமாயணத்தில் ராவணனின் மகனாக வருவானே அந்த இந்திரஜித்தா...?"

புகழேந்தியின் கேள்வியில் கோபம் கலந்த நையாண்டி வெளிப் பட்டது... சரயு முகம் இறுகினாள்...

"இல்லப்பா... இவர் வில்லனின் மகனில்லை... நிறைய வில்லன்களையும்... ஹீரோக்களையும் உருவாக்கும் சினிமா டைரக்டர்... இந்திரஜித்..."

சரிக்குச் சரியாக பதிலடி கொடுத்த மகளின் புத்திசாலித் தனத்தை மெச்சிக் கொள்வதற்குப் பதில் புகழேந்தி பல்லைக் கடித்தார்...

"ஓ... சினிமாக்காரனா...?"

"ஏன்ம்ப்பா... சினிமாக்காரங்க என்றால் அவங்களை தள்ளி நிறுத்தித்தான் பார்க்கணுமா...? அவங்களும் மனிதர்கள் தானேப்பா... என்னை யாராவது... 'வாத்திச்சியா'ன்னு கேட்டால் எனக்கு எப்படியிருக்கும்...? இல்லை உங்களைப் பார்த்து யாராவது... 'டீத்தூள்கார ஆளா'ன்னு கேட்டால் உங்களுக்கு எப்படியிருக்கும்...? ஒருவர் வேலை பார்க்கும் தொழிலை வைத்து அவங்களைக் கூப்பிடலாமாப்பா... அது தப்பில்லையா? மத்தவங்க மனசை புண்படுத்தாமல் பேசணும்ன்னு நீங்கள் தானே எனக்குச் சொல்லிக் கொடுத்து வளர்த்தீங்க...? இப்போது நீங்களே... அதை மீறலாமா...?"

இதுவரை முகம் நிமிர்ந்து பார்த்து... ஒரு வார்த்தை அதிகமாக பேசாத பெண்... எதிர்த்து நின்று கேள்வி கேட்பதை பார்த்ததும்... அவள் எந்த அளவுக்கு காதல் வசப்பட்டிருக்கிறாள் என்பதை புரிந்து கொண்டார் புகழேந்தி...

"நான் அதை மட்டுமாம்மா சொல்லிக்கொடுத்து வளர்த்தேன்? இன்னும் எத்தனையோ சொல்லிக்கொடுத்து வளர்த்தேன்... அதை எல்லாம் காற்றில் பறக்க விட்டு விட்டாயே..."

"அப்பா..."

"அணைக்கட்டில் எப்போதும் ஆள் நடமாட்டம் இருக்கும் சரயு... நான்கு பேர் வந்து போகும் இடம் அது... யாரோ ஒருவனுடன் கைகோர்த்துக் கொண்டு... அங்கே நின்று பேசிக் கொண்டிருந்தாயே... அதையும் நானா சொல்லிக் கொடுத்தேன்...?"

"அப்பா..."

சரயு... மனமும் உடலும் ஒருசேர குலுங்கிப் போனாள்... காதல்

என்பது... அக்கம் பக்கம் பார்க்க ஏன் விடுவதில்லை... என்ற துயரம் மிகுந்த கேள்வியொன்று அவளது இதயத்தில் உதித்தது...

"நான் உன்மேல் அதிக நம்பிக்கை வைத்திருந்தேன் சரயு..."

"இப்போது... அந்த நம்பிக்கைக்கு ஒரு குறையும் வந்துவிட வில்லைப்பா... அவரின் படைப்புகளின் மேல் ஈடுபாடு வந்தது... என் பாராட்டைச் சொன்னேன்... அவர் பதில் சொன்னார்... ஏனோ... எங்கள் இரண்டு பேருக்குமே ஒருவரையொருவர் மனதிற்குப் பிடித்துப்போய் விட்டது... அது தப்பாப்பா...?"

"மனம் சொல்வதையெல்லாம் செய்துவிடக் கூடாது சரயு..."

"உன் மனம் சொல்வதை செய்... யாரைப் பத்தியும் கவலைப் படாதேன்னு நீங்கள்தானேப்பா அடிக்கடி சொல்வீங்க..."

"என் வார்த்தையை வைத்தே என்னை மடக்கப் பார்க்கிறாயா...?"

"இல்லைப்பா... என் மனம் சொன்னதைத்தான் நான் செய்தேன்னு சொல்கிறேன்... என் மனதுக்கு அவரைப் பிடித்துப் போய் விட்டதுப்பா... எனக்கு அவர்தான்னு தோணிப் போய் விட்டது... அவர் என்னைத் தேடி வந்த பின்னால்... அவர் பின்னால் என் மனம் போவதை என்னால் தடுக்க முடியவில்லைப்பா... நான் என்ன செய்வேன்...?"

தன்னிலை விளக்கம் சொல்லி மறுகி நின்றவளை யோசனையுடன் பார்த்தார் புகழேந்தி...

"இது நீ நினைப்பது போல் எளிதான விசயமில்லை சரயு..."

"எனக்கும் இது எளிதானதாக இல்லைப்பா... நானும் உங்களைப் போல ஆயிரம் யோசனைகள் செய்தேன்... ஆனால்... காதல் யோசித்து முடிவெடுக்கும் விசயமில்லையே... அது தானாக வருவது... வருமுன் காக்கத்தான்ப்பா நினைத்தேன்... அது வந்த பின்னால்... அணைகட்ட என்னால் முடியவில்லை..."

"நீ சொல்லும் ஆள் பெரிய டைரக்டராச்சேம்மா..."

"ஆமாம்பா..."

"அந்தப் புகழையும்... பணத்தையும் பார்த்து நீ மயங்கி விட்டாயா... மகளே..."

"என்னைப் பார்த்து இப்படியொரு வார்த்தையை நீங்கள் கேட்கலாமாப்பா... அவருடைய படங்களைப் பார்த்துத்தான் அவரிடம் மயங்கினேன்... அது அவரின் படைக்கும் திறமையைப் பார்த்து வந்த மயக்கம்... அவரின் உருவாக்கும் முயற்சியைப் பார்த்து வந்த மயக்கம்... அவரின் இயல்பைப் பார்த்து வந்த மயக்கம்... அவரின் அறிவைப் பார்த்து வந்த மயக்கம்... நிச்சயமாய் அவரின் புகழையும்... பணத்தையும் நான் நினைத்துக் கூடப் பார்த்தது இல்லைப்பா..."

"ஆள் அழகாக இருக்கிறான்னு நினைக்கிறாயா...?"

"இந்திரஜித் இப்படித்தான் இருப்பார்ன்னு எனக்குத் தெரியாதுப்பா... அவரின் முகம் பார்க்காமலேயே... அவரை எனக்கு அவ்வளவு... பிடிக்கும்ப்பா... இதுதான் நான்னு என்முன்னால் வந்து நின்றவரின் உருவம் எப்படியிருந்திருந்தாலும் நான் அவரைக் காதலித்திருப்பேன்..."

"நீ சொல்வதையெல்லாம் சினிமாவாக எடுத்தால் நாலு நாள் ஓடும்... நிஜ வாழ்க்கை வேறு சரயு... நிஜத்தில் இதெல்லாம் சாத்தியமில்லாத விசயங்கள்..."

"நாங்கள் நூறு வருடம் சேர்ந்து வாழ்வோம்ப்பா... ஏன்... இதெல்லாம் சினிமாவில்தான் நடக்க வேண்டுமா...? நிஜத்தில் நடக்கக் கூடாதா...? நானும்... அவரும்... ஒருவரையொருவர் நேரில் பார்க்காமலேயே காதலித்தோம்... அதுதான் உண்மை... என்னை மதித்து... என்னைத் தேடி வந்தார் அவர்... அதுவும் உண்மை... அவரின் காதலை மதித்து... பதிலுக்கு... என் காதலை நானும் சொன்னேன்... இதுவும் உண்மை..."

"ஒருவேளை... உன் இந்தக் காதலில் நீ தோற்றுவிட்டால்...?"

"எதைப்பா தோல்வின்னு சொல்கிறீங்க... அவரின் கைபிடித்து கல்யாணம் பண்ணிக்கொள்ள முடிந்தால்தான் அது காதலின் வெற்றியாகுமா...? காலமெல்லாம் அவர் நினைவை என் மனதில் சுமந்து கொண்டிருந்தாலும்... அது வெற்றிதான்... என் காதல் என்றைக்குமே தோற்காதுப்பா..."

புகழேந்தி பெருமூச்சு விட்டார்... குளிர் அதிகரிப்பதை உணர்ந்தவராய்... எழுந்து கொண்டார்....

"வா... வீட்டுக்குப் போகலாம்..."

"அப்பா..."

"இப்போதைக்கு... இந்த விசயம் உன் அம்மாவிற்கு தெரிய வேண்டாம்... நமக்குள்ளேயே இருக்கட்டும்... இதைப்பற்றி நான் எதுவும் சொல்வதற்கு இல்லை... நீ பிடிவாதமாக இருக்கிறாய்... தோளுக்கு மேல் வளர்ந்து விட்ட பெண்ணிடம்... என்னால் மிரட்டலாய் பேசவும் முடியவில்லை... ஆனால்... எனக்கு இந்த விசயத்தில் கொஞ்சம் கூட உடன்பாடே இல்லை..."

"அவர் நல்லவர் அப்பா... ஒரே... ஒரு தடவை... அவரோடு நீங்கள் பேசிப் பாருங்கள்... அப்போது அவரைப் பற்றி உங்களுக்குப் புரியும்..."

"வேண்டாம்... எனக்குப் புரிந்து ஆகப் போவது எதுவுமில்லை... உனக்குப் பின்னால் யமுனா இருக்கிறாள்... உன் செயல்பாடுகளின் நன்மையும்... தீமையும்... அவளுடைய எதிர்காலத்தை பாதிக்கும்... இதை யோசித்து நடந்து கொள்... இந்த மூணாறில் இதுவரை மரியாதையாய் வாழ்ந்து விட்டேன்... கடைசிவரை அதுபோலவே வாழ்ந்து முடிக்கும் வரம் கிடைக்க வேண்டும்... ம்ம்... பார்க்கலாம்... வா... வீட்டிற்குப் போகலாம்..."

அவர்கள் இருவரும் திரும்பி வரும்போது இருவருக்கும் இடையே மௌனம் கனத்த திரையாக விழுந்திருந்தது...

பார்வதி வாசலில் நின்று கொண்டிருந்தாள்... வேலிப் படலை திறந்து கொண்டு உள்ளே வந்தவர்களைப் பார்த்து கவலையுடன் விசாரித்தாள்...

"இந்த குளிர் காலத்தில்தான் உலாவப் போவிங்களா...? சரயுவின் ஹேண்ட்பேக் இருக்குது... உங்களையும் காணோம்... அவளையும் காணோம்... எங்கேதான் போய்விட்டு வருகிறீங்க...?"

பார்வதியின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் சரயு நிலம் பார்க்க... புகழேந்தி மகளின் முகம் பார்த்தார்...

"அதுதான் நீயே நாங்க உலாவப் போய் விட்டு வருகிறோம்ன்னு சொல்லி விட்டாயே... அதற்கு மேல் என்ன வெளியில்

நிறுத்தி விசாரணை கமிசன் வைக்கிற... உள்ளே வா... சரயு பாவம் பசியோடு வந்திருப்பாள்... அவளுக்கு காபி கொடு...”

மகளின் பசியை கணவர் நினைவுபடுத்தியதும்... பார்வதி அவசரமாய் உள்ளே போய் விட்டாள்... சரயு தயங்கி நிற்க...

“உள்ளே போம்மா...” என்றார் புகழேந்தி...

“அப்பா...” சரயு தழதழப்பாய் அழைத்தாள்...

“உன் காதலுக்கு... என் அனுமதியோ... அங்கீகாரமோ கிடைக்காது சரயு... நீ விருப்பப்பட்டு விட்டாய் என்பதால் காதல் உயர்வானதுன்னு நான் ஒருநாளும் ஒப்புக்கொள்ள மாட்டேன்... பெத்தவங்க பார்த்து செய்துவைக்கும் கல்யாணத்தில் கிடைக்கும் பாதுகாப்பு... காதல் கல்யாணத்தில் கிடைக்காதும்மா...”

சரயு... இந்திரஜித்தின் அக்கா மாலதியைப் பற்றி நினைத்துக் கொண்டாள்...

மாலதியின் திருமணம் பெற்றவர்கள் பார்த்து செய்து வைத்து திருமணம்... அவள் சந்தோசமாக வாழ்கிறாளா...? ஊருக்காகவும்... உறவுக்காகவும்... பொய்யாக சிரித்து... உள்ளுக்குள் நைந்து... விரக்தியான வாழ்க்கையைத் தானே வாழ்ந்து கொண்டிருக்கிறாள்..?

ஒருவேளை இதைத்தான் அப்பா விரும்புகிறாரோ... என்று சரயுவிற்கு தோன்றியது...

பெற்றவர்கள் பார்த்து வைக்கும் திருமணத்தில் மணமுறிவு வந்தாலும்... அது மணமுறிவு வரை போகாது... புரையோடிய புண் போல... மனதில் ரணத்தோடு... கடைசிவரை சேர்ந்து வாழ்ந்து... சிறந்த தம்பதி என்று பெயர் வாங்கி மறையும் வாழ்வைத்தான் பாதுகாப்பான வாழ்வென்று நினைக்கிறாரோ...

# 17

**அ**ருவி நீரில் எப்போதும் நனைந்து கொண்டேயிருப்பதால் பாசி படர்ந்த பாறைகள் வழுக்கின... அதில் காலை அகற்றி ஊன்றி நின்று காமெராவில் கோணம் பார்த்துக் கொண்டிருந்தான் இந்திரஜித்...

படப்பிடிப்பை வேடிக்கை பார்க்க வந்த மக்கள் கூட்டத்தை திரும்பி ஒருதரம் பார்த்த முகிலன் அருகிலிருந்த வாசுதேவனிடம் பொறாமையுடன் பேசினான்...

"எங்கே போனாலும் எள் விழுக இடமில்லைடா... கூட்டம் எப்படித்தான் வந்து குமியுதோ..."

"அதுக்கு நீயேன் இப்படி டென்சன் ஆகிற...?"

"அப்படி நம்மை விட இந்தாளு எந்த வகையில் உயர்த்தி...?"

"இந்தாளுன்னு யாரைச் சொல்கிற... நம்ம டைரக்டரையா...?"

"ஏன் உனக்கு அது தெரியாதா...? என் வாயால் நான் சொல்ல வேண்டுமாக்கும்... ஒப்புதல் வாக்குமூலம் வாங்க வந்திருக் கிறாயா...?"

"நான் உன்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்குவது இருக்கட்டும்... நீ அந்த நிஷாவிடம் வசனத்தைச் சொல்லி ஒப்பிக்க வைத்து விட்டாயா...?"

"கிண்டலா...? சுட்டுப் போட்டாலும் தமிழ் வராத இந்திக்கார பொண்ணு அது... அது தமிழ்பட ஹீரோயின்... வாயைத் திறந்தால் பீட்டர் இங்கிலிஷும்... ஹிந்தியும் தான்... அது வாயில் இரண்டெழுத்து தமிழ் வார்த்தை கூட நுழைய முடியாமல் படாதபாடு படுது... ம்ஹூம்.. என் பிழைப்பு இப்படி ஆகிவிட்டதே... இதற்கு தமிழ் சொல்லிக் கொடுத்து... எனக்கே தமிழ் மறந்து இந்திக்காரனாய் ஆகிவிடுவேனோன்னு பயமாய் இருக்குடா வாசு..."

"அந்தப் பயமே உனக்கு வேணாம்... செந்தமிழ் நாட்டுக்காரன் வாயில் தமிழ் வராமல் போகுமா...? இது நம்ம தமிழ் சினிமாவின் கல்ச்சர்டா வாசு... தமிழ் சினிமாவில் ஹீரோயினாக நடிக்க இருக்க

வேண்டிய முக்கியத்தகுதியே... தமிழ் பேசத் தெரியக் கூடாது என்பதுதான்... இந்த அடிப்படை அறிவு கூட இல்லாமலா நீ தனியாய் டைரக்டர் பண்ண சான்ஸ் தேடி அலைகிறாய்...?"

"நீ வந்து நிஷாவுக்கு தமிழ் சொல்லிக் கொடுத்தால்தான் என்பாடு உனக்குப் புரியும்..."

"பேஷா வந்து சொல்லிக் கொடுக்கிறேன்... நீ போய் இந்தப் படத்தின் ஹீரோ வினோத்துக்கு வசனத்தை சொல்லிவிட்டு வருகிறாயா...?"

"ஐயையோ... வேண்டாம்டா சாமி..."

"அலறுகிறாயில்லையா...? அப்படியே வாயை மூடிக் கொள்... நம்ம தமிழ்படத்தில் ஹிந்தி ஹீரோயின்கள்தான் நடிக்க முடியும்... ஹிந்தி ஹீரோக்கள் நடிக்க முடியாது... அந்த மட்டிலும் ஹீரோக் களாவது... தமிழ் பேசத் தெரிந்தவர்களா வருகிறாங்களேன்னு நாம் சந்தோசப்பட்டுக்கொள்ள வேண்டியதுதான்... என்ன ஒன்று... இவங்க நம்மை மனித ஜீவனா மதித்துப் பேசித் தொலைக்க மாட்டாங்க... இந்த வேலைக்கு வந்து விட்டோம்... பாடாய்படணும்னு ஆகிவிட்டது... அலுத்துக் கொண்டால் முடியுமா...?"

அதற்குள் பாறையிலிருந்து தரைக்கு இறங்கிவிட்ட இந்திரஜித்...

"முகில்... ஹீரோயின் ஷாட்டுக்கு ரெடியா...?" என்று சப்தமாய் கேட்டான்...

"இதோ சார்..." என்றபடி... தமிழ் தெரியாத ஹீரோயினுக்கு... 'ஏன்...?' என்ற மிகப்பெரிய தமிழ்வசனத்தை சொல்லிக் கொடுக்க முகிலன் ஓடினான்...

இந்திரஜித் பொறுமையில்லாமல் காமெராமேனை அருகில் அழைத்தபோது... அவனது கைபேசி அலறியது... எடுத்துப் பேசினான்... முகம் மலர்ந்தான்...

"யெஸ்... யெஸ்... இங்கேதான் இருக்கிறோம்... நீ வருகிறாயா...? ஸ்கூலுக்குப் போகவில்லையா...? ஓ... ஆமாம்... இன்றைக்கு உனக்கு லீவில்ல... மறந்தே போய்விட்டேன்... என்னது... உன்னை மறப்பேனா...? அதற்கு என்னை வேண்டுமானால் மறப்பேன்... ஸ்ஸ்...

இது டயலாக் இல்லை... சொந்தமாய் பேசுவதுதான்... டைரக்டர்ன்னா கற்பனை ஊற்று பொங்கி வருமா...? அது என்னவோ உன் குரலைக் கேட்டால் காதல்தான் பொங்கி வருகிறது... பொய்யா...? மெய்ம்மா... நீ ஷூட்டிங் பார்க்க வருகிறாயா...? வா... இதற்கு என் அனுமதி வேண்டுமா...? கூட இன்னொருவரைக் கூப்பிட்டு வரப் போகிறாயா...? யார் அது...? உன் சிநேகிதி அபர்ணாவை மட்டும் கூப்பிட்டுக்கொண்டு வந்து விடாதே... அவள் கண்ணகி மதுரையைப் பார்க்கும் பார்வையை... என்னைப் பார்த்து வீசுவாள்... உன் தங்கையைத்தான் கூப்பிட்டுக் கொண்டு வரப்போகிறாயா...? ஆஹா... கொளுந்தியாள் வந்தால் வேண்டாமென்றா சொல்வேன்...? என்னது... கொன்று விடுவாயா...? அதெல்லாம் ஒரு பாசத்தில் சொல்வது சரயு... நீ வா..."

கைபேசியை அணைத்து சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டவன்... அருகில் வந்து நின்றிருந்த காமெராமேனைப் பார்த்து புருவம் உயர்த்தினான்...

"நீங்கள்தானே சார் கூப்பிட்டிங்க..."

"ஆமாம்... ஆமாம்... ஸ்ரீ! காமெராவில் முதலில் அருவியைப் பார்த்து ஒரு ஜூம் ஷாட் வையுங்க... அப்புறம்..."

இந்திரஜித் வேலையில் ஆழ்ந்து விட்டான்...

காமெரா சுழல ஆரம்பிக்க... அருவிக்கரையின் பாறைமேல் கதாநாயகன் கைகள் இரண்டையும் விரித்துப் பாட... கதாநாயகி... அருவிக் கரையோரமாய் ஓடிவந்தாள்...

சரயு... யமுனாவுடன் கூட்டத்திற்கு வெளியே நின்று... உள்ளே போக முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்...

"வாவ்... எவ்வளவு கூட்டம்...? இவ்வளவு கூட்டமும் உன் ஆளின் ஷூட்டிங்கைப் பார்க்க வந்திருக்கிறார்களா...? கிரேட்க்கா..."

சரயு பதில் சொல்லவில்லை... இந்தப் பக்கம்... முண்டியடித்துக் கொண்டு நின்ற ஜனத்திரளும் அந்தப் பக்கம் இந்திரஜித்தும் இருந்த அந்த நிலைமை அவளை அச்சுறுத்தியது... அணுக முடியாதவனாக அவனிருக்கிறான் என்று அந்த நொடியில் அவளுக்குத் தோன்றியது...

'எப்படி இந்த ஜனக் கடலைத் தாண்டி... அவன் முகம் பார்ப்பது...'

சரயு கைபேசியை எடுத்து அவனை அழைத்தாள்... பாறையின் விளிம்பில்... கதாநாயகன் படர்ந்து... கீழே தொங்கிக் கொண்டிருந்த கதாநாயகியை தூக்க முயலும் காட்சியை படமாக்கிக் கொண்டிருந்த இந்திரஜித்... பரபரப்புடன் இருந்தான்...

வழுக்குகின்ற பாறையின் மேல்... படர்ந்து படுத்திருக்கும் கதாநாயகன் லேசாக வழுக்கி விட்டாலும்... அவனும்... அவனோடு அவனது கையைப் பற்றித் தொங்கிக் கொண்டிருக்கும் கதாநாயகியும் கீழேயிருக்கும் பாறையின் மேல் விழுந்து சிதறிப் போய் விடும் அபாயமிருந்ததால்... பாதுகாப்பு வலையை பாறையில் சுற்றிக் கட்டியிருந்தார்கள்...

கூட்டத்தினர் அருகில் வந்து சூழ்ந்து விடுவதைத் தடுக்க... அன்று மட்டும் காவல்துறையின் உதவியைக் கோரியிருந்தான் இந்திரஜித்... கட்டுக்கடங்காத கூட்டத்தை சமாளிக்க போலிஸார் திணறிக் கொண்டிருந்தார்கள்....

உலக அளவில் பேசப்படப்போகும் இந்திரஜித்தின் திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்ததையே... பேரதிர்ஷ்டமாக நினைத்த கதாநாயகனும்... கதாநாயகியும்.. டூப் போடாமல் தாங்களே... அந்த அபாயகரமான காட்சியில் நடிக்க முன் வந்திருந்தனர்...

கண்களைச் சிமிட்டக் கூட மறந்து காட்சியில் ஒன்றிப் போயிருந்த இந்திரஜித்... கைபேசி அலறவும்... அது யார் என்று கூடப் பார்க்காமல் அணைத்தான்...

சரயு விக்கித்துப் போனாள்... அவள் வருவதாகச் சொல்லியிருந் தாளே... இந்திரஜித் வரச் சொன்னானே... இந்தக் கூட்டத்தைத் தாண்டி... எப்படி அவள் வருவாள்... என்று ஏன் அவன் நினைத்துப் பார்க்கவில்லை....

சரயு மீண்டும் கைபேசியில் அழைத்தாள்...

“ஸ்விட்ச் ஆப்...” என்று பதிவு செய்யப்பட்ட இனிய பெண்குரல் அவளுக்குப் பதில் சொன்னது...

“என்னக்கா...” என்றாள் சரயுவின் முகம் மாறியதைக் கண்ட யமுனா...

“ஸ்விட்ச் ஆப்...ன்னு வருகிறதுடி...”

"ஷூட்டிங் சமயத்தில் போனை அணைத்திருப்பார்..."

"இப்போதுதானே நம்மை வரச்சொன்னார்...?"

"அப்போது வேலையில்லாமல் இருந்திருக்கலாம்... இப்போது வேலை ஆரம்பித்திருக்கலாம்..."

யமுனாவின் பேச்சினால் சரயுவின் மனதை சமாதானப்படுத்த முடியவில்லை... இதுபோன்ற கூட்டம்... கும்பல்களுக்கு அவள் வந்ததில்லை...

"யாரும்மா அது... தள்ளி நில்லுங்க..." ஒரு போலீஸ்காரர் அதட்டவும்... அவசரமாய் யமுனா... சரயுவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு பின்னால் நகர்ந்தாள்...

"நாம் திரும்பிப் போய் விடலாம் யமுனா..." சரயுவின் குரலில் தான் ஒதுக்கப்பட்டுவிட்ட உணர்வு தொனித்தது...

"ஏன்க்கா..."

"வேண்டாம்... எனக்கு என்னவோ போல் இருக்கிறது..."

"எனக்கு அப்படியெல்லாம் தோன்றவில்லை... காத்திருந்து அவரைப் பார்த்து விட்டுப் போகலாம்..."

"எதற்கு பிடிவாதம் பிடிக்கிறாய்...?"

"பிடிவாதம் பிடிப்பது நீயா... இல்லை நானா...? மூணாறில் உன் டைரக்டருக்கு அறுபதுநாள்தான் ஷூட்டிங்ன்னு சொன்னாய்... அதில் ஏற்கெனவே ஒரு மாதத்திற்கு மேல் ஓடிவிட்டது... இன்றைக்குத்தான் எனக்கும்... உனக்கும் சேர்ந்தாற்போல் லீவு வந்திருக்கிறது... அதைவிடப் பெரிய அதிசயமாய் அம்மா எதுவும் சொல்லாமல் பர்மிசன் கொடுத்திருக்கிறாங்க... இத்தனையும் சேர்ந்து... இனி நாம் எப்போது வந்து அவரைப் பார்ப்பது...?"

"நான் இன்னொரு நாள் உன்னைக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன் யமுனா..."

"இன்னொரு நாள் தனியாக இதற்கு என்று ஒதுக்கி வர முடியுமோ என்னவோ... இன்றைக்கு வந்து விட்டோம்... காத்திருந்து அவரைப் பார்த்துவிட்டுப் போய் விடுவோம்..."

யமுனா என்னவோ எளிதாகச் சொல்லி விட்டாள்... சரயுவிற்குத்தான் அந்த காத்திருத்தல் என்பது அவளால் முடியாத ஒன்று என்று தோன்றியது.

இதற்கு முன்னால் பலமுறை சரயு... இந்திரஜித்திற்காக காத்திருக்கிறாள்... அவன் வரும் வரை... செடியையும்... கொடியையும்... தேயிலை தோட்டங்களையும்... பறவைகளையும் ரசித்தபடி... நடைபழகிக் கொண்டிருந்திருக்கிறாள்.... அப்போதெல்லாம்... அவனுக்காக.... காத்திருந்த அந்தக் காத்திருப்பு அவளுக்கு இனிமையானதாக இருந்தது...

இப்போது... ஜனக் கூட்டத்திற்கு அப்பாலிருக்கும் அவன் அவளுக்கு சொந்தமில்லாதவன் போல... எங்கோ விலகிப் போய் விட்டது போல் அவள் உணர்ந்தாள்...

## 18

ஒருவழியாக அந்தக் காட்சி எடுத்து முடிக்கப்பட்டதும்... இந்திரஜித்... 'ஊப்...' என்று வாய்விட்டு சொல்லி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்...

"கொஞ்சம் தண்ணீர் குடு வாசு..."

வாசுதேவன் கொடுத்த தண்ணீர் பாட்டிலை மடமடவென்று வாயில் சரித்துக் கொண்ட இந்திரஜித்திடம்,

"சீன் பிரமாதமாக வந்திருக்கிறது சார்..." என்றான் வாசுதேவன்.

"ம்ம்... அதற்காகத்தானே... காலையிலிருந்து... தண்ணீர் குடிக்கக் கூட நேரமில்லாமல் பாடுபடுகிறோம்.."

"நேரம்தான் நிறைய ஆகிவிட்டது..."

"வேறு வழியில்லை வாசு... உயிரைப் பணயம் வைத்து நம்படத்தின் ஹீரோவும்... ஹீரோயினும் அந்த வழுக்குப் பாறையின் மேல் ஏறியிருக்கிறாங்க... அவங்களை அதிகநேரம் ஆபத்தில் வைக்கக்கூடாது... அதனால்தான் முன்னேற்பாடா எல்லா வேலைகளையும் செய்துவிட்டு அவங்களை பாறையின் மேல் ஏறவிட்டேன்..."

"ஹீரோ கூடப் பரவாயில்லை... ஆம்பளை... ரிஸ்க் எடுக்கிறார்... இந்த ஹீரோயின் மும்பையில் இருந்து வந்தவங்க... அழகாய் இருக்கணும்னு தினமும் ஜிம்முக்கு போகிறவங்க... அவங்க கை... காலெல்லாம் சிராய்த்து... ரத்தம் கசியுது... இப்படியொரு ரிஸ்க்கை எடுக்கத் துணியணும்ன்னா... உண்மையிலேயே அவங்களுக்கு நடிப்பில் ஆர்வமிருக்கு சார்..."

"நானும் அதைக் கவனித்தேன் வாசு..."

தூரத்தில் கேமராமேனுடன் நின்று கொண்டிருந்த முகிலன் அதைப்பார்த்து வயிறு எரிந்தான்...

'சரியான ஜால்ரா... காக்காய் பிடிப்பதில் மன்னன்... சதா ஒட்டுப்புல் போல அந்த ஆளை ஒட்டிக்கொண்டு பின்னாலேயே அலைகிறானே...'

"என்ன முகில்... நம்ம டைரக்டர் உன்னைவிட வாசுதேவன் கிட்ட ரொம்ப ஈஷிக்கிறாரே..." கேமராமேன் துக்கம் விசாரித்தார்.

"அவர் ஒன்றும் இவனிடம் ஈஷிக் கொள்ளவில்லைண்ணே... இவன்தான்... 'ஜிஞ்சா... ஜால்ரா...'ன்னு அவர் பின்னாலேயே தாளம் போட்டுக்கொண்டு அலைகிறான்..." முகிலன் கடுப்புடன் பதில் சொன்னாள்...

"அப்படியா... வாசுதேவனைப் பார்த்தால்... தாளம் போடுகிற ஆள் போலத் தெரியலையே... நிமிர்வான ஆளாச்சே..."

"உங்களுக்குத் தெரியாதுண்ணே... அவன் பெரிய கில்லாடி..."

"அதுதான் எனக்குத் தெரியுமே..."

"எது....?"

"அவன் பெரிய கில்லாடியென்பது..."

"உங்களையும் வளைத்து விட்டானா...?"

முகிலன் முறைக்க... காமெராமேன் பெரிதாக சிரித்தார்... எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கும் காற்றைப் போல... எல்லார் மனதிலும் பொறாமை நிறைந்திருக்கத்தான் செய்கிறது...

இந்திரஜித்... ஓய்வாக நாற்காலியில் அமர... படப்பிடிப்புக் குழுவினர்... அடுத்த காட்சிக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டனர்...

கைபேசியை எடுத்து... யாரிடமோ பேசப்போன இந்திரஜித்... சரயு அழைத்திருப்பதைப் கவனித்தான்...

சரயு கூட்டத்திலிருந்து தள்ளி மரத்தடியில் நின்று கொண்டிருந்தாள்... சிவப்பு நிற மலர்கள் எங்கும் உதிர்ந்து பரந்திருக்க... யமுனா... அதை ரசித்துக் கொண்டிருந்தாள்...

"அப்படியே பூக்கள் மெத்தை விரித்திருப்பது போல இருக்கிறதுக்கா..."

'எப்படி இவளால்... இந்தச் சூழ்நிலையில்... பூக்களை ரசித்துக் கொண்டிருக்க முடிகிறது...'

"என்னக்கா அப்படிப் பார்க்கிற...?"

"ஒன்றுமில்லை..."

"உன் ஆளுக்கு போன் செய்யேன்..."

"ஸ்விட்ச் ஆப்ன்னு வந்ததே...?"

"இப்போது வேலை முடிந்திருக்குமில்லையா...?"

"வேண்டாம் யமுனா..."

சரயுவை வினோதமாக பார்த்தாள் யமுனா...

'ஏன்... இவள் இப்படி சோர்ந்துவிட்டாள்... காலையில் கிளம்பி வரும்போது உற்சாகமாகத்தானே வந்தாள்...'

சரயு... தன் கையிலிருந்த போனை உயிரில்லாத பார்வை பார்த்துக் கொண்டிருந்தபோது... போன் மணி ஒலித்தது... அவசரமாய்ப் பார்த்தாள்... இந்திரஜித் அழைத்துக் கொண்டிருந்தான்...

கானகத்தில் தொலைந்துவிட்ட குழந்தை... பெற்றவர்களைக் கண்டதும் எப்படிக் குதூகலம் அடையுமோ... அதே குதூகலத்தை சரயு அடைந்தாள்... அவசரமாய் போனை எடுத்து...

"ஹலோ..." என்றாள்...

"கூப்பிட்டிருந்தாயா...?"

"ஆமாம்..."

"ஷூட்டிங் பார்க்க வரணுமின்னு சொன்னாயே... ஏன் வரவில்லை...?"

"அப்போதே வந்து விட்டேன்..."

"வந்து விட்டாயா...?"

இந்திரஜித்தின் கண்கள்... கூட்டத்தில் சரயுவைத் தேடின...

"எங்கேயிருக்கிறாய்...?"

"உங்களை விட்டுத் தூரத்தில் இருக்கிறேன்..."

இதைச் சொல்லும்போதே... துக்கம் தொண்டையை அடைக்க சரயு... குரல் தழுதழுத்தாள்... மறுமுனையில் இந்திரஜித் ஓர் நொடி மௌனம் சாதித்தான்... அடுத்த நொடியில்....

"சரயு... அழுகிறாயா...?" என்று கவலையுடன் கேட்டான்.

அவன் கேட்ட விதத்தில் சரயு உண்மையிலேயே அழுது விட்டாள்.

"ஏய்ய்... ச்சீ... இது என்ன சின்னக் குழந்தையாட்டம்... ம்ம்...? என்னிடம் நேரே வருவதற்கென்ன...?"

"எப்படி வருவது...? உங்களுக்கும் எனக்கும் இடையே இவ்வளவு ஜனக் கூட்டம் இருக்கிறதே... இதைக் கடந்து எப்படி வருவேன்...?"

"எனக்கொரு போன் பண்ணுவதற்கென்ன...?"

"பண்ணினேன்... முதல் முறை போனை அணைத்து விட்டீங்க... இரண்டாம் முறை 'ஸ்விட்ச் ஆப்...'ன்னு வந்தது..."

"ஓ... அது உன் போனா...? நான் நம்பரைக் கவனிக்க வில்லைம்மா..."

'நீ என்னையே கவனிக்கவில்லையே...'

சரயு மௌனம் சாதித்தாள்... அவளது உணர்வை புரிந்து கொண்டவனாய் இந்திரஜித் சமாதானப்படுத்தும் விதத்தில் தொடர்ந்து பேசினான்...

"இப்போது உன்னை அழைத்துக்கொண்டு வர ஆ... அனுப்புகிறேன்... இதற்குப் போயெல்லாம் கண்ணீர் விடக் கூடாது..."

"ம்ம்ம்..."

"இங்கே கொஞ்சம் ரிஸ்க்கான ஷாட் எடுத்துக் கொண்டி... தோம் சரயு... பாறை உச்சியில் ஹீரோவும்... ஹீரோயினும் உயி...

பணயம் வைத்து ஏறி நிற்கும்போது... படபடவென்று ஷாட்டை எடுத்து முடித்து... அவங்களை பத்திரமாய் கீழே இறக்கி விடணும்கிற நினைப்பு மட்டும்தான் எனக்கு இருந்தது... அதனால் உன் நினைப்பில்லாமல் இருந்து விட்டேன்னு நீ எடுத்துக் கொள்வதா...?"

சரயுவின் மனம் சமாதானம் அடைந்து... அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே...

"ம்ம்ம்..." என்றாள்...

"இங்கே வரும்போது சிரித்த முகமாய் வரணும்... யூனிட்டில் எல்லோருக்கும் உன்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன்... இந்த அழுமூஞ்சியையா... டைரக்டர் காதலிக்கிறாருன்னு யாரும் நினைத்துவிடக் கூடாது..."

"என்னைப் பற்றி ஏன்... எல்லோரிடமும் சொன்னீங்க...?"

"ஏன்... சொன்னால் என்ன...? அதனால் உனக்குக் கல்யாணம் ஆவது நின்று போய்விடுமா...?"

இந்திரஜித்தின் கோபம் மனதை வருட... சரயுவின் மனதில் இருந்த துயரம் மறைந்து... உல்லாசம் குடிகொண்டது... அவள் முகம் சிவக்க... உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

"நான் அப்படிச் சொன்னேனா...?"

"ஏன்... சொல்லித்தான் பாரேன்... அறை விழும்..."

"அடிப்பீங்களோ... என் அப்பாவிடம் சொல்லி விடுவேன்..."

"நான் வந்த பின்னால்... உன்மேல் உன் அப்பாவுக்குக் கூட உரிமையில்லை... என்னை ஏன்னு யாரும் கேட்க முடியாது..."

"அடேங்கப்பா... உரிமைக்குரல் பலமாய் இருக்கு..."

"தெரியுதில்ல... நீ இந்திரஜித்தின் பெண்டாட்டி... இதை உலகம் முழுவதும் சொல்வேன்..."

"முதலில்... உங்களுக்கும்... எனக்கும் இடையே இருக்கும் இந்த ஜனங்களிடம் சொல்லுங்க... உங்கள் முகத்தைப் பார்க்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா... இவங்க வழியையாவது விடட்டும்..."

"ஸாரி... ஸாரி... இதோ ஒரு நொடியில் ஆள் அனுப்புகிறேன்..."

சரயு... ஒளிர்ந்து... அடங்கிய கைபேசியை காதலுடன் பார்த்து முத்தமிட்டாள்...

"அடேங்கப்பா... காதல் ரஸத்தை... இந்தப் பிழி... பிழியறே... உன் டைரக்டர்... க்ளீன் போல்டு ஆகிவிட்டாரா... உன்னை என்னவோன்னு நினைத்தேன் அக்கா... இந்தப் போடு போடுகிறாயா..."

யமுனா செய்த கேலியில் இன்னும் முகம் சிவந்தாள் சரயு...

"போடி..."

சரயு... நகத்தைக் கடித்தபடி தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள்...

"அக்கா வேண்டாம்... தனியாய் பேசி சிரிக்காதே... பயமாயிருக்கு..."

"கேலி பண்ணுகிறாயா... உன்னை..."

சரயு தங்கையை விளையாட்டாய் ஓர் செல்ல அடி அடித்து விட்டு... கலகலவென்று சிரித்தாள்...

"நிஜமாகவே இது நீதானா அக்கா...? கொஞ்ச நேரத்துக்கு முன்னால்தான் வாழ்வே மாயம் ரேஞ்சுக்கு வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாய்... இப்போது என்னன்னா... இப்படி மலர்ச்சியாய் சிரிக்கிறாய்... உன் இந்திரஜித்திற்கு ஏதேனும் சித்து வேலைகள் தெரியுமா...? பெரிய 'ஜித்தனா'க இருக்கிறாரே..."

"அவர் 'ஜித்தன்'தான்... அதை நீ இப்போதுதான் சொல்கிறாய்... இந்த உலகம் எப்போதோ சொல்லிவிட்டது..."

"சரியான பெருமை பீற்றல் களஞ்சியம்தான் நீ..."

"ஆமாம்டி... அதுக்கென்ன இப்ப...?"

"டீச்சரம்மா... இப்போதுதான் காதல் பாடம் படிக்க ஆரம்பி திருக்கிறாங்க... ஒரு நிமிசம்... உலகமே தலைகீழாகி விட்டது போல பேசுகிறாங்க... மறு நிமிசம்.. இந்த உலகம் பிறந்தது எனக்காகன்னு சிரித்து மகிழ்ந்து போகிறாங்க... ம்ம்... இதெல்லாம் காதல் செய்யு வேலையா...?"

சரயுவை அழைத்துப் போக... முகிலன் வந்து விட்டான்... அவ பார்வை ஆராய்ச்சியாய்... சரயுவின் மேலும்... யமுனாவின் மேலு படிந்தது...

# 19

மாசு மறுவற்ற முகத்துடன்... ஒரு தேவதையைப் போன்ற அழகுடன் நின்றிருந்த சரயுவைப் பார்த்ததும் முகிலன் அயர்ந்து விட்டான்... செயற்கைப் பூச்சுக்கள் நிறைந்த முகங்களின் மத்தியில் மூச்சடைத்துப் போயிருந்தவன்... இயற்கையான வனப்புடன் இருந்த சரயுவின் அழகால் கவரப்பட்டான்.

'அந்த ஆளுக்கு இப்படி ஒரு காதலியா...?' அவன்மனம் பொறாமையின் தணலை அதிகரித்தது...

கடவுள் எல்லாவிதத்திலும் இந்திரஜித்தை ஆசிர்வதிக்கிறார் என்று அவனுக்குத் தோன்றியது... அவனது பார்வையைக் கண்ட யமுனா... சரயுவின் காதோரம் கிசுகிசுத்தாள்...

"என்னக்கா... இது... இந்த ஆள் இந்தப் பார்வை பார்க்கிறான்...?"

"ஸ்ஸ்... பேசாமல் இரு... இவன்... அவர் அனுப்பிவைத்த ஆள்..."

"அதற்காக... சகட்டுமேனிக்கு இவன் சைட் அடிக்கலாமா...?"

சரயுவின் தோள் பற்றி நின்றிருந்த பாந்தமாய் சேலைகட்டியிருந்த யமுனாவை முகிலன் அப்போதுதான் பார்த்தான்...

'யார் இந்த சுடிதார் சுந்தரி...?' அவன் ஆர்வமாய் பார்க்க..

'பார்வையைப் பார்... கழுகுப் பார்வை...' என்று யமுனா முகம் கடுத்தாள்...

சற்றுமுன் தாண்ட முடியாத கடலாக வழிமறித்திருந்த மக்கள் கூட்டம்... இப்போது... இரண்டாகப் பிரிந்து... அவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றது...

"இதுதான் டைரக்டர் கட்டிக்கப் போகிற பெண்ணாம்..." கூட்டம் கிசுகிசுக்க... சரயுவின் முகத்தில் பிளாஷ் வெளிச்சம் மின்னி மறைய அவள் நடுக்கமுற்றாள்...

"என்ன இது... போட்டோவெல்லாம் எடுக்கிறாங்க...?" அவள் பயந்து வினவினாள்...

"அப்புறம்... டைரக்டர் சார் காதலிக்கிற பெண்ணென்றா பிரஸ்காரங்க சும்மா விடுவாங்களா... இன்றைக்கு ஈவினிங் நியூ பூராவும் உங்களைச் சுற்றித்தான் இருக்கப் போகிறது..." என்று முகில புளியைக் கரைத்து அவள் வயிற்றில் ஊற்றினான்...

"ஐயையோ... யமுனா... வாடி போய்விடலாம்..."

"இது ஒருவழிப் பாதைங்க... இனி நீங்கள் திரும்ப நினைத்தாலு திரும்பவே முடியாது..."

அமானுஷ்ய குரலில் முகிலன் சொல்ல... யமுனா அவனை ஏ இறங்கப் பார்த்தாள்...

"யார் சார் நீங்க... என்னவோ... 'நம்பினால் நம்புங்க...' தினுசி உதார் விடுகிறீங்க..."

"என் பெயர் முகிலன்..."

"நான் கேட்டேனா...?"

"யார் சார் நீங்கன்னு இப்போதுதான் கேட்டிங்க...?"

"அதை மந்திரம் போடுகிற மந்திரவாதியாங்கிற தொனியில் கேட்டேன்... உங்களைப் பற்றித் தெரிந்து கொள்கிற ஆர்வத்தில் கேட்கவில்லை... அதனால் ஒழுங்காய் உங்கள் கைடு வேலையைப் பாருங்க..."

"கைடா...? நான் அஸிஸ்டெண்ட் டைரக்டர்ம்மா..."

"அம்மாவா...? யாருக்கு யார் அம்மா...?"

"தெரியாமல் சொல்லி விட்டேன் யமுனா..."

"என்னவோ காலம் காலமாய் பழகியது போல பெயர் சொல்லிக் கூப்பிடுகிறீங்க... எனக்கு இதெல்லாம் பிடிக்காது... ஜாக்கிரதை..."

"ஏங்க... அம்மான்னாலும் அலறுகிறீங்க.. பெயர் சொல்லிக் கூப்பிட்டாலும் சண்டைக்கு வருகிறீங்க... அப்புறம் எப்படித்தாங்க... உங்களிடம் பேசுவது...?"

"என்னிடம் நீங்க பேச வேண்டிய அவசியமில்லை சார்... வழிகாட்டத்தானே வந்தீங்க... அதை மட்டும் செய்யுங்க..."

யமுனாவின் வெடுக்... வெடுக்கென்ற பேச்சு முகிலனை

ஆச்சரியப்பட வைத்தது... அவன் அதை வாய்விட்டு சொல்லி விட்டு... அவளிடம் வாங்கிக் கட்டிக் கொண்டான்...

"ஹலோ... போனால் போகிறதுன்னு பார்த்தால்... அளவுக்கு மீறி வாய் பேசுகிறீங்களே... எவ்வளவு தைரியம் இருந்தால் என்னிடமே என் பேச்சை புகழ்வீங்க...? இன்றைக்கு என் பேச்சு நல்லா இருக்குன்னு சொல்வீங்க... நாளைக்கு என்னையே... நல்லாயிருக்கேன்னு சொல்வீங்க..."

"அப்படியா சொல்லச் சொல்கிறீங்க... அதுவும் சரிதான்... நீங்களும் பார்க்க நல்லாத்தான் இருக்கீங்க..."

"மிஸ்டர்..."

யமுனா... துப்பட்டாவை சரிசெய்து கொண்டே அவனுடன் சண்டை போடத் தயாராகும் போது...

"இதுதான் என் கொளுந்தியாளா..." என்று அவளுக்குப் பின்னால் ஒரு குரல் கேட்டது...

அவசரமாய் திரும்பிப் பார்த்தாள்... இந்திரஜித் புன்னகையுடன் அவளிடம் கை நீட்டினான்...

"ஹாய்... ஐ ஆம் இந்திரஜித்... உன் அக்காவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவன்..."

அந்த நிமிடத்தில்... பத்திரிகைக்காரர்களின் போட்டோக் களைப் பற்றிய கவலையை மறந்து... அவனை அதிக அளவில் நேசிக்க ஆரம்பித்தாள் சரயு...

"ஐ ஆம் யமுனா அத்தான்..." யமுனா வாய் நிறைய சிரிப்புடன் அவனுக்கு கைகொடுத்தாள்...

"எனக்குத் தெரியுமே..."

"எப்படித் தெரியும்..."

"உன் அக்கா சொல்லியிருக்கிறாள்... உன்னைப் பற்றிப் பெருமையாக பேசுவாள்... நேரில் பார்க்கும் போது... நீ அந்தப் பெருமைக்கு தகுதியானவள் என்பது எனக்குப் புரிகிறது..."

யமுனா... இந்திரஜித்தின் பேச்சில் ஆகர்ஷிக்கப்பட்டாள்... சகோதரியை மணக்கப் போகிறவன்... ஒரு சகோதரனைப் போன்ற

அன்பைக் காட்ட முடியும்... என்பதை அன்று உணர்ந்தவளுக்கு... அவன் மேல் பாசம் பெருகியது...

"அத்தான்... யாரிடமும் மயங்காத சரயு அக்கா... ஏன் உங்களிடம் இந்த அளவுக்கு மயங்கிப் போனாள் என்று எனக்கும் இப்போதுதான் புரிகிறது..."

"ஊஹூம்...? நான் பார்க்க அவ்வளவு அழகாக இருக்கிறேனா...?"

"பழக அவ்வளவு அன்பாக இருக்கிறீங்க..."

"ஆஹா... மச்சினிச்சி... மூணாறு குளிரில் இவ்வளவு பெரிய ஐஸ் கட்டியைத் தூக்கி என் தலையில் வைத்தால் நான் தாங்குவேனா...?"

அவர்கள் இருவரும் கலகலப்பாய் பேசுவதை தள்ளி நின்று கவனித்துக் கொண்டிருந்த முகிலன் முகம் மாறினான்...

'என்னிடம் பேசமட்டும் கணக்கு பார்ப்பாளாம்... இவனிடம் பல்லைக் காட்டிப் பேசுவாளாம்... எந்த ஊர் நியாயம் இது...?'

அவர்களின் உறவை உடைக்க வேண்டும் என்ற வெறி அவன் மனதினில் எழுந்தது...

இந்திரஜித்தின் கண் பார்வையில் யமுனாவிற்கும்... சரயுவிற்கும் நாற்காலிகள் போடப்பட்டன... சுற்றியுள்ள கூட்டத்தைப் பார்த்தபடி... சரயு தயக்கமாய் அமர... யமுனா பெருமையாக அமர்ந்து கொண்டாள்...

"சார்... ஷாட் ரெடி..." வாசுதேவன் அருகில்வந்து சொன்னான்...

"சரயு... நான் ஷாட்டை முடித்துவிட்டு வந்துவிடவா...?" இந்திரஜித் சரயுவிடம் அனுமதி கேட்க... வாசுதேவன் வியப்புடன் சரயுவைப் பார்த்தான்...

சரயு முகம் சிவக்க... தலை அசைத்தாள்...

அவ்வளவு பெரிய டைரக்டர் என்ற பெயர் வாங்கியவன்... எளிமையான தோற்றத்துடன் இயல்பாக இருக்கும் இளம் பெண்ணிடம் காட்டிய வாத்சல்யத்தைக் கண்டு வாசுதேவன் ஆச்சரியப்பட்டுப் போனான்...

இந்திரஜித்... சில நொடிகளில்... சரயுவை மறந்து வேலையில் இறங்கிவிட... அவன் இங்கும்... அங்கும் நடப்பதையும்... துடிப்புடன் செயலாற்றுவதையும்... காதலுடன் கவனித்துக் கொண்டிருந்தாள் சரயு...

'இவன் என்னுடையவன்...' நினைக்கும் போதே அவளுள் ஏதோ பொங்கியது...

யமுனா சுவாரஸ்யமாய் படப்பிடிப்பை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்...

"இப்படித்தான் படம் எடுக்கிறாங்களா...? எவ்வளவு பெரிய சவால்க்கா இது... ஹப்பா... ஒரு வினாடி வந்து போகிற சீனுக்குப் பின்னால்... இவ்வளவு உழைப்பு இருக்கிறதா...?"

"நானும் இதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன் யமுனா..."

அருவியின் அருகில் நின்று பேசிக் கொண்டிருக்கும் கதாநாயகி... கால் வழுக்கி... அருவி நீரில் விழுந்து... அதன் நீரோட்டத்தோடு... சேர்ந்து கீழே செல்கிறாள்...

"பென்டாஸ்டிக்... அற்புதமாக செய்து விட்டிங்க... உங்களுக்கு வளமான எதிர்காலம் காத்திருக்கிறது..."

காட்சி எதிர்பார்த்த விதத்தில் அமைந்துவிட்ட சந்தோசத்தில் இந்திரஜித் மனம் விட்டுக் கதாநாயகியை பாராட்டினான்...

அவளோ மகிழ்ந்து போனாள்... அவ்வளவு பெரிய இயக்குநரின் பாராட்டுக் கிடைத்த சந்தோசத்தில்... இந்திரஜித்தைக் கட்டித் தழுவி முத்தமிட்டுவிட்டாள்...

"தேங்க்யு சார்... தேங்க்யு வெரிமச்..."

இந்திரஜித்திற்கு இது புதிதான விசயமில்லை... அவன் அதை இயல்பாக எடுத்துக் கொண்டவனாய்... சிரித்துக் கொண்டே நிஷாவை விலக்கி நிறுத்தி அவள் கன்னத்தில் தட்டிவிட்டு காமெராமேனிடம் பேசப் போய் விட்டான்...

ஆனால் அதைப் பார்த்துக் கொண்டிருந்த சரயுவிற்கு மூச்சடைத்துப் போனது... அவள் கண் முன்னாலேயே நடந்த அந்த நிகழ்வைக் கண்டு அவள் பதறிவிட்டாள்...

"என்ன அப்படிப் பார்க்கறீங்க...?"

சரயு திரும்பிப் பார்த்தாள்... முகிலன் நின்று கொண்டிருந்தான்...

"இவங்க இப்படித்தான்... அடிக்கடி முத்தம் கொடுத்துக்கு வாங்க... டைரக்டரை காதலிக்கிறீங்க... இதையெல்லாம் கண்டும்... காணாத மாதிரி போய் விடணும்னு உங்களுக்குத் தெரியாதா என்ன...?"

முகிலன் எதைப் பேசினாலும்... அவன் மூக்கை உடைப்பதைப் போலப் பேசும் யமுனாகூட பதில் பேசாமல் அமைதி காத்தாள்...

நிஷா முத்தம் கொடுத்ததைக் கூட அவளுடைய இயல்பு என்று அவள் எடுத்துக்கொள்ளத் தயாராக இருந்தாள்... ஆனால் அதை சர்வ சாதாரணமாய் ஏற்றுக்கொண்ட இந்திரஜித்தின் இயல்பை அவள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை...

"நான் கூட நினைத்துக் கொள்வேன்... தனிப்பட்ட இடங்களில் அப்படி... இப்படி இருக்கலாம்... ஷூட்டிங் நடக்கும் பொது இடங்களில் நாகரிகம் காக்க வேண்டும் என்று.... ஆனால் பூனைக்கு மணியைக் கட்டுவது யார்...? இதை டைரக்டரிடம் என்னால் சொல்ல முடியுமா...? நீங்க... டைரக்டரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவங்க... நீங்க சொன்னால் டைரக்டர் ஒருவேளை கேட்கலாம்..."

அவள் ஒரு 'இக்'கன்னாவுடன் நிறுத்த சரயு திகிலுடன் தங்கையைப் பார்த்தாள்...

'ஒருவேளை... நான் சொல்லி அவர் கேட்காமல் போய் விட்டால்...?' என்று அவள் விழிகள் யமுனாவிடம் கேள்வி கேட்டன...

"இங்கே என்ன பண்ணுகிறாய் முகிலன்... அங்கே வாசு... தனியாக வேலை செய்து கொண்டிருக்கிறான் பார்..." இந்திரஜித் சரயுவின் அருகேயிருந்த நாற்காலியில் வந்து அமர்ந்தான்...

'கொஞ்ச நேரம் நான் இந்தப் பெண்களிடம் பேசினால் உனக்குப் பொறுக்காதே... அங்கே இப்போதுதானே ஒருத்தியிடம் முத்தம் வாங்கினாய்... உடனே இங்கே வந்து வழிய வேண்டுமா... கொஞ்சம் பொறுத்து வந்தால் ஆகாதா...?'

மனதிற்குள் புழுங்கியபடி முகிலன் அந்த இடத்தை விட்டு அகன்றான்... இந்திரஜித் சரயுவைப் பார்த்து காதலுடன் சிரித்தான்...

'இவனா... கொஞ்ச நேரத்திற்கு முன்னால்... இன்னொரு பெண்

முத்தம் கொடுக்க... கன்னத்தை காட்டி நின்றவன்...'

சரயுவின் நெஞ்சில் துக்கம் பந்தாக சுருண்டு அடைத்தது... அவள் இந்திரஜித்தின் பார்வையை தவிர்த்து... யமுனாவைப் பார்த்தாள்...

"போகலாமா... யமுனா..."

"ம்ம்ம்..."

அவர்கள் எழுந்து கொள்ள முயல... இந்திரஜித் சரயுவின் கரத்தைப் பிடித்துத் தடுத்தான்...

"உட்கார்... ஒருவார்த்தை கூடப் பேசாமல்... ஓடப் பார்த்தால் எப்படி...? கொஞ்சநேரம் கழித்துப் போகலாம்..."

அவன் அதட்டிக் கொண்டு இருக்கையில்... நிஷா மீண்டும் இந்திரஜித்தின் அருகே வந்தாள்... அவள் மேனியிலிருந்து எழுந்த இதமான நறுமணம் சரயுவின் நாசியை துளைத்தது... அவள் இயலாமையுடன் யமுனாவை கண் கலங்கப் பார்த்தாள்...

## 20

நிஷா பளிச்சென்று வெண்மையான சருமத்துடன் பால் போன்ற வழவழப்பான மேனியுடன் இருந்தாள்... கூந்தலை அளவாகவும்... அழகாகவும் வெட்டி விட்டிருந்தாள்... நுனி நாக்கில் ஆங்கிலம் பேசினாள்... ஒவ்வொரு வார்த்தைக்கும் சிரித்தாள்... இந்திரஜித்தை தொட்டுத் தழுவிப் பேசினாள்... இந்திரஜித் அவளிடம் கொஞ்சம் கூட முகம் மாறாமல் பேசிச் சிரித்தான்... பேச்சின் இடையில் நிஷாவின் பார்வை சரயுவின் மீது படிய... அதை உணர்ந்தவனாய்... சரயுவை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தான்...

"இவள்தான் என் வருங்கால மனைவி... நிகழ்காலக் காதலி... பெயர் சரயு..."

"ஓ... நைஸ்..."

நிஷா உதடுகளை அழகாகக் குவித்துக் கூறினாள்... அவள் கண்களில் பொறாமை அப்பட்டமாக தெரிந்தது...

"நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி..." என்று சரயுவைப் பார்த்து... ஆங்கிலத்தில் கூறினாள் சரயு...

'எந்தவகையில் நான் அதிர்ஷ்டசாலி...? என் கண் முன்னால் நீ அவரை முத்தமிடுவதை பார்த்துக்கொண்டு கையாளாகாமல் இருக்கிறேனே... அந்த வகையிலா...? இல்லை... உன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறேனே... அந்த வகையிலா...?'

சரயு மனதிற்குள் கேட்டுக் கொண்டாள்... நிஷாவை வாசுதேவன் அழைக்கவும் அவள் போய் விட்டாள்...

"அருமையான பெண்..."

நிஷாவைப் பார்த்துக் கொண்டே சரயுவிடம் கூறினான் இந்திரஜித்...

"எந்த வகையில்...?" பட்டென்று கேட்டுவிட்டாள் சரயு...

இந்திரஜித்தின் புருவங்கள் உயர்ந்தன... அவன் கேள்வியுடன் சரயுவைப் பார்த்தான்... அவள் இதற்குமுன் இப்படிப் பேசி அவன் கேட்டதில்லை...

"புரியவில்லை..." அழுத்தமாக வினவினான்...

"புரியாவிட்டால் பரவாயில்லை..." சரயு எரிச்சலுடன் முகம் திருப்பிக் கொண்டாள்...

இந்திரஜித்தின் முகத்தில் கோபத்தின் நிழல் படிந்தது... அவன் யமுனாவை பார்த்துவிட்டு... தன்னை அடக்கிக் கொண்டவனாய்...

"ஓ.கே... இந்தப் பேச்சை விடு... என்ன சாப்பிடுகிறாய்... காபி... அல்லது டீ..." என்று கேட்டான்...

"எதுவும் வேண்டாம்..."

"ஏன் வேண்டாம்...? உனக்கு டீதானே பிடிக்கும்... அதைக் கொண்டு வரச் சொல்லுகிறேன்... யமுனா... உனக்கு...?"

"டீதான் அத்தான்..."

இந்திரஜித் உதவியாளரை அழைத்து அவர்கள் மூவருக்கும் 'டீ' கொண்டு வரச் சொன்னான்... சரயு தலைகுனிந்தபடி கைவிரல்களை கோர்த்துப் பிரித்துக் கொண்டிருக்க... யமுனாவிடம் பேசியபடியே... அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் இந்திரஜித்... ஊடே லேசாக விழியுயர்த்திப் பார்த்தவள்... இந்திரஜித்தின் பார்வையை கண்டு கொண்டாள்... அவள் விழிகளில் மின்னலடித்தது... இந்திரஜித்தின் கோபம் மறைந்தது...

'மனதில் காதலை வைத்துக்கொண்டு... முறைப்பென்ன வேண்டிக் கிடக்கிறது... என்னிடம் முறைத்துக் கொள்ள இவளால் முடியுமா...?'

அவன் முக இறுக்கம் தளர்ந்தவனாய் அவளைப் பார்த்து புருவங்களை உயர்த்திச் சிரித்தான்... யமுனாவின் முன்னால்... அவன் அப்படிச் செய்யவும்... சரயுவிற்கு வெட்கமாக போய்விட்டது... யமுனா அவளின் வெட்கம் உணர்ந்த கேலிச் சிரிப்பான்றைச் சிந்தினாள்...

எல்லாம் ஓரளவு சரியாகிவிட்டதுபோல் இருந்தது... யமுனா கூட நிஷா இந்திரஜித்தை முத்தமிட்ட விசயத்தை மறந்துவிட்டாள்... மனநிறைவோடு... அவர்கள் பேச ஆரம்பித்தபோதுதான் அது நிகழ்ந்தது...

நிஷா இந்திரஜித்தை முத்தமிட்ட காட்சியை தன் செல்போனில் படம் பிடித்துக்கொண்ட முகிலன்... சரயுவிடம் இந்திரஜித் பேசிக் கொண்டிருந்த காட்சியையும் படம்பிடித்துக் கொண்டான்... இரண்டு படங்களையும்... சூடான செய்திகளுக்காக ஆவலுடன் காத்திருந்த பத்திரிகை நிருபர் ஒருவரின் செல்போனுக்கு அனுப்பி வைத்தான்... அத்துடன் நிறுத்த மனமில்லாதவனாய்... இந்திரஜித்திடம் பேசத் துடித்துக் கொண்டிருந்த கல்லூரி மாணவியர் சிலரை... அவனிடம் பேச அனுமதித்தும் விட்டான்...

"ஹூய்..." என்ற கூவலுடன் ஓடிவந்த இந்திரஜித்தை சூழ்ந்து கொண்டார்கள் அவர்கள்...

"ஹையோ... உங்களைப் பார்க்கணுமுன்னு காலையில் இருந்து காத்துக் கிட்டிருக்கோம் தெரியுமா சார்..."

"சார்... உங்க படமுன்னா எனக்கு உயிர்... அதைத் திரும்பத் திரும்ப... எத்தனை முறை பார்த்தாலும்... எனக்கு அலுக்காது..."

"உங்கள் படத்தின் கதைகளை நீங்களே உருவாக்குவீங்களா சார்...?"

"அது எப்படி... உங்கள் படத்தின் பாடல்கள் மட்டும் ரசனையோடு - படத்தின் காட்சியோடு ஒன்றிப் போய் அமைகின்றன...?"

கேள்விகள்... கேள்விகள்... கேள்விகள்... இந்திரஜித்தை சுற்றி... அவர்கள் நெருங்கி நிற்க... சரயுவும்... யமுனாவும்... தூரமாய் தள்ளிக்கொள்ள வேண்டியதாகிவிட்டது...

அந்தப் பெண்களின் கண்களில் தெரிந்த ஆவலையும்... பிரேமையையும் கண்ட சரயுவின் மனதில் அவளுடைய உடைமை... கொள்ளை போய்க் கொண்டிருக்கும் பரிதவிப்பு உருவானது...

"யமுனா... வா... போய் விடலாம்..."

"அக்கா... கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாமே..."

"எதைப் பார்க்க...? இதைப் பார்த்தால் எனக்குத் தாங்கவில்லை..."

"நீ ரொம்ப பொஸஸிவ் அக்கா..."

"அப்படி இருப்பது பெரிய குற்றமா...?"

"அவர் புகழ்பெற்ற டைரக்டர்..."

"இருக்கட்டுமே... அது ஊருக்குத்தானே... எனக்கு அவர்... அவர்தானே... வா... போகலாம்..."

யமுனா செய்வதறியாது இந்திரஜித்தை திரும்பிப் பார்த்தாள்... அவன் அந்தப் பெண்கள் நீட்டிய சிறிய கையேடுகளில்... கையெழுத்து போட்டுக் கொண்டிருந்தான்... சரயுவையும்... யமுனாவையும் இப்போதைக்கு திரும்பிப் பார்ப்பான் என்று அவளுக்கு தோன்றவில்லை... வேறு வழியின்றி சரயுவுடன் அந்த இடத்தை விட்டு அகன்றாள்...

சரயுவின் கண்களில் தோற்றுப் போன வேதனை பிரதிபலித்தது... அதைக் குரூரமான புன்னகையுடன் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் முகிலன்...

**வீ**ட்டிற்கு திரும்பும்போது சரயு எதுவும் பேசவில்லை... மௌனமாக இருந்தாள்... முதல் முறையாக... தான் எடுத்த முடிவு சரியானதுதானா... என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள் அவள்... சரயுவின் மனநிலை புரிந்தவளாய் யமுனாவும் எதையும் பேசாமல் அமைதியாய் வந்தாள்....

"ஏண்டி... லேட்...? பெண் பிள்ளைகளாய் லட்சணமாய் பொழுது சாய்வதற்கு முன்னாலேயே வீட்டுக்கு வந்து சேர வேண்டாமா...? ஊரில்... உலகத்தில்... உங்களைப் போல யாராவது ஊர் சுற்றுகிறார்களான்னு போய் பாரு..."

வீட்டுக்குள் அவர்கள் நுழைவதற்கு முன்னாலேயே பார்வதி அர்ச்சனையை ஆரம்பித்துவிட்டாள்...

"அம்மா... கொஞ்சம் வீட்டுக்கு வெளியே வாங்க..." யமுனா வாசலிலேயே நின்று கொண்டாள்...

"வெளியே என்னடி இருக்கு...?"

"ம்ம்... சூரியன் இன்னும் மேற்கே இறங்காமல் இருக்கு... வழக்கமாய் பேசுகிற டயலாக்கை மடமடன்னு பேசுவதற்கு முன்னால் கொஞ்சம் மணியைப் பார்த்துவிட்டுப் பேசணும்... இப்போதுதான் நாலுமணியாகிறது... இது பொழுது சாய்ந்த நேரமா...?"

"இந்த வாய்க்கொன்றும் குறைவில்லை... இந்த வாய்தாண்டி உன்னை வாழ வைக்குது..."

"உங்க மகள் நன்றாக வாழ்ந்தால் உங்களுக்குத்தானே பெருமை..."

"லீவு நாளில் வீட்டில் அடங்கி உட்காராமல் ஊரைச் சுற்றி விட்டு வந்து பேசுகிற பழமையைப் பார்..."

"பேசுவதை கேட்கத்தானே முடியும்.. எப்படிம்மா பார்க்க முடியும்.."

"பதிலுக்குப் பதில் பேசாட்டி உனக்கு தூக்கமே வராதா..."

"பதிலுக்குப் பதில் பேசாட்டி உனக்கு தூக்கமே வராதா..."

சின்ன மகளின் காதைப் பிடித்துத் திருகியபடி பார்வதி சிரித்தாள்... சரயுவின் சோர்ந்த நிலையை பார்வதி கவனித்து விடாமல் இருக்க... அவளது கவனத்தை திரும்பும்படி வம்பிழுத்து அதில் வெற்றி கண்ட யமுனா... தாயாரிடம் கொஞ்சியபடி அவளை உள்ளே இழுத்துக்கொண்டு போய்விட்டாள்...

"லீவு நாளில் வீட்டிலிருந்தால் ஒரு ஸ்பெசல் டிபன் பண்ணிப் போடணும்கிற நினைப்பு மட்டும் இல்லை... ஊரைச் சுற்றாதே... ஊரைச் சுற்றாதேன்னா... ஊரைச் சுற்றாமல் வீட்டில் இருந்தால்... வாய்க்குள் போட... வக்கணையா என்ன பலகாரம் பண்ணி வச்சிருக்கீங்க...?"

"பலகாரம்தானேடி வேணும்...? ஒரு நொடியில் பண்ணி விட்டால் போகிறது..."

அவர்களின் குரல்கள் அகன்றுவிட... சரயு சோர்ந்து போனவளாய் அப்படியே சரிந்து... சுவரில் சாய்ந்து உட்கார்ந்து...

முழங்கால்களை மடித்து... அதில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்... மூடிய விழிகளுக்குள்... நிஷா இந்திரஜித்தை முத்தமிட்ட காட்சி தோன்றியது... அவளை விட்டு விலகாத இந்திரஜித்... அவளது முத்தத்தை ஏற்றுக்கொண்டு... அவள் கன்னம் தட்டிய இந்திரஜித்... இளம் பெண்களின் நெருக்கத்தில்... கோபியர் புடைசூழ கண்ணன் நடுவில் நின்றது போல... நின்று கொண்டிருந்த இந்திரஜித்... அவர்களின் தொடுகையை உணர்ந்தும் சிரித்த முகத்துடன் அதை அனுமதித்த இந்திரஜித்...

இந்திரஜித்... இந்திரஜித்... என்று மனம் பூராவும் அவனின் பல்வேறு தோற்றங்கள் வியாபிக்க... தாள முடியாத மன வேதனையுடன் கண்களை மூடிக் கொண்டாள் சரயு...

## 21

**எ**த்தனை நேரம் அப்படியே அமர்ந்திருந்தாளோ... பளீரென்று முன்னறை விளக்கு எரியவும்... கண்கள் கூச... தலைநிமிர்ந்து பார்த்தாள் சரயு... புகழேந்தி நின்றிருந்தார்... மகளின் முகத்தோற்றம் அவருக்கு எதையோ உணர்த்த... அசையாமல் ஒருகணம் நின்றார்... தந்தையின் பார்வையை சந்திக்க இயலாமல் சரயு பார்வையைத் தாழ்த்திக் கொள்ள... அமைதியாய்... அவளருகில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தார் புகழேந்தி... மகளின் தலையை பாசத்துடன் தடவிக் கொடுத்தவர்...

"அழுதாயம்மா...?" என்று மென்குரலில் வினவினார்...

"இல்லைப்பா..."

"உனக்குப் பொய் சொல்ல வராதேம்மா..."

சரயு மௌனித்தாள்... புகழேந்தி அவளுடைய மௌனத்தை கலைக்க விரும்பாதவராய்... அவள் முகத்தையே யோசனையுடன் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தார்...

"ஹாய்... அப்பா... இந்தாங்க பக்கோடா..." யமுனா துள்ளலுடன் வந்து அவரிடம் தட்டைக் கொடுத்தாள்...

"இன்றைக்கு என்ன விசேசம்...?" தட்டைவாங்கிக் கொண்டே கேட்டார் புகழேந்தி...

"உங்க இளைய மகள்... பலகாரம் வேணும்ன்னு அடம் பிடித்தாள்... அதுதான் விசேசம்..." பார்வதி காபியுடன் வந்தாள்...

அடுத்து அவர்கள் இருவரையும் சரயுவைக் கவனிக்க விடாமல்... தன்னை மட்டும் கவனிக்கும்படி யமுனா பார்த்துக் கொண்டாள்... சுவாரஸ்யமாய் பேசுவதற்கு அவளுக்கு ஆயிரம் விஷயங்கள் இருந்தன...

இரவில்... பெற்றவர்கள் தூங்கிவிட்டதை உறுதிப்படுத்திக் கொண்ட பின் யமுனா சரயுவிடன் பேச ஆரம்பித்தாள்.

"நீ உன்னைப் போட்டு வருத்திக் கொள்கிறாய் அக்கா..."

"நான் வேறென்ன செய்ய யமுனா...? என்னால் முடிந்தது அதுதானே..."

"எனக்கென்னவோ இந்திரஜித்தைப் பார்த்தால் நல்லவர் போல்தான் தெரிகிறது..."

"நான் இல்லையென்று சொன்னேனா...?"

"அப்புறமும் ஏன் இப்படி இருக்கிறாய்...? அவருடைய படைப்புக்களை ரசித்து... நேசித்தவள்தானே நீ...? உன்னைப் போல்தானே இந்த உலகம் பூராவும் ரசிக்கும்...?... நேசிக்கும்...?"

"அதுதான்... அதேதான்... நானும் நினைப்பது யமுனா... அவர் இந்த உலகத்தால் நேசிக்கப்படுகிறவர்... பதிலுக்கு நேசிப்பவர்... எனக்கு மட்டும் சொந்தமாய் இருக்க மாட்டார்..."

"கடலைக் கைக்குள் அடக்க நினைக்கிறாய்... அது உன்னால் முடியாது..."

"இத்தனை நாள் இது எனக்குத் தெரியாது... இப்போதுதான் தெரிந்தது யமுனா..."

"இத்தனை நாளில் நீ எதைத்தான் தெரிந்துகொண்டிருந்தாய்...? என்னதான் நினைத்துக் கொண்டிருந்தாய்...?"

"எனக்கும்... அவருக்குமிடையிலான காதலை தெரிந்துக் கொண்டிருந்தேன்... காதலால் அவரை என் கைக்குள் நிறுத்திக் கொள்ள முடியுமென்று நினைத்துக் கொண்டிருந்தேன்..."

"நீ அவரின் காதலை சந்தேகப்படுகிறாயா...?"

"கொஞ்சம் கூட இல்லை... என் மீதான அவரின் காதல் உண்மையானது... உன்னதமானது... ஆனால் அந்தக் காதலால் நான் ரசிகையென்பது மறைந்து போய்... அவரின் காதலியாய் மாறிவிட்டேனில்லையா...? அதுதான் இப்போது எனக்குப் பிரச்னையாக இருக்கிறது..."

"நீ ரொம்பவும் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொள்கிறாய் அக்கா..."

"உனக்கு என் வேதனை புரியாது யமுனா... அவர் எனக்கு மட்டும் சொந்தமானவராக இருக்க வேண்டுமென்று என் மனம் துடிப்பது உனக்குப் புரியாது... என் முன்னால் அந்த நிஷா அவர் கன்னத்தில் முத்தமிட்டபோது... என் உயிரே போவது போல் ஓர் மரண வலியை நான் உணர்ந்தது உனக்குப் புரியாது... அவரைப் பார்க்க நாம் போயிருந்தபோது... அவரின் கிட்டே நெருங்க முடியாமல் ஊடே ஜனக் கூட்டமிருந்ததைக் கண்டு... அவரையே இழந்து விட்டேனோன்னு நான் பயந்து போனது உனக்குப் புரியாது... அவரின் பக்கத்தில் நாமிருந்தும்... ஒரு நொடியில் நம்மை நகரவைத்து அவரைக் கைப்பற்றிக் கொண்ட பெண்கள் கூட்டத்தைப் பார்த்து... 'அவர் என்னுடையவர்... அவரைத் தொட்டுப் பேசாதே...'ன்னு சொல்ல முடியாமல் ஊமையாய் நிற்க வேண்டி வந்ததால் நான் பட்ட துயரம் உனக்குத் தெரியாது..."

சரயு அதிகம் பேசமாட்டாள்... அவள் இவ்வளவு நீளமாகப் பேசியதைக் கண்ட யமுனா... ஆச்சரியமாய் அவளைப் பார்த்தாள்...

'காதல்தான் ஒருவரை எப்படியெல்லாம் மாற்றிவிடுகிறது...'

"அக்கா... பழைய பாட்டு ஒன்று இருக்கிறது... நீ கேட்டிருப்பாய்..."

"ம்ம்... சொல்லு..."

"பிருந்தாவனமும்... நந்தகுமாரனும்...
யாவருக்கும் பொது செல்வமன்றோ...
ஏனோ... ராதா... இந்தப் பொறாமை...
யார்தான் அழகால் மயங்காதவரோ..."

"யமுனா... வேண்டாம்... பாடாதே..."

சரயு கரகரவென்று கண்ணீர் விட ஆரம்பித்து விட்டாள்... யமுனா பதறிப் போய் பாட்டை நிறுத்திவிட்டு... சரயுவின் அருகில் நகர்ந்து படுத்து... அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டாள்...

"என்னக்கா இது... சின்னக் குழந்தையாட்டம் இப்படிக் கண் கலங்குற... பேசாமல் தூங்கு..."

"முடியவில்லை யமுனா... தூக்கம் வரவில்லை..."

அவளின் துன்பம் கண்டு யமுனாவிற்கு மனம் கனத்தது...

'காதல் இத்தனை கொடுமையானதா...? ஒருவரின் நிம்மதியைக் கொன்று... உறக்கத்தைத் தின்றுவிடும் இந்தக் காதலில் விழாமல் இருக்கும்வரை... என் அக்கா... சிரித்துக் கொண்டிருந்தாளே... இப்போது தினமும் ஏதாவது ஒரு வகையில் கண் கலங்கி விடுகிறாளே...'

தன்னையறியாமல் யமுனா உறங்கிவிட... சரயு மட்டும்... விடியும் வரை உறங்கவில்லை... விடியற்காலையில் லேசாக கண்ணயர்ந்த போது... பார்வதி அவளை அவசரமாய் உலுக்கி எழுப்பினாள்... தூக்கக் கலக்கத்துடன்... கண்களைக் கசக்கிக்கொண்டு எழுந்து அமர்ந்த சரயுவின் முகத்தில் காலைப் பேப்பரை வீசினாள்...

"அம்மா..." தூக்கம் கலைந்து போன சரயு... மலங்க... மலங்க விழித்தாள்...

"என்னடி இது...?"

"எது...?"

சரயு புரியாமல் பேப்பரைப் பார்த்துக் கொண்டு வினவ பார்வதி ஆத்திரத்துடன் 'பளார்...' என்று அவளது கன்னத்தில் அறைந்தாள்...

"அம்மா..." சரயு அதிர்ந்து போனாள்...

"பேப்பரில் நம் வீட்டு சங்கதிதான் சிரிப்பாய் சிரிக்குது... இதுக்குத்தான் நேற்றைக்கு... நீயும் உன் தங்கையும் கூட்டணி போட்டுக்கிட்டு ஊரைச் சுற்றப் போனீங்களா? இத்தனை நாள் இருக்கிற இடம் தெரியாமல் நிம்மதியாய் இருந்தோமே... ஒரே நாளில் அதைக் குழிதோண்டி புதைத்து விட்டியேடி பாவி... எத்தனை நாளாய் இந்தக் காதல்... கருமாந்திரமெல்லாம் நடக்குது...?"

பார்வதி போட்ட சத்தத்தில் விழித்துக் கொண்ட யமுனா அவசரமாய் பேப்பரை எடுத்துப் பார்த்தாள்... முதல் பக்கத்தில் சரயுவும்... இந்திரஜித்தும் அருகருகே அமர்ந்திருக்கும் புகைப்படமும்... நிஷா... இந்திரஜித்தை முத்தமிடும் புகைப்படமும் பிரசுரிக்கப் பட்டிருந்தன... தலைப்புச் செய்தி... கொட்டை எழுத்தில்...

**'டைரக்டர் இந்திரஜித்... யாருக்கு சொந்தமாவார்...?'** என்று வினவியிருந்தது...

"அக்கா..." என்றாள் யமுனா... கலவரமான முகத்துடன்... அவள் நீட்டிய பேப்பரை வாங்கிப் படித்த ச்ரயுவின் முகம் வெளிறியது...

முதல்நாள் படப்பிடிப்பில் நடந்தது... அதற்குள் எப்படி ஊர்... உலகம் முழுவதும் வெளியாகும் பரபரப்புச் செய்தியானது என்று புரியாமல்... தாயைப் பார்த்தாள் சரயு...

"என்னடி இஞ்சி தின்ற குரங்காட்டம் என்னைப் பார்க்கிற...? இதில் எழுதியிருக்கிறது உண்மையா...?" பார்வதி ருத்ர அவதாரம் எடுத்திருந்தாள்...

'ம்ஹூம்... இவ்வளவு அழகான அக்காவிற்கு உவமைசொல்ல இஞ்சி தின்ற குரங்குதானா... அம்மாவிற்கு கிடைத்தது...?' என்று மனதில் தோன்றியதை வெளியில் சொல்லும் நேரம் அதுவல்ல என்பதால் வாயை மூடிக்கொண்டு சரயுவைப் பார்த்தாள் யமுனா...

சரயுவின் நிமிர்ந்த - நேராக நோக்கும் பார்வை... தாழ்ந்திருந்தது... அவள் கன்னம் பார்வதி அடித்த அடியில் விரல்கள் பதிந்து சிவந்திருந்தது. யமுனாவிற்கு சரயுவின் மேல் இரக்கம் சுரந்தது...

"இவ்வளவு கத்துகிறேன்... வாயைத் திறந்து ஒரு வார்த்தை பதில் சொல்லுகிறாளான்னு பாரு... அழுத்தக்காரி... ஏண்டி... குட்டிக் குரங்கே... நீயும்தானே... இவகூட துணைக்கு போன...? முதலில் உன் காலில் சூடு போடணும்... அப்போதுதான் நீ அடங்குவ..."

பார்வதியின் கோபம்... யமுனாவின் மேல் திரும்ப... தன்னை 'குரங்கு...' என்று பார்வதி சொன்னதில் கோபமாகி விட்டவள் சண்டைக்கு வந்தாள்...

"நல்லாயிருக்கே நியாயம்... காதல் பண்ணினது அக்கா... காலில் சூடு போடுவது எனக்கா...?"

"நீயும்தானேடி அவள் கூட கூட்டுக் களவாணியாய் ஊர் சுற்றப் போன...?"

"அதுக்காக... என்னையெல்லாம் குரங்குன்னு சொன்னால் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாதும்மா..."

அதுவரை மனைவியைப் பேச விட்டு பொறுமையாய் விலகி நின்ற புகழேந்தி அறைக்குள் வந்தார்... தலைகுனிந்து அமர்ந்திருந்த சரயுவின்... குன்றல் அவரைப் பாதித்தது...

'எப்படி நிமிர்வாய் இருப்பாள்...' அவர் மனதில் வேதனை பிசைந்தது...

"போதும் பார்வதி..."

"நீங்க பேசாமல் இருங்க... உங்களுக்கு ஒன்றும் தெரியாது..."

"எனக்குத் தெரியும்..."

"என்னது...?"

"எனக்கு சரயுவின் காதல்... முன்னாலேயே தெரியும்..."

புகழேந்தி அழுத்தமாய் சொன்னார்... பார்வதி புகழேந்தியைப் பார்த்த பார்வையில்... அதிர்ச்சி... கோபம்... குற்றச்சாட்டு... என்று எல்லாமே இருந்தன...

## 22

**பா**ர்வதி பேசித்தீர்த்து விட்டாள்... அவளுடைய கோபம்... வீட்டின் நான்கு சுவர்களுக்குள் சிறைப்பட்டிருக்கும். இந்தியப் பெண்களின் இயலாமையுடன் கூடிய ஆதங்கத்தையும்... மனக் குமுறலையும் வெளிப்படுத்துவதாக இருந்தது...

அவள் அந்த வீட்டில் ஒரு சமையல்காரியாகவும்... வேலைக்காரி யாகவும் இருக்கிறாள்... காலையில் ஆறு மணிக்கு எழுந்தால்... இரவு பனிரெண்டு மணி வரைக்கும் அந்தக் குடும்பத்திற்காக அவர் ஓடாய் தேய வேண்டியிருக்கிறது... இதை அந்த வீட்டில் இருக்கும் எந்த ஜீவனும் கண்டு கொள்வதில்லை... கட்டிய கணவர் மதித்தால்தானே... பெற்ற பிள்ளைகள் அவளை மதிப்பார்கள்... பத்து மாதம் அவள் வயிற்றில் சுமந்து பெற்ற பெண் - காதலித்திருக்கிறாள்... அதைத்

தெரிந்து வைத்திருக்கும் கணவரும்... சின்ன மகளும்... அவளுக்குத் தெரியாமல் அதை மறைத்து வைத்திருக்கிறார்கள் என்றால்... அந்த வீட்டில் அவள் யார்...? பெற்ற பெண்ணைப் பற்றிப் பேப்பரில் படித்து தெரிந்து கொள்ளும் அளவிற்காக... அவள் நிலை கீழிறங்கிப் போய் விட்டது...?

பார்வதி படுவேகமாய்... உள்ளே சென்ற பின்னால்... புயலுக்கு பின் வரும் அமைதி... அந்த அறையில் நிலவியது... புகழேந்தி... சரயுவின் அருகில் அமர்ந்தார்...

"நேற்றே உன் முகம் சரியில்லை... எதுவோ நடந்திருக்கிறதுன்னு யூகித்தேன்... இதுதான்னு எனக்குத் தெரியாமல் போய்விட்டது... சரயு... நீ ஒன்றும் குழந்தையில்லை... காதலிப்பவரைப் பார்க்க... அவர் தனியாக இருக்கும்போது நீ போயிருக்க வேண்டும்... கூட்டத்திற்கு மத்தியில் போய் உறவு கொண்டாடினால் இப்படித்தான் ஆகும்..."

"அப்பா..." சரயு பொங்கி அழுதாள்...

"காதலைத் தடுக்கும் எல்லா அப்பாக்களையும் பார்த்தால் உங்களுக்கெல்லாம்... வில்லனாகத்தான் தோன்றும்... ஏன் அந்தக் காதலைத் தடுக்கிறோமுன்னு ஒரு நிமிசம் நினைச்சுப் பார்த்தீங்கன்னா... அப்பன்மார்கள் பக்கம் இருக்கும் நியாயம் புரியும்... ம்ப்ச்... ஆனால் அதை நீங்க எப்படிச் செய்வீங்க... உங்கள் கண்களைத்தான் காதல்ங்கிற கறுப்புத்துணி வைச்சு இறுக்கமாய் கட்டிக் கொள்ளுகிறீங்களே..."

சரயு மௌனமாய் தேம்பிக்கொண்டிருந்தாள்... தன் காதல் இப்படி பகிரங்கமானது மட்டுமல்லாமல் விவாதத்துக்குரிய செய்தியாகவும் மாறிவிட்டிருந்ததை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை...

"உன்கூட வேலை பார்க்கும் ஒரு ஆசிரியரை நீ காதலித்திருக்கலாம்... இல்லை... வேறு ஏதாவது வேலையோ... தொழிலோ பார்க்கும் நபரை நீ காதலித்திருக்கலாம்... இதையெல்லாம் விட்டுவிட்டு... சினிமாவில் இருக்கும் ஒருவரைப் போய் தேடிப்பிடித்துக் காதலித்திருக்கிறாயே..."

சரயுவின் கண்ணீரைக் கண்டும் இரக்கம் கொள்ளாத தந்தையின் மேல் யமுனாவிற்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது...

"ஏன்ப்பா... யாரையாவது காதலித்துத்தான் ஆகணுமின்னு அக்கா எதுவும் வேண்டுதலா வைத்திருந்ததது...? அம்மா சொல்வது போல்...

அந்தக் கருமம் பிடித்த காதல்... அக்காவின் மனசில் வந்து தொலைத்துவிட்டால்... அக்கா... அதற்கு என்ன பண்ணும்? ... பாவம்... நீங்களும்... அம்மாவும் இப்படி மாற்றிமாற்றி குற்ற விசாரணை பண்ணிக்கிட்டு இருக்கீங்களே..."

புகழேந்தி சின்ன மகளை முறைப்பாகப் பார்த்தார்...

"என்னம்மா... விட்டால் காதலைப் பற்றி விளக்க உரையே எழுதி விடுவாய் போல இருக்கு... என்ன விசயம்...?"

"ஒரு விசயமுமில்லை... அக்கா இந்தப் பாடுபடுவதைக் கண்ட பின்னாலும்... காதலிக்க நான் என்ன பைத்தியமா...? வேண்டாம் சாமி... எனக்கெல்லாம் இந்தக் காதலே வேண்டாம்... படித்து முடித்து... வேலைக்குப் போய்... நீங்கள் பார்த்து வைக்கும் மாப்பிள்ளையை சமர்த்தாய் கல்யாணம் பண்ணிக்கொண்டு... குடுத்தனம் நடத்த ஆரம்பித்து விடுவேன்... நீங்க கவலையை விடுங்க..."

சரயு... யமுனாவை வெறித்துப் பார்த்தாள்...

'காதலித்துப் பார்... சொர்க்கமோ... நரகமோ... இரண்டில் ஒன்று தெரிந்து விடும்...'

அன்று இதைச் சொல்லிய யமுனாதான்... சரயு நரகத்தின் பக்கம் போக ஆரம்பித்ததைக் கண்டதும்... அவசரமாய் பின்வாங்கி தன்னைத் தற்காத்துக் கொள்கிறாள்...

தன்னால் அப்படி பின்வாங்க முடியுமா என்ற ஏக்கம் சரயுவுக்குள் எழுந்தது...

அவளால் அது முடியாது... காதல் என்ற ஒருவழிப் பாதையில் சென்று விட்டாள்... இனித்திரும்பிவிட அவளால் இயலாது... இந்திரஜித்தை கோபித்துக் கொள்ளலாம்... ஆனால் அவனை வெறுக்க அவளால் முடியாது... அவனைவிட்டு விலகிப் போய் விடலாம்... ஆனால் அவனது நினைவுகளை மனதிலிருந்து விலக்கி விட அவளால் இயலாது...

"சினிமாக்காரனான்னு நான் கேட்டதற்கு ஒருத்தர் தொழிலைச் சொல்லக் கூடாதுன்னு சண்டைக்கு வந்தாயே சரயு... சினிமாவில் இருப்பவர்களைச் சுற்றி ஒரு புகழ் வட்டம் விழுந்திருக்கும்... அதற்குள் சாமானிய மக்கள் எளிதாக போய் விடமுடியாது... போனால்... என்ன நடக்குமுன்னு நான் இனி உனக்குச் சொல்ல வேண்டியதில்லை... உன் கையில் இருக்கும் பேப்பரே சொல்லிக் கொண்டிருக்கும்..."

சரயு கண்ணீர் வற்றிப் போனவளாய் புகழேந்தியின் முகத்தைப் பார்த்தாள்...

"இப்படியெல்லாம் நடக்குமென்று எனக்குத் தெரியாதுப்பா..."

"எனக்குத் தெரியும்..."

"நான் இனி எப்படி ஸ்கூலுக்குப் போவேன்...?"

"இப்போதும் உன்னைப் பற்றி மட்டும்தானே நீ நினைக்கிறாய்... நான் எப்படி டீ பேக்டரிக்குப் போவேன்... உன் அம்மா எப்படி அக்கம் பக்கத்தினரின் முகத்தில் விழிப்பாள்... யமுனா எப்படி காலேஜுக்குப் போவாள்... இதைப் பற்றியெல்லாம் நீ யோசிக்கவே இல்லையே... எப்போதிருந்து இப்படி சுயநலமாக ஆனாய் சரயு...?"

"அப்பா..."

"நான் படித்துப் படித்துச் சொன்னேன்... நீ தனி மனுஷியில்லை... உனக்குப் பின்னால் ஒரு குடும்பம் இருக்கிறது... உன் செயல்களின் நல்லது... கெட்டது... குடும்பத்தையும் பாதிக்குமுன்னு எவ்வளவோ... எடுத்துச் சொன்னேன்... உன் காதில் அது விழுகவில்லையே..."

சரயு தலையைப் பிடித்துக்கொண்டு அமர்ந்து விட்டாள்...

"பார்வதியக்கா..." பக்கத்து வீட்டு கனகம் வீட்டிற்குள் சுவாதீனமாக வந்தாள்...

"என்ன...?" பார்வதி எரிச்சலுடன் வந்து கேட்டாள்...

"சரயு இன்னும் வேலைக்கு கிளம்பலை போல இருக்கே..."

"இதைக் கேட்கத்தான் வேலை மெனக்கெட்டு வீட்டுக்குள்ள வந்தியா..."

"ஊஹூம்... இதைக் கேட்க வரலை... உங்க மகள் போட்டோ பேப்பரில் வந்திருக்கிறதே... அதைக் கேட்க வந்தேன்..."

கனகம் இடக்காய் பதில் சொல்லவும்... பார்வதி 'கேட்டுக் கொண்டாயா...' என்று பல்லைக் கடித்தபடி சரயுவை பார்வையில் சுட்டெரித்தாள்...

"யாரோ ஒரு சினிமாப் படம் எடுக்கிறவரோட உன் பொண்ணு ஜோடி போட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்கிறதாம்... அந்த மனுஷன் என்னவோ... இதையும் விட்டுவிட்டு... படத்தில் நடிக்கிற பெண்ணைக் கட்டிக்கப் போகிறாராம்... இதெல்லாம் நிஜமாக்கா...? பக்கத்து வீட்டிலேயே இருக்கிறேன்... என்கிட்ட இதையெல்லாம் நீ சொல்லவே இல்லையேக்கா..."

பார்வதிக்கு பற்றிக்கொண்டு வந்தது...

"அதுதான் பேப்பரில் படித்துவிட்டாயில்லையா...? இனிப் புதிதாய் நான் சொல்ல வேற நீ கேட்கணுமா...? போ... போய் உன் வீட்டு வேலையைப் பார்..."

"என்னக்கா இது... விவரம் தெரியாமல் விசாரிக்க வந்தால்... நீ இந்தப் பாய் பாய்கிற..."

"உனக்கா விவரம் தெரியாது...? ஊர் விவகாரம் முழுக்க உனக்குத் தானே தெரியும்... வந்துவிட்டாள்... காலங் கார்த்தாலேயே... வரிந்து கட்டிக்கொண்டு வம்பு பேச..."

"என்னவோ... நான் ஒருத்தி மட்டும்தான் உன் வீட்டுப் பேச்சை பேசுகிற மாதிரி... என்மேல் கோபப்படுகிறாயே... இந்த ஊர் முழுக்க இப்ப இதுதான் பேச்சு... உலைவாயை மூடலாம்... ஊர் வாயை மூட முடியாது..." கனகம் போகிற போக்கில் வார்த்தை அம்புகளை எறிந்து விட்டுச் சென்றாள்... பார்வதி மகளை முறைத்துவிட்டு ஒரு வார்த்தை கூட அவளிடம் பேசாமல் உள்ளே போய் விட்டாள்... அவளது பார்வதியின் அடியினால் உண்டான வலியை விட... அவளது மௌனம் உணர்த்திய புறக்கணிப்பு அதிகமான வலியை சரயுவிற்கு உண்டாக்கியது...

வாசலில் வண்டிச் சத்தம் கேட்டது... எட்டிப்பார்த்த யமுனா... சரயுவிடம்,

"அபர்ணாக்கா வருகிறாங்க..." என்று அவசரமாய் கூறினாள்...

சரயு அடுத்த தாக்குதலைத் தாங்கிக் கொள்ளத் தயாரானாள்... உள்ளே வந்த அபர்ணா... படுக்கையை விட்டு எழுந்து கொள்ளாமல் அமர்ந்திருந்த சரயுவை கூர்மையாக பார்த்தாள்... அவளின் பார்வையின் கூர்மையைத் தாங்கிக்கொள்ள இயலாமல் சரயு லேசாக கண் கலங்கினாள்...

"இப்ப அழுது என்னடி பிரயோஜனம்... ஆரம்பத்திலேயே தலைப்பாடாய் அடிச்சுக்கிட்டேன்... இந்த வேண்டாத காதல்... வேண்டாமுன்னு... என் பேச்சைக் கேட்டாயா...?"

"இப்போதுதான் அப்பா... நீ பேசிய இதே வார்த்தைகளை என்னைப் பார்த்து கேட்டு விட்டுப் போகிறார்... நீயும் என்னை புண்படுத்தாதே அபர்ணா..."

சரயு இறைஞ்சும் குரலில் பேசினாள்... அபர்ணாவிற்கு அதற்கு மேல் அவளைத் திட்ட வாய் வரவில்லை... தோழியின் மனம் புரிந்தவளாய் அவளருகே அமர்ந்தாள்...

"ஏம்மா... அபர்ணா... இந்த வீட்டில் இருக்கிற பிறவிகள்தான்... என்னையும் ஒரு மனிதப் பிறவியாய் நினைத்து இந்த விசயத்தை என் காதில் போடலை... நீயுமா இப்படிச் செய்தாய்...?" பார்வதி குற்றம் சாட்டும் குரலில் கேட்டாள்...

"ஆண்ட்டி... நீங்கள் நினைப்பது போல் இப்போது எதுவும் ஆகிவிடவில்லை... சரயுவை அந்த டைரக்டர் விரும்பினார்... இவளும்... அவர் மேல் ஆசைப்பட்டுவிட்டாள்... இதைத்தான் பத்திரிக்கையில் போட்டிருக்கிறாங்க..." அபர்ணா விசயத்தின் வீரியத்தை குறைக்க முயன்றாள்...

"என்னம்மா... இவ்வளவு சாதாரணமாய் இந்த விசயத்தை சொல்கிற...? நம்மளைப் போல நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவங்களுக்கு இது சரிப்பட்டு வருமாம்மா... பேப்பரில் பெயர் வருமளவிற்கு செய்துவிட்டாளே..." பார்வதியின் குரலில் கோபம் இருந்தது...

"நாளைக்கு அவரை நம்ம சரயு கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் பேப்பரில் போடத்தானே செய்வாங்க... அவர் பெரிய டைரக்டர் ஆண்ட்டி... அவர் நடந்தாலும் நியூஸ் போடுவாங்க... உட்கார்ந்தாலும் நியூஸ் போடுவாங்க... காதலித்தால் போடமாட்டாங்களா...?"

"அதற்கு நம் வீட்டுப் பெண் தான் கிடைத்தாளா...?"

"இவளைத்தானே அவர் காதலிக்கிறார்...?"

"இவள் எதற்கு பதிலுக்கு காதலிக்கிறாள்...?"

'இதற்கு என்ன பதிலைச் சொல்வது...' பெருமூச்சு விட்டாள் அபர்ணா...

"இன்னும் கிளம்பாமல் ஏண்டி உட்கார்ந்திருக்கிற... கிளம்பு..." சரயுவை கிளப்பிவிட அவள் முனைந்தபோது...,

"வேண்டாம் அபர்ணா... அவள் இனிமேல் வேலைக்கு வரமாட்டாள்... நீ போ...!" பார்வதி தீர்க்கமாய் கூறினாள்.

"ஆண்ட்டி..." அபர்ணா திகைத்துப் போய் சரயுவைப் பார்த்தாள்... அவளிடம் அசைவில்லை...

"என்னடி... உன் அம்மா இப்படிச் சொல்கிறாங்க..."

"நான் வேலைக்கு வரவில்லை அபர்ணா..."

"முட்டாள் போலப் பேசாதே... யாராவது சிற்றெறும்புக்கு பயந்து கூரைக்கு நெருப்பு வைப்பார்களா...? நீ செய்வது அப்படித்தான் இருக்கிறது..."

"ஸ்கூலில் எல்லோரும் இதைப் பற்றிக் கேட்பார்கள்..."

"கேட்டால் பதில் சொல்லு... காதலிக்க தைரியம் இருந்ததில்லை...? காதலை ஒப்புக் கொள்ளவும் அதே தைரியம் இருக்க வேண்டும்..."

"இந்தப் பேப்பரில் எங்கள் காதலைப் பற்றி மட்டும் செய்தி போடவில்லை..."

"ஏய்... இதெல்லாம் சாதாரணமான விசயமுன்னு அவங்க நினைத்திருக்கலாம்..."

"நீ நினைக்கிறாயா...?"

"சரயு..."

"நீ அப்படி நினைக்கிறாயா அபர்ணா...?"

"இதோ போர்... உன் வாழ்க்கை முறை வேறு... அவருடைய தொழில்முறை வேறு... இதைத்தான் நான் அன்றைக்கே சொன்னேன்... இந்திரஜித் நல்லவர்தான்... ஆனால்... அவருடைய தொழில் உன் சுபாவத்திற்கு சரிப்பட்டு வராதுன்னு... நீ கேட்கவில்லை... இப்போது என் நினைவைப் பற்றிக் கேள்வி கேட்கிறாய்..."

"அபர்ணா... இப்போதும் என் மனதில் அவர்மேல் காதல் இருக்கிறது... எப்போதும் அது இருக்கும்... மறையாது... ஆனால் நான் காதலித்தபோது பார்த்த இந்திரஜித்தும்... நேற்று படப் பிடிப்பில் பார்த்த இந்திரஜித்தும் வேறு... வேறாக இருக்கிறார்கள்..."

"ஆமாண்டி... அவர் சினிமாப் படம் எடுக்கிறவராச்சே... டபுள் ரோலில் வருகிறார்... நீ எழுந்திரு..."

"இல்லை... நான் வரவில்லை..."

"இன்றைக்கு மட்டும்தானா... இல்லை... என்றைக்குமேவா...?"

"தெரியவில்லை..."

அதற்கு மேல் அவளை வற்புறுத்தாமல் அபர்ணா கிளம்பி விட்டாள்... பள்ளியில்... சரயு பயந்தது போலவே செய்தி

பரவியிருந்தது... அபர்ணா வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டபோது... மூக்குக் கண்ணாடியை சரிசெய்தவாறு அவளை நிமிர்ந்து பார்த்தாள் தலைமை ஆசிரியை...

"உன் சிநேகிதி இன்றைக்கு ஸ்கூலுக்கு வரவில்லையா...?"

"லீவு லெட்டர் கொடுத்து விட்டிருக்கிறாள் மேடம்..."

"இன்றைக்கு பேப்பரில் வந்த நியூஸ் உண்மையானதுதானா?"

"அதை அவள்தான் சொல்ல வேண்டும் மேடம்..."

"நீ அவளுடைய நெருங்கிய சிநேகிதி ஆயிற்றே... உனக்குத் தெரியாமல் இருக்குமா...?"

"எவ்வளவுதான் நெருங்கிய சிநேகிதியாக இருந்தாலும்... எல்லோருக்குமே ஒரு எல்லைக் கோடு இருக்கிறதே மேடம்..."

தலைமை ஆசிரியை பேச்சை நிறுத்திக் கொண்டாள்... சரயுவின் கையெழுத்தை தானே போட்டு... தயாராய் எழுதி வைத்திருந்த லீவு லெட்டரை எடுத்து நீட்டிவிட்டு... அபர்ணா அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

'அடுத்தவர்களின் அந்தரங்கத்தை அறிந்து கொள்ள, ஒவ்வொரு வரும் எப்படி ஆர்வம் காண்பிக்கிறார்கள்...' கசப்புடன் நினைத்துக் கொண்டே வகுப்பறைக்குள் நுழைந்து பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தாள் அபர்ணா...

மதிய உணவு இடைவேளையில் அவளைப் பார்க்க இந்திரஜித் வந்திருந்தான்... அபர்ணா முகம் கடுத்தாள்...

"ஏன் சார் இங்கேயெல்லாம் வருகிறீங்க...? ஏற்கெனவே இன்றைக்கு காலையில் வந்த பேப்பர் நியூஸைப் படித்துவிட்டு எல்லோரும் என்னைக் குடைந்து கேள்வி கேட்கிறாங்க... போதாக் குறைக்கு நீங்களும் இங்கே வந்து நின்றால்... நான் என்ன பண்ணுவது...?"

"நான் சரயுவைப் பார்க்க வேண்டும்..."

"சரயு ஸ்கூலுக்கு வரவில்லை... போன் பண்ணிப் பேசுங்கள்..."

"போன் பண்ணினால் 'ஸ்விட்ச் ஆப்'ன்னு பதில் வருது..."

"ம்ம்... காலையில் அவள் வீட்டிற்கு போனபோதே அவளுடைய பேரண்ட்ஸ் ரொம்பவும் கோபமா இருந்தாங்க... சரயுவின் அம்மா சரயுவை அடித்து விட்டாங்க..."

"வாட்...? சரயுவை அடித்து விட்டாங்களா...?"

இந்திரஜித் பதறிப் போனான்... முதல் நாள் படப்பிடிப்பில் சரயு சொல்லாமல் சென்று விட்டது அவனை பாதித்திருந்தது... படப்பிடிப்பின் இடையில் அவளைத் தேடிப் போக முடியாமல் போன் பண்ணினான்... அவள் போனை அணைத்து வைத்திருந்தாள்... விடியற்காலையில் பேப்பரில் செய்தி வெளியிட்டு விட்டதைப் படித்ததும்... அவளைப் பார்க்க நினைத்து பள்ளிக்கு வந்தால்... அங்கேயும் அவள் இல்லை...

"மிஸ் அபர்ணா... எனக்கொரு உதவி செய்வீங்களா...?"

"உங்கள் காதலியிடம் சொல்லி... எப்படியாவது உங்களைத் தனியாகச் சந்திக்க வைக்க வேண்டும்... அதைத்தானே கேட்கப் போறீங்க...?"

"எப்படிங்க... இவ்வளவு சரியாகச் சொன்னீங்க..."

"இதற்கெல்லாம் போய் ஜோஸியமா கேட்டு விட்டு வர வேண்டும்...? எத்தனை சினிமாக்களில் இதைப்போல சீனைப் பார்த்திருப்பேன்...? ... காலம் காலமாய்... சிநேகிதர்களும்... சிநேகிதிகளும்... காதலர்களை சேர்த்து வைக்கும் வேலையைத் தானே சினிமாவில் செய்து கொண்டிருக்காங்க... நீங்களோ சினிமா டைரக்டர்...? இந்த உதவியை என்னிடம் கேட்க உங்களுக்கு சொல்லியா தரவேண்டும்...?"

அந்த நிலையிலும்... அவளது பேச்சைக் கேட்டு இந்திரஜித்தின் இதழ்களில் புன்னகை உதித்தது....

"சரயுவை நான் எங்கே... எப்போது பார்ப்பது...?"

"உங்கள் வேலையிலேயே குறியாய் இருப்பீங்களே... இன்றைக்கு சாயங்காலம்... அருவிக் காட்டிலிருக்கும் அருவிக்கு வாங்க... சரயு மனம் சரியில்லாவிட்டால்... அருவிக் கரையில் தான் போய் உட்காருவாள்... அதனால் அவள் வீட்டுக்கு சந்தேகம் வராது... தனியாய் பேசலாமுன்னு நான் அவளைக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன் அதன் பின்னால்... நீங்களாச்சு... அவளாச்சு..."

அன்று மாலை... சொன்னபடியே இந்திரஜித் அருவிக் கரையில் சரயுவிற்காக காத்திருந்தான்...

# 23

அன்று காலையில் புகழேந்தியின் வீட்டில்... வழக்கமான வேலைகள் எதுவும் நடக்கவில்லை... புகழேந்தி வேலைக்குப் போகவில்லை... யமுனா கல்லூரிக்குப் போகவில்லை... பார்வதி சமையலறைக்குள் போகவில்லை... சரயு... படுக்கையை விட்டே எழுந்திருக்கவில்லை...

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த யமுனா...

"அம்மா... பசிக்கிறது..." என்றாள்.

"பசித்தால் போய் சமைத்து சாப்பிடு..." பார்வதி முகம் திருப்பிக் கொண்டாள்...

"என்னம்மா இது... எனக்குச் சமைக்கத் தெரியாதே..."

"ஏன் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறாய்...? ஏழுகழுதை வயதாகிறது இல்லையா... தெரிந்துகொள்..."

"எனக்கு சமையல் தெரிகிறதோ இல்லையோ... ஒரு கழுதைக்கு எத்தனை வயதாகும்ன்னு தெரிந்துவிட்டது..."

"என்னடி உளறுகிறாய்...?"

"என் வயதை ஏழால் வகுத்தால்... அதுதான் ஒரு கழுதையின் வயது..."

யமுனா எழுந்து சமையலறைக்குள் சென்றாள்... சற்று நேரத்தில்... பாத்திரங்கள் சரியும் ஓசை கேட்க... பார்வதி தலையில் அடித்துக்கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள்...

"எப்படி என் ஐடியா...?"

வெற்றிகரமாய் பார்வதியை சமைக்க வைத்து விட்ட யமுனா சரயுவிடம் கண் சிமிட்ட... அவள் உயிரில்லாமல் பார்த்தாள்...

"இப்படி லுக் விட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்காமல்... எழுந்து போய் குளித்துவிட்டு வா... அப்பா... உங்களுக்கு வேற தனியாய் சொல்லணுமா...?"

யமுனா எதுவுமே நடக்காதது போல... மற்றவர்களை அதட்டி... மதிய உணவை உண்ண வைத்துவிட்டாள்... மாலையில் அபர்ணா

வந்தபோது... வீடு கொஞ்சமாய் இயல்பு நிலைக்கு திரும்பியிருந்தது...

"சரயு... வா... காலாற அருவிப் பக்கம் நடந்து விட்டு வரலாம்..."

அபர்ணா அழைத்த போது... சரயு மறுக்கவில்லை... பார்வதியும் தடுக்கவில்லை... அவர்கள் மௌனமாக அருவிக் கரையை அடைந்தனர்... இந்திரஜித் பாறையின் மறைவிலிருந்து வெளிப்பட.... சரயு திகைத்துப் பின்வாங்கினாள்...

"ஒரு நாள் பொழுதிற்குள் நான் உனக்கு வேண்டாதவனாக ஆகிவிட்டேனா சரயு..." இந்திரஜித்தின் கேள்வியில் ஆதங்கம் இருந்தது...

"சரயு நீ பேசிவிட்டு வா... நான் கொஞ்ச தூரம் தள்ளிப் போய் நிற்கிறேன்..." அபர்ணா விலகிச் சென்றுவிட்டாள்.

சரயு... இந்திரஜித்தின் கேள்வியால் பாதிக்கப்பட்டும்... அவன் முகம் பார்க்காமல்... கொட்டும் அருவியைப் பார்த்துக் கொண்டு நின்றாள்...

"என் முகத்தைப் பார்க்கக் கூட உனக்குப் பிடிக்கவில்லையா...?" அந்த வார்த்தைகள் சரயுவின் மனத்தில் தைக்க... அவள் சட்டென்று தலைநிமிர்ந்து அவனைப் பார்த்தாள்...

"உங்களைத் தவிர வேறு யார் முகத்தைப் பார்க்கவும் எனக்குப் பிடிக்காது..."

இந்திரஜித்தின் மனம் மலர்ந்தது... சரயு அவனிடம் காட்டிய இந்த காதல்தான் அவனை அவள் பக்கம் காந்தமாய் இழுத்துக் கொண்டிருந்தது...

"அப்புறம் ஏன் நேற்று சொல்லாமல் போய் விட்டாய்...?"

"நான் சொல்வதைக் கேட்கும் நிலையில் நீங்கள் இல்லை..."

"சரயு... இது அதிகப்படியான வார்த்தை... உன் கண் முன்னால் நான் எந்த நிலையில் நிற்க முடியும்..."

"இதற்குப் பதிலாக என் கண் மறைவாய் நீங்கள் எந்த நிலையிலும் இருந்திருக்கலாம்... அதை நான் பார்த்திருக்க மாட்டேன்... எனக்கு எதுவும் தெரிந்திருக்காது..."

"இன்றைய காலகட்டத்தில் தொட்டுப் பேசுவது சகஜமான விசயம்..."

"எனக்கு அது சகஜமில்லை..."

"இது உன் பிடிவாதம்..."

"இருக்கட்டும்... இதுதான் என் வாதம்..."

"இப்போது நீ என்னதான் சொல்ல வருகிறாய்...?"

"எனக்குப் பயமாக இருக்கிறது... உங்களை இழந்து விடுவேனோ என்று பயமாய் இருக்கிறது... உங்களைப் பார்க்காதபோது நீங்கள் என் பக்கத்திலேயே இருப்பதாய் உணர்ந்தேன்... இப்போது நீங்கள் என் பக்கத்தில்தான் நிற்கிறீர்கள்... ஆனால்... தொலைதூரத்தில்... நான் எட்டி விரல் தொட்டு விட முடியாத தொடுவானாய் நீங்கள் இருப்பதைப் போல எனக்குத் தோன்றுகிறது..."

"ஏய்ய்... ஏண்டி... நீயாய் எதையெதையோ நினைத்துக் கொண்டு மண்ட மூளையைக் குழப்பிக் கொள்கிறாய்...?"

"குழப்பம்தான் இந்தர்... நீங்கள் என் கைப்பிடிக்க முடியுமா என்று நான் குழம்பிப் போயிருக்கிறேன்..."

"நீ என்னைச் சந்தேகப்படுகிறாயா...?"

"கொஞ்சம் கூட இல்லை... உங்கள் மனதில் எனக்கு நீங்கள் கொடுத்த இடத்தை இதற்கு முன்னால் வேறு யாருக்கும் கொடுத்திருக்க மாட்டீர்கள்... இனி வேறு யாருக்கும் கொடுக்கவும் மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும் இந்தர்..."

"தெரிந்த பின்னாலுமா இந்தக் குழப்பம்...?"

"ஆமாம்... உங்களை நினைத்தவுடன் பார்க்க என்னால் முடியவில்லை... உங்களைச் சுற்றியிருக்கிற புகழ் வெளிச்சத்தைக் கண்டு என் கண்கள் கூசுகின்றன..."

"என் படைப்பைப் பார்த்துத்தானே என்னை நீ காதலித்தாய்...?"

"நான் இல்லையென்று சொல்லவில்லையே... ஆனால் என்னைப் போல்... உங்கள் படைப்புக்களை பார்க்கும் மற்ற பெண்களும் உங்கள் மேல் பைத்தியமாக இருக்கிறார்களே..."

"அவர்கள் யாருமே... ஒருநாளும் சரயுவாக ஆக முடியாதுடி.."

"இதை உண்மையாகச் சொல்கிறீர்களா...?"

"என்மேல் சந்தேகமில்லையென்று நீ சொன்னது பொய்யா...?"

"உங்கள் சூழலை நான் வெறுக்கிறேன் இந்தர்..."

"அது என் தொழில்... அதனால்தான் நீயும்... நானும் இணைந்தோம்..."

"ம்ம்ம்... நான் ஒன்று சொல்லவா இந்தர்...?"

"என்ன...?"

"நாம் பிரிந்து விடலாம்..."

சரயு எல்லையற்ற துக்கத்துடன் இந்த வார்த்தைகளைச் சொன்னாள்... இந்திரஜித் அவள் முகத்தையே இமைக்காமல் பார்த்தான்...

"எங்கே... என் முகத்தைப் பார்த்து இந்த வார்த்தைகளைச் சொல்..."

"என்னால் அது முடியாது..."

"இதுவே முடியாதபோது... என்னைப் பிரிய மட்டும் உன்னால் முடியுமா...?"

"முடியாதுதான் இந்தர்... நிச்சயமாய் என்னால் அது முடியாதுதான்... என் உயிர் கொஞ்சம் கொஞ்சமாய்... செல்லரித்துப் பின் செத்துவிடும்..."

"அடித்து விடுவேன் சரயு... வாழ்வைப் பற்றிப் பேச வந்தால்... சாவைப் பற்றி ஏன் பேசுகிறாய்...?"

"சாவு ஒருவகையான விடுதலை இந்தர்... இப்படி உங்களுடன் வாழவும் முடியாமல்... பிரிந்திருக்கவும் முடியாமல் நரக வேதனைப்படுவதைவிட... செத்துவிடலாம்..."

சரயு குலுங்கி அழுதாள்... மனம் தாங்காதவனாய் இந்திரஜித் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்... அவன் மார்பில் முகம் புதைத்து நின்ற சரயு.... ஒரு வழியாய் கண்ணீர் ஓய்ந்ததும்... விலகி நின்றாள்... வாடிய பூவைப்போலிருந்த அவளது வதனம் கண்டு அவன் மனம் வலித்தது...

"சொல்லுடி... நான் என்ன செய்தால், நீ சிரிப்பாய்..."

"எனக்குச் சொல்லத் தெரியவில்லை... வீட்டில் அம்மா ரொம்பவும் கோபப்பட்டு விட்டாங்க... வெளியே எங்களால் தலைகாட்ட முடியவில்லை... நான் என்ன தவறு செய்தேன்...? காதலித்தேன்... அது ஒரு குற்றமா...? உங்களைப் பார்க்க வந்தேன்... அது இப்படி ஊரெல்லாம் பரவும் செய்தியாகிவிட்டதே... ஏன்... உங்களைச் சுற்றியிருக்கும் புகழ்! நீங்கள் ஏன் சாமானியராக இல்லை இந்தர்...?"

தன்னையுமறியாமல் இந்திரஜித்தின் கேள்விக்கு சரயு பதில் சொல்லிவிட... இந்திரஜித்தின் மூளையில் மின்னல் அடித்தது...

"சரி... வா... போகலாம்..."

"எங்கே..."

"உன் வீட்டிற்கு..."

"என் வீட்டிற்கா...? எதற்கு...?"

"உன்னைப் பெண் கேட்கப் போகிறேன்..."

"வேறு வினையே வேண்டாம்... காலாற நடந்துவிட் வருகிறோமுன்னு அபர்ணா சொல்லி என்னைக் கூப்பிட்டுக் கொண் வந்திருக்கிறாள்... உங்களுடன் போய் நின்றால்... என் அம்மா... என்ன என்னவென்று நினைத்து கொள்வாங்க...?"

"நீ உன் வீட்டிற்குப் போ... நான் பின்னாலேயே வருகிறேன்..."

"எனக்கென்னவோ பயமாக இருக்கிறது..."

"பயப்படாதே... நான் உன் பக்கத்திலேயே இருப்பேன்..."

அபர்ணாவுடன் செல்லும்போது சரயு தயங்கித் தயங்கி இந்திரஜித்தைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றாள்...

அவள் வீட்டிற்குச் சென்றதும் அபர்ணா கிளம்ப முனைந்தாள் சரயு அவள் கைபிடித்து தடுத்தாள்...

"போகாதே... இரு..."

"ஏண்டி... என் வீட்டில் தேடமாட்டாங்களா...?"

"இந்தர், வருகிறேன்னு சொல்லியிருக்கிறார்..."

"இங்கே... உன் வீட்டிற்கா...? நிஜமாகவா...?"

அபர்ணா விழி விரிய கேட்டுக் கொண்டிருந்தபோது வாசலி கார் சத்தம் கேட்டது... புகழேந்தி மகளை ஓர் பார்வை பார்த்துவிட் வாசல்பக்கம் சென்றார்... இந்திரஜித் காரிலிருந்து இறங்கி கொண்டிருந்தான்...

"யாருங்க அது...? நம் வீட்டிற்கு முன்னால் கார் வந்து நிற்குது..." பார்வதி கேட்டுக்கொண்டே வந்தாள்...

"இந்திரஜித்..." புகழேந்தி ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லி கொண்டிருந்தபோது... இந்திரஜித் வந்துவிட்டான்...

"நான் இந்திரஜித்..."

"தெரியும்... உள்ளே வாங்க..."

இந்திரஜித் உள்ளே வந்தான்... அவன் உட்காருவதற்காக நாற்காலியை எடுத்துப் போட்ட புகழேந்தி... அவனுக்கு எதிரே

அமர்ந்தார்... யமுனா உள்ளேயிருந்து அப்போதுதான் வந்தவள் இந்திரஜித்தைப் பார்த்ததும்...

"ஹை அத்தான்... வாங்க... வாங்க..." என்று வரவேற்று வைக்க... பார்வதி அவளை முறைத்தாள்...

சரயு... அபர்ணாவின் பின்னால் மறைந்து நின்றுகொண்டு இந்திரஜித்தை காதலுடன் பார்த்தாள்...

"பார்வதி காபி கொண்டு வா..." என்றார் புகழேந்தி...

"பரவாயில்லை... அவங்க இங்கேயே இருக்கட்டும்... நான் உங்களிடமும்... அவங்களிடமும் பேச வேண்டியிருக்கிறது..." என்றான் இந்திரஜித்...

வீட்டுப் படியேறி வந்து அவன் பெண் கேட்பான் என்று கனவிலும் நினைத்துப் பார்த்திராத புகழேந்திக்கு அவன்மீது சற்று மரியாதை ஏற்பட்டது...

"இரு பார்வதி... அப்புறம் காபி போட போகலாம்... நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லுங்க..."

"நான் உங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறேன்..."

அவன் காதலைச் சொல்லாமல்... நேரடியாக கல்யாணம் பேசிய விதத்தைக் கண்டு... பார்வதியின் கோபம் பறந்துவிட்டது... அவள் இந்திரஜித்தை பார்த்த பார்வையில் புது சொந்தம் வந்திருந்தது.. ஆனாலும் அவளுக்கு சில கேள்விகள் கேட்க வேண்டியிருந்தது...

"நீங்க பெண் கேட்கறீங்க... ஆனால் காலையில் பேப்பரில் இன்னொரு படமும் போட்டிருந்தாங்களே..."

பார்வதி நாசூக்காய்... நிஷா இந்திரஜித்தை முத்தமிட்டுக் கொண்டிருந்த போட்டோவைப் பற்றி நினைவூட்டினாள்...

"அது தற்செயலாக நடந்துவிட்டது..."

"இதைப்போல... அடிக்கடி நடக்குமில்லையா...? எங்கள் பெண் காலம் பூராவும் கண்ணீர் விட்டுக் கொண்டு இருக்கணுமா...?"

"நீங்கள் நினைப்பது போல இல்லை..."

"நீங்களும்... நாங்கள் நினைக்கிறது போல இல்லையே..."

இந்திரஜித் எப்படித் தன் நிலையை விளக்குவது என்று புகழேந்தியைப் பார்த்தான்... அவர் தெளிவாக பேசினார்...

"டைரக்டர் சார்... நீங்கள் என் வீட்டுப் படியேறி வந்து பெண் கேட்பது எனக்கு பெருமையான விசயம்தான்.. எங்களை கௌரவப்படுத்திவிட்டிங்க... ஆனால்... இதுவே நீங்கள் சாதாரணமாய் எங்களைப் போல மிடில் கிளாஸ் பேமிலியாக இருந்திருந்தால் நாங்கள் கவலைப்பட மாட்டோம்... நீங்களோ புகழின் உச்சியில் இருக்கும் சினிமா டைரக்டர்... உங்களின் உயரத்திற்கு... சரயுவால் ஈடுகொடுக்க முடியாது... எனக்கு உங்கள் காதல் விவகாரம் தெரியும்... என் மகளைக் கண்டித்தேன்... ஆனால் அவள் 'என் மனம் விரும்புதேப்பா...'ன்னு சொல்லி... என் வாயை அடைத்துவிட்டாள்... அதே சரயு... இன்றைக்கு காலையில் வெளியுலகத்தின் வெளிச்சத்தைப் பார்க்க முடியாமல் கூனிக் குறுகி வீட்டிற்குள் புதைந்து கொண்டாள்... எதற்காக...? நீங்களும்... அவளும் சேர்ந்திருந்த போட்டோ பேப்பரில் வந்துவிட்டது என்பதற்காக இல்லை... கூடவே... வேறொரு பெண் உங்களை முத்தமிட்டுக் கொண்டிருந்த போட்டோவும் சேர்ந்து வந்து விட்டது என்பதற்காக... இதில் நீங்கள் யாருக்குச் சொந்தம்... என்று வேறு கேள்வி இருந்தது..."

"பரபரப்புக்காக இப்படிச் செய்தி வெளிவருவது சகஜம்..."

"உங்களுக்கு அது சகஜம்... எங்களுக்கு...? நீங்கள் சரயுவுக்கு மட்டும் சொந்தமானவராக இருப்பதாக இருந்தால் உங்களுக்குப் பெண் கொடுப்பதில் எனக்குத் தயக்கமில்லை... இந்த உலகமே உங்கள் மேல் உரிமை கொண்டாடினால்... மன்னித்து விடுங்கள்... நீங்கள் சரயுவை மறந்து விடுவதுதான் நல்லது..."

இந்திரஜித் சரயுவைப் பார்த்தான்... அவள் கண்கலங்க... நிலத்தைப் பார்த்தாள்...

'தகப்பனும்... மகளும்... எப்படி ஒன்று போல் பேசுகிறார்கள்...'

இந்திரஜித்தின் பதிலுக்காக அங்கிருந்தவர்கள் காத்திருக்க... அவன் உறுதியுடன் பேசினான்...

"இதுதான் உங்களின் முடிவு என்றால்... நான் உங்களுக்கு வாக்களிக்கிறேன்... என்னுடைய அனைத்து அடையாளங்களையும் நான் துறந்து விடுகிறேன்... இனி இந்திரஜித் சினிமா எடுக்க மாட்டான்... அவன் சாதாரணமானவன்... சரயுவிற்கு மட்டுமே அவன்

சொந்தமானவனாக இருப்பான்... இப்போது எனக்கு உங்கள் மகளைக் கல்யாணம் செய்து கொடுப்பீங்களா."

அங்கே குண்டூசி போட்டாலும் கேட்குமளவிற்கு நிசப்தம் நிலவியது...

## 24

"நீதானே சொன்னாய் அக்கா... 'உன் மனதிற்கு பிடித்தவளாக பார்த்துக் கல்யாணம் செய்துகொள்... அவளுடைய மனதிற்கு பிடித்தவனாகவும் உன்னை ஆக்கிக் கொள்' என்று வாக்குக் கேட்டியே அக்கா... அதைத்தான் நான் செய்திருக்கிறேன்... சரயு என் மனதிற்குப் பிடித்தவள்... என்னைக் காதலிப்பவள்... அவள் மனம் பூவைப் போன்றது அக்கா... அது வாட நான் விட மாட்டேன்..."

இந்திரஜித் மாலதியிடம் இதைக் கூறியபோது... மாலதி... தம்பியின் முகத்தை யோசனையுடன் நோக்கினாள்...

"ஆனால்... சினிமா டைரக்ஷன் என்பது உன் கனவாயிற்றே இந்தர்... சிறுவயதிலிருந்து அதே குறிக்கோளுடன்... வெறியுடன்.. போராடி ஜெயித்தவன் நீ... இந்த அடையாளங்கள் உன் போராட்டத்தின் வெற்றிச் சின்னங்கள்... ஒரு பெண்ணிற்காக இதையெல்லாம் நீ துறப்பாயா...?"

"என்னக்கா... நீயே இப்படி சாதாரணமாக... 'ஒரு பெண்ணிற்காக'ன்னு சொல்லி விட்டாய்... அவளுக்காக நான் எதையும் செய்வேன்... இதைச் செய்ய மாட்டேனா...? மனம் விரும்பி வாழ்வதுதான் வாழ்க்கைன்னு எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தவள் நீ... அவளைத் தவிர வேறு ஒரு பெண்ணை என் மனம் விரும்பாது அக்கா..."

மாலதிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை... "இந்தர்... வாக்குக் கேட்டு உன்னைக் கட்டிப் போட்டு விட்டேனா...?"

"இல்லைக்கா... வாழ்க்கையை... வாழ்க்கையாய் வாழ்ந்துவிட வேண்டும்... சரயுவைத் தவிர வேறு ஒருபெண்ணை... என்னாலேயே நினைத்துப் பார்க்க முடியவில்லையே... அவளால் எப்படி... என்னை விட்டு வேறு ஒருவனுடன் வாழ முடியும்...? அவள் செத்துவிடுவாள்

அக்கா... அவளில்லாத வாழ்வில் நான் எத்தனை சாதித்தாலும் அது சாதனையாக இருக்காது..."

இப்படிப்பட்ட காதலனைப் பெற்ற அந்த சரயு பாக்கியாலி என்று நினைத்துக் கொண்டாள் மாலதி... தன் முடிவில் உறுதியாக நின்ற இந்திரஜித்தை அவள் தடுக்கவில்லை...

இந்திரஜித் - மூணாறில் அவன் எடுத்த படத்துடன்... திரையுலகை விட்டு விலகுவதாக பத்திரிகைகளில் பேட்டி கொடுத்தான்... சின்னத்திரையில் இது மிகப்பெரிய செய்தியாக உருமாறி... பட்டி தொட்டிகளில் எல்லாம் பரவியது...

"இந்திரஜித் இனிமே சினிமா எடுக்க மாட்டாரரா..."

அவனது ரசிக... ரசிகைகள் அதிர்ந்து போயினர்... அதைப் பற்றி யோசிக்காமல்... இந்திரஜித் திருமண வேலைகளில் இறங்கினான்... பெற்றவர்களை அழைத்துக்கொண்டு மூணாறிற்குப் போய்... நிச்சயம் பண்ணி... திருமண நாளைக் குறித்துவிட்டு வந்தான்... அழைப்பிதழ்கள் தயாராகிவிட்டன... மண்டபத்திற்கு முன்பணம் கொடுத்தாகிவிட்டது... அவன் திரைத்துறையை விட்டு விலகியதில் மூர்த்திக்கும்... கமலத்திற்கும் நிறைய மன வருத்தம்...

"இந்தர்... நீ உன் சுயத்தை இழக்க நினைக்கிறாய்..."

"எனக்கும் அது தெரியும்ப்பா... ஆனால் சரயு இல்லா விட்டால்... நானில்லை... நானே இல்லாதபோது... 'சுயம்'... எங்கிருந்து வரும்...?"

"ஊரில்... உலகத்தில்... உனக்கு வேறு பெண்ணே கிடைக்க மாட்டாளா...?"

"அது சரயுவாக இருக்க வேண்டுமேம்மா...."

சொல்லிப் பார்த்து ஓய்ந்து போய் அவர்களும் மௌனமாகி விட்டார்கள்... திருமண நாள் நெருங்கிக் கொண்டிருக்கையில் இந்திரஜித் பணியாற்றிய ஆங்கிலத் திரைப்படத்திற்கு ஆஸ்கார் விருது கிடைத்த செய்தி வெளியானது... உலகமே இந்திரஜித்தைத் திரும்பிப் பார்த்தது...

**'திரையுலகை விட்டு வெளியேறி விட்டதாய் அறிவித்த இயக்குநர் இந்திரஜித்திற்கு ஆஸ்கார் விருது...'**

**'ஆஸ்காரை வென்ற இயக்குநர்... திரையுலகிற்கு திரும்புவாரா...?"**

**'இந்திரஜித் இந்திய சினிமாவின் அசைக்க முடியாத அடையாளம்... அந்த அடையாளம் மாறலாமா...'**

பத்திரிக்கைகளும்... சின்னத்திரைகளும் போட்டி போட்டுக் கொண்டு கேள்வி எழுப்பின... ஆங்காங்கே கருத்துக்கணிப்பு நடந்து... அவைகளும் பத்திரிகைகளில் வெளிவந்தன...

**ச**ரயுவைத் தேடிச் சென்றாள் மாலதி... இதுவரை பெங்களூரை விட்டு அகலாதவள்... தன் தம்பிக்காக... காரை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டாள்... தடுத்த கணவனிடம்... தீர்க்கமான பார்வையுடன் பதில் சொன்னாள்...

"டிரைவர் காரை ஓட்டிக்கொண்டு துணையாக வருகிறார்... நான் என் தம்பியின் வருங்கால பெண்டாட்டியைப் பார்க்கப் போகிறேன்... இதை நீங்கள் தடுக்காமலிருந்தால் திரும்பி இங்கே வருவேன்..."

"தடுத்தால்...?"

"திரும்பி வரமாட்டேன்..."

"என் அனுமதியில்லாமல் நீ போகக் கூடாது..."

"என் சுதந்திரம் என்னுடன்தான் இருக்கிறது... எனக்கு அனுமதி வழங்க நீங்கள் யார்...? படைத்த கடவுளே... நம்மை நம் இஷ்டப்படி வாழவிட்டு அமைதிகாக்கிறான்... இதில் நீங்கள் ஏன் துள்ளிக் குதிக்கிறீங்க... உங்கள் சொந்த பந்தங்களில் யாருக்காவது மொட்டை எடுத்தால் கூட... மூன்று வாரம் அங்கே போய் டேரா போடுவீங்க... இதை நான் ஏன்னு ஒரு வார்த்தை... இது வரைக்கும் கேட்டிருக்கிறேனா...? என் கூடப் பிறந்தவன் - அவன் ஒருவன்தான்.. அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவளைப் பார்க்க நீங்கள் தகராறு பண்ணினால்... நாம் இதுவரை வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த பொய்யான வாழ்க்கை... இன்னும் பொய்த்துப் போய்விடும்..."

மாலதியின் கணவன் சுந்தர்... திகைத்துப் போய் பின்வாங்கினான்... மாலதி கிளம்பிவிட்டாள்...

**பி**ற்பகலின் குட்டித் தூக்கத்தில் பார்வதி ஆழ்ந்திருக்க - பொழுது போகாதவளாய்... வாசலில் வந்து நின்ற சரயு... புழுதி படிய வந்து நின்ற காரை ஆவலுடன் பார்த்தாள்...

'இந்தர்... வருகிறாரா...'

கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கிய யுவதி... இந்திரஜித்தின் ஜாடையில் இருக்கவும்... சரயு உடனே அவளை அடையாளம் கண்டு கொண்டாள்...

'இவங்க இந்தரின் அக்கா மாலதி...!'

அவள் அவசரமாய் கை குவித்து மாலதியை வரவேற்றாள்...

"வாங்க... வாங்க..."

"என்னை உனக்குத் தெரியுமா...? உன்னை நான் போட்டோவில் பார்த்திருக்கிறேன்..."

"உங்களை நான் இந்தரின் பேச்சுக்களில் பார்த்திருக்கிறேன்... நீங்கள் அப்படியே என் இந்தரின் ஜாடையில் இருக்கீங்க..."

சரயுவின் பேச்சில் கவரப்பட்டாள் மாலதி... அவளது முகத்தின் கடினம் மறைந்து மென்மை பரவியது...

"இந்தர் உன்னைப் பற்றிச் சொன்னது சரியாகத்தான் இருக்கிறது..."

"அவர் என்ன சொன்னார்...?"

"நிறையச் சொன்னான்... நீ வேலைக்குப் போகவில்லையா...?"

"இல்லை... கல்யாணம் வந்துவிட்டதால் அம்மா வேலைக்குப் போக வேண்டாமுன்னு சொல்லி விட்டாங்க..."

"வீட்டில் வேறு யாருமில்லையா...?"

"அப்பா பேக்டரிக்கு போய் விட்டார்... யமுனா காலேஜிற்கு போயிருக்கிறாள்... அம்மா தூங்குகிறாங்க... எழுப்புகிறேன்... நீங்க உள்ளே வாங்க..."

"வேண்டாம்... நான் உன்னுடன் பேச வந்திருக்கிறேன்... வெளியில் போய் பேசலாமா...?"

'என்ன பேசப் போகிறாள்...' என்ற யோசனையுடன் சரயு தலை அசைத்தாள்...

"அருவிக் கரைக்குப் போகலாம் வாங்க..."

**ச**ரயு பிறந்ததில் இருந்து... அவளின் இன்ப... துன்பங்களின் கதைகளைக் கேட்டுக் கொண்டிருக்கும் அருவி நீர்... அப்போதும் அவர்கள் பேசப் போவதை கேட்டுக் கொள்ளத் தயாராக... கொட்டிக் கொண்டிருந்தது... அருவிக்கரையில் இருந்த சிறுபாறையில் சரயு அமர... அருகில் அமர்ந்தாள் மாலதி...

"என்னைப் பார்க்க இவ்வளவு தூரம் தனியாக வந்தீங்களா...?"

"கார் டிரைவர் வயதானவர்... நம்பிக்கையானவர்..."

"இருந்தாலும்..."

"இது எனக்கு அவசியம் சரயு... நான் உன்னிடம் பேச வேண்டியது எனக்கு மிக அவசியமானது... இதைப் பார்..."

மாலதி... தன் கையிலிருந்த ஒரு கட்டு பத்திரிக்கைகளை சரயுவின் முன் பரப்பினாள்... அத்தனையிலும் இந்திரஜித்தின் படம் வெளியாகி இருந்தது...

"பார்... இவனுக்கு உலகத்திலேயே பெரிய அவார்டான ஆஸ்கார் அவார்டு கிடைத்திருக்கிறது... ஆனால் இவன்... அந்த அவார்டை வாங்கித்தந்த சினிமாத் துறையை விட்டு விலகப் போகிறானாம்... இந்த முடிவை அவன் எடுக்க காரணம் யார்...? நீ..."

"அது வந்து..."

"நீ உன்னைப் பற்றி மட்டுமே யோசித்து விட்டாய் சரயு... அவனுடைய அத்தனை அடையாளங்களையும் அழித்து விட்டாய்... நினைவு தெரிந்த நாளில் இருந்து சினிமாவைப் பற்றிய நினைவுகளை சுவாசித்தவன் அவன்... ஜெயிக்க வேண்டும் என்ற கனவுடன் வளர்ந்தவன் அவன்... இந்த அடையாளங்கள் எல்லாம் ஒரே நாளில் அவனுக்கு கிடைத்து விடவில்லை... அதற்காக அவன் தன் உணர்வுகளை அடமானம் வைத்தான்... போராடினான்... படிப்படியாய் முன்னேறி... இன்றைக்கு வெற்றிச் சிகரத்தை தொட்டு விட்டான்... நீ அவன் கால் பிடித்து தரைக்கு இழுக்கப் பார்க்கிறாய்..."

சரயு வாயடைத்துப் போனாள்... மாலதியின் கோபம் தணலாய் அவளைச் சுட்டது...

"உனக்காக அவன் எல்லாவற்றையும் துறந்து விட்டானே... அவனுக்காக நீ என்ன செய்தாய்...? அவனது கனவுகளையும்... கற்பனைகளையும் அழிப்பதுதான் உன் காதலா...? இதுதான் அவன் மேல் நீ வைத்திருக்கும் பிரியமா...? அவனை... அவனுக்காக நேசிப்பவள்... அவனது கனவுக் கோட்டையை எப்படி சிதைத்து தரைமட்டமாக்குவாய்...?"

சரயு தலைகுனிந்து... தன் கைவிரல்களைப் பார்த்தபடி அமர்ந்து விட்டாள்... அவள் முகத்தில் சிந்தனை ரேகை படிந்திருந்தது...

"உன்னைப் பூவென்று அவன் சொன்னான் சரயு... ஆனால் உன் மனம் கல்லாக இருக்கிறதே... உன் மேல் அவன் வைத்திருக்கும்

காதலை... ஒரே நொடியில்... நிரூபித்து விட்டான்... அவன் ...
களையும் துறந்து அவன் நிரூபித்து விட்டான்... நீ எப்படி நிரூபிக்கப் போகிறாய்...? உனக்கிருக்கும் காதலை நீ எப்படி நிரூபிக்கப் போகிறாய்...? அவன்மேல் உனக்குக் காதல் இருக்கிறதுதானே...?"

சரயு அதிர்ந்து நிமிர்ந்தாள்...

"என்னைப் பார்த்தா இப்படிக் கேட்கிறீங்க..." "நான் இந்தரிடம் இதைக் கேட்கவில்லை அண்ணி... அவரே இந்த முடிவை எடுத்துவிட்டார்..."

"நீ அவனை இந்த முடிவை எடுக்க வைத்தாய்... 'உன்னை உனது அடையாளங்களுடன் நான் ஏற்றுக் கொள்கிறேன்'னு ஒரு வார்த்தை நீ சொன்னாயா...?"

"அண்ணி... அவரை நான் காதலிக்கிறேன்... அவர் மேல் என் உயிரையே வைத்திருக்கிறேன்..."

"அதனால்... அவனை உயிர்ப்பில்லாதவனாக ஆக்கிவிட்டாய்... உன் கழுத்தில் தாலிகட்டப் போகும் உன் காதலனை இயந்திர மனிதனாக ஆக்கிவிட்டாய்... இதுதான் உன் காதலா...?"

"என்னுடையவர்... எனக்கு மட்டும் சொந்தமானவராக இருக்க வேண்டுமென்று நான் நினைப்பது தவறா...?"

"நான் தெரியாமல்தான் கேட்கிறேன்... பெயரும்... புகழும் இருந்துவிட்டால்... அவர்கள் காதலுக்கு கட்டுப்பட மாட்டார்கள் என்று உனக்கு யார் சொன்னது...? புகழின் உச்சியில் இருந்த போதும்... உன்னைப் பார்க்க... நீயிருக்கும் இடத்திற்கே தேடி வந்து இந்திரஜித் நிற்கவில்லையா...? அவனைச் சுற்றியிருக்கும் பெண்களை விடவா நீ அழகானவள்...? எதைத்தேடி அவன் உன்னிடம் வந்தான்...?"

"அண்ணி... அவருக்கும்... எனக்கும் இடையே மற்றவர்கள் வருவது எனக்குப் பிடிக்கவில்லை..."

"சரயு... நீ இருக்கும் இடத்திலேயே இரு... எங்கே வேலை பார்த்தாலும்... உன்னைத் தேடி அவன் வந்து விடுவான்... புகழின் வெளிச்சத்தில் அவன் இருந்தாலும்... அவனுக்கு என்றுமே உன்னால் தான் வெளிச்சம் தரமுடியும்... இதை அவன் புரிந்து வைத்திருக்கிறான்... நீயும் அவனைப் புரிந்துகொள்... எங்கே வேண்டுமானாலும் போகும் சுதந்திரத்தை அவனுக்கு கொடு... அவன் கால்களில் உன் காதல் பூவேலி போட்டிருக்கிறது... அதை அவன் தாண்ட

மாட்டான்... அவனைக் கட்டுப்படுத்தும் அன்புக் கயிறு உன் கையில்தான் இருக்கிறது.. அதை நீ சுண்டியிழுத்தால் உன் மடியினில் வந்துதான் விழப் போகிறான்... அப்புறமும் வீண் பயம் எதற்கு...? அவனை... அவனிடமே... திருப்பிக் கொடு... அதுதான் உண்மையான காதல்..."

மாலதி எழுந்து கொண்டாள்... கொட்டுகின்ற அருவியைப் பார்த்தாள்...

"இந்த அருவிக்கரை உனக்குப் பிடித்தமான இடமா...?"

"ஆமாம்... எனக்கு மனம் சரியில்லாவிட்டால் இங்கேதான் வருவேன்... அருவியிடம் பேசுவேன்..."

"அருவியுடன் பேசுவது...! அருமையாய் சொல்கிறாய்... இதை உணர்ந்து கொள்ள என்னால் முடிகின்றது... சரயு... இந்த அருவியில் எத்தனையோ பேர் குளிக்கிறார்கள்... கால் நனைக்கிறார்கள்... பார்த்து ரசிக்கிறார்கள்... அவர்களுக்கெல்லாம் இல்லாத சொந்தம் உனக்கு மட்டும் எப்படி வந்தது..."

"நான் இதை நேசிக்கிறேன்..."

"ம்ம்... அதைத்தான் நானும் சொல்கிறேன்... மற்றவர்களுக்கு இது வெறும் அருவி... உனக்கோ தோழி... இதன் மேலிருக்கும் தோழமையைக் காரணம் காட்டி... நீ அருவியை 'கொட்டாதே'ன்னு சொல்லி... அதுவும் உனக்காக நீர் வற்றிக் காய்ந்து போய் விட்டால் எப்படியிருக்கும்...?"

"ஐயோ..."

"உன்னால் கேட்கவே தாள முடியவில்லை... இல்லையா...? இதைத்தானே இந்திரஜித்தின் விசயத்தில் நீ செய்திருக்கிறாய்..."

**மா**லதி வந்த சுவடு தெரியாமல் திரும்பிப் போய்விட்டாள்... தன்னிடம் செய்து கொடுத்த சத்தியத்திற்காக தம்பி சோதனையைச் சந்தித்துக் கொண்டிருக்கும்போது... அந்த சத்திய சோதனையை சரிசெய்ய முடியாவிட்டால்... அவள்தான் என்ன அக்கா...?

அதனால் கணவனை எதிர்த்தாள்... தனித்துக் கிளம்பினாள்... சரயுவிடம் பேசி அவளது சிந்தனையைத் தூண்டிவிட்டுப் போய் விட்டாள்... சரயு... வெகுநேரம் அருவிக்கரையில் தனியாக அமர்ந்திருந்தாள்... கொட்டுகின்ற அருவியைப் பார்த்துக்

கொண்டிருந்தவளின் கண்களில்... ஒரு கணம் அருவி மறைந்து... வெறும் பாறை தென்பட... அவள் உடலும்... மனமும் அதிர்ந்தது...

'இதைத்தான் நீ இந்திரஜித்திற்கு செய்திருக்கிறாய்...' மாலதியின் குரல் காதுகளில் ஒலித்தது...

**ச**ரயு தெளிந்த மனதோடு... தன் கையிலிருந்த செல்போனை உயிர்ப்பித்தாள்... இந்திரஜித்தை அழைத்தாள்...

"சரயு..." மறுமுனையில் அவன் காதலாய் அழைப்பது கேட்டது...

'உனக்கு இவ்வளவு பெரிய கொடுமையை செய்திருக்கிறேன்... இருந்தும் என்மேல் உனக்கு இவ்வளவு காதலா...' சரயுவின் நெஞ்சம் நெகிழ்ந்தது...

"இந்தர்... எனக்கு ஒன்று வேண்டும்... தருவீங்களா...?"

"சொல்... எதுவாக இருந்தாலும் தருகிறேன்..."

மீண்டும் அவன் தன் காதலை நிரூபித்தான்... சரயு கண்களில் நீர் கசிந்தாள்...

"என் பழைய இந்திரஜித்தை எனக்குத் திருப்பித் தருவீங்களா...? நான் நேசித்த... ரசித்த... படைப்பாளியான இயக்குநர் இந்திரஜித் எனக்கு வேண்டும்... அவரின் அத்தனை அடையாளங்களில் ஒன்றுகூடக் குறையாமல் அவரை எனக்குத் தருவீங்களா...?"

"சரயு..."

இந்திரஜித்தின் குரலில் தொனித்த நன்றியையும்... புத்துணர்வையும்... உயிர்ப்பையும் உணர்ந்த சரயு... தன் காதலை நிரூபித்து விட்டவளாய் திருப்தியுடன் கண்மூடிக் கொண்டாள்...

**ம**றுநாள் பத்திரிக்கைகளின் தலைப்புச் செய்தியும்... சின்னத் திரைகளின் சிறப்புச் செய்தியும்... இந்திரஜித் திரையுலகிற்கு திரும்பி விட்டதை அறிவித்தன...

உலகம் வியக்கும் இயக்குநரான இந்திரஜித்தை... அவனுடைய அனைத்து அடையாளங்களுடன் திருமணம் செய்து கொண்டாள் சரயு...

**சுபம்.**


| | |
|---|---|
| Kudumba Novel: Special Edition - 4 | Owner, Publisher and Printer G. Asokan Published at 352, Triplicane High Road, Triplicane, Chennai - 600 005. Printed at Geeye Publications (PRINTERS) 352, Triplicane High Road, Triplicane, Chennai - 600 005. Editor: G.Asokan |



குடும்ப நாவல் சிறப்பு வெளியீடு-5

# முத்துலட்சுமி ராகவன்

# வானம் வசப்படும்

குடும்ப நாவல் சிறப்பு வெளியீடு-5

KUDUMBA NOVEL - SECIAL EDITION - 4 Registered with the Registrar of News Paper India No: 53775/92
REGD No: TN/CH©/159/09-11 LICENCED TO POST WITHOUT PRE-PAYMENT - W.P.P. 230/2009 - 11